ஆத்மஜோதி வெளியீடு

மகாகவி தாகூரின்

# தீங்கனிச் சோலை

# (FRUIT GATHERING)


கவிதை ஆக்கம்

பரமஹம்ஸதாசன்



கவிஞர் செ. சுந்தரம்பிள்ளை
அல்வாய் வடக்கு
அல்வாய் (இலங்கை)



ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி,
இலங்கை.

முதற் பதிப்பு: 1963 ஏப்ரில்

உரிமை ஆசிரியர்க்கே

விலை. ரூ. 2.50

---

ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி. (இலங்கை)

# அர்ப்பணம்

எழில் மின்னல் துடிநடையில் அரியதமிழ்த்
தாகூர்ச்சித் திரமாய் ஈந்த
நலமிகுதம் கனிகொய்தல் மூலம்எனை
கவர்ந்து, இதனை நற்ருய்க் கன்பாய்ப்
பழகுதமிழ்ச் சிறியேன், இக் கவியுருவில்
படைக்கத்தூண் டுதலாய் வாய்ந்த
ஒளிமிகுநல் வி.ஆர்.எம். செட்டியார்
அவர்கட்கு, உவந்துஅர்ப் பித்தேன்.

— பரமஹம்ஸ தாசன்.

# பதிப்புரை

அன்பர் பரமஹம்சதாசனுர் அவர்களுடன் கொண்ட அன்புத் தொடர்பினுல் அவர்களுடைய சில நூல்களைப் பதிப்பிக்கும் வாய்ப்பு எங்களுக்குக் கிடைத்தது. சிலர் கவி எழுதவேண்டும், பத்திரிகைகளிலே பிரசுரமாக வேண்டும் என்ற ஆசையினுலே கவிகள் எழுதுகின்றுர்கள். கவிஞர் அவர்கள் உணர்ச்சி மிகுந்தவர்கள். அவர்கள் கவி எழுதாது இருக்க முடியாமையினுலே கவி எழுதுகின்றுர்கள்.

கவிஞர் அவர்கள் ரவீந்திரரின் பல நூல்களை ஆழ்ந்து படித்தவர்கள். ஆழ்கடலில் ஆழ்ந்து பல முத்துக்களை வாரிக் கொண்டு வந்தவர்கள். அவற்றை ஒரு மாலையாக்கிப் பார்க்க விரும்பினுர்கள். அம் மாலையே தீங்கனிச் சோலையாக உருவெடுத்தது. கவிஞர் அவர்களுடைய பாடல்களைப் பதிப்பிப்பதே தனி ஒரு சிறப்பு என்பது எமது நீண்ட கால எண்ணம். கவிஞர் அவர்களுடைய பாடல்கள் மேலும் மேலும் பல நூல்களாக வரவேண்டும் என்பதே எமது பேரவா. எல்லாம் வல்ல முருகப்பெருமான் எமது ஆசையை நிறைவேற்றி வைப்பதோடு கவிஞர் அவர்களுக்கும் நீண்ட ஆயுளையும் திடகாத்திரத்தையும் அளிக்குமாறு பிரார்த்திக்கின்றேம்.

ஆத்மஜோதிப் பதிப்பகத்தார்
நாவலப்பிட்டி.

# ஆசியுரை

உலகம் போற்றும் மகாகவி ரவீந்திர நாத தாகூரை அறியாதார் யார்? அவர் அள்ளிச் சொரிந்த ஆத்மீகக் கருத்துகள் நிறைந்த கவிகள் மிகப் பல. அவற்றைப் பல்வேறு மொழிகளிலும் படித்துப் பயன் பெறுவோர் பலர். அவைகளுள் 'Fruit Gathering' என்னும் நூலை, — தீங்கனிச் சோலையாக்கித் தித்திக்கும் தமிழிலே எடுத்துரைக் கும் அருட்பணிக்குக் கருவியாகத் தக்க ஒருவரைத் தெரிந்தெடுத்தார் இறைவன். அவர்தான் கவிஞு ருலகம் போற்றும் நம் ஸ்ரீ பரமஹம்ச தாசன் அவர்கள். அன்னுர் அல்லும் பகலும் தெய்வீக நாட்டங் கொண்டு பரம்பொருளுக்குத் தாசனுகி வாழுகின்ருர். அவரின் பக்தியுள்ளத்தில் உருவா கும் கவிதைகள் சிறந்தவை. தீங்கனிச்சோலையுட் சென்ருலோ, பக்தி பெருகுகின்றது. சுயநலம் மறைந்து பரநலம் தோன்றுகின்றது; அச்சம் அகன் ருேடுகின்றது; வீரம் பிறக்கின்றது. இயற்கையின் அழகு இதயத்தைக் கவர்ந்து நல்லுபதேசம் செய் கின்றது. அனுபவித்த கருத்துகளில் இரு உதார ணம்: பணிப் பெண்ணின் பக்திதான் என்னே! புத்த பெருமானைப் பூசிப்பவருக்கு மரணம் என்று ஆணையிட்டான் அரசன்; இறைவன் அடியார்க்கு வேந்தனும் துரும்பாம். அச்சமற்ற பணிப்பெண் ஆலயஞ் சென்ருள். புத்த பகவான் திருப்பாதம் போற்றிஞள். அடுத்தகணம் காவலரின் வாள் ஆவி யைப் பிரித்தது. அழிந்தது உடல்தான்; ஆத்மா சாந்தியடைந்து பேரின்பநிலை யெய்திற்று. ஏழை யொருத்தியின் துணிவு எமக்கெல்லாம் துணிவு தரு கிறது. சிராவஸ்தி நாட்டுப் பஞ்சத்தைப் போக்க வழியறியாது பெருஞ்செல்வர்கள் திகைத்தனர். ஏழைப் பெண் சுப்பிரியா 'அனைவர்க்கும் உணவ ளிப்பேன் யான்'' என்ருள். என்ன துணிச்சல்! ஆம், உண்மையுள்ளம் படைத்த ஏழைக்கு எங் கெங்கு பொருளுண்டோ அங்கெல்லாம் உரிமை

யுண்டல்லவா? செல்வர் இல்லந்தோறும் கூசாது சென்றிரந்து பசிப்பிணி போக்க முடியும் என்றாள் அப்பெண். இவ்விதம் அழகிய பொருள் பொதிந்த தாகூரின் கருத்துகளை, தீங்கனிச் சோலையிற் காண லாம்.

தீங்கனிச் சோலையின் கவிகள் தனிச் சிறப்பு டன் மிளிர்கின்றன. அதிற் தமிழினிமை நறுமண மும், தேன்சுவையும் அழைந்துவரும் தென்றலெ னத் தவழ்கின்றது. செய்யுளின் சந்தம் சுவைக் கேற்பத் தனிநடை போடுகின்றது. இறைவனின் கோபத்தைக் கொஞ்சம் அனுபவியுங்கள்.

இடியட்டும் மடமடென விண்ணும் மண்ணும்
எழும்பட்டும் கொடும்புயல்தம் உளம் வெடித்துப்
பொடி யெட்டுத் திசையெட்டச் சிதறு மட்டும்
புலம்பட்டும் கொடியவர்கள் அகந்தை செத்து
மடியட்டும் தனிவரட்டுப் பெருமை யோடு
மகிழட்டும் அறச்செல்வி மௌனத் தோடு
முடியைத் தாள் தனிலிட்டு வணங்கி விட்டு
முன்செலுத்து தோணியைநீ முற்றும் நன்றே!

பார்த்தீர்களா? பாட்டின் மிடுக்கை! கண் முன்னே கோபக்கனல் தெறிக்கிறதல்லவா! உதய கானம் இசைப்பதைக் கொஞ்சம் கேளுங்கள்; உறங் கும் மனிதா! 'விழித்தெழுவாய்' என்று அழைத்து

'ஆவி உருகும்படி இனிதாய்
அதிகாலையில் கவி பாடும்
தேவகானப் புள்ளுடன் நீ
சேர்ந்தே அமுதப் பாட்டிசைப்பாய்' என்றிசைக்கிறது

இவ்விதமே தீங்கனிச் சோலையிற் திகழும் கனி கள் அனைத்துமே இனிக்கும். அவற்றை அன்பர் கள் சுவைத்து அனுபவிப்பார்களாக. சோலையை வளர்த்த ஆசிரியர்க்கு ஆற்றலும், ஆர்வமும் மேன் மேலும் நிறைவதாக! இன்னும் பல நறுஞ்சோலை களை ஆக்கி அருட்பணியியற்றத் திருவருள் துணை நிற்குமாக! ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

ஸ்வாமி சச்சிதானந்த யோகிராஜ்.

# உ ள் ள ட க் க ம்


| | பக்கம் |
|---|---|
| அர்ப்பணம் | 1 |
| பதிப்புரை | 2 |
| ஆசியுரை | 3 |
| உள்ளடக்கம் | 5 |
| முன்னுரை | 8 |
| அணிந்துரை | 16 |
| சிற்றுரை | 20 |
| கவீந்திரர் அஞ்சலி! | 23 |

| எண் | | |
|---|---|---|
| 1. | அழைப்பு! | 25 |
| 2. | மலரும் கனியும்! | 26 |
| 3. | அவன் கருணை! | 27 |
| 4. | தலைவனின் திருமுகம்! | 28 |
| 5. | தவித்திடுவேன்! | 29 |
| 6. | வழி காணேன்! | 30 |
| 7. | வழிப்போக்கன்! | 31 |
| 8. | புறப்படு! | 32 |
| 9. | உதறிச் செல்கிறேன்! | 33 |
| 10. | தரிசிக்கப் பெற்றேன்! | 34 |
| 11. | பொன்மாலை | 36 |
| 12. | உவக்காத பரிசு! | 37 |
| 13. | பயத்தைக் கண்டறியான்! | 38 |
| 14. | சூக்குமம் அறிவேன்! | 39 |
| 15. | கீதக் குயில்கள்! | 40 |
| 16. | உய்ய வைத்தாய்! | 41 |
| 17. | மண் விளக்கு | 42 |
| 18. | அற்புதம்! | 43 |
| 19. | மலர் வணக்கம்! | 44 |
| 20. | இரவுப் பேரரசி! | 45 |
| 21. | அடைதல் திண்ணம்! | 47 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 22. | குழலைத் தருக! | 48 |
| 23. | கவிஞன் | 49 |
| 24. | நாதம் பொழிக! | 50 |
| 25. | உதய கானம்! | 51 |
| 26. | ஆசைக் குரல் | 52 |
| 27. | அழியாச் செல்வம்! | 53 |
| 28. | ஆசைத்தீ அணைப்பாய்! | 54 |
| 29. | விளையாட்டு மோகம்! | 55 |
| 30. | நின் கருணை | 56 |
| 31. | ஏழையின் துணிவு! | 57 |
| 32. | விடா மன்னன்! | 59 |
| 33. | நானும் நீயும்! | 60 |
| 34. | இறைவன் கோவில்? | 61 |
| 35. | வெற்றி முழக்குக! | 63 |
| 36. | சௌந்தரிய சக்தி! | 67 |
| 37. | காலம் வந்தது! | 70 |
| 38. | புரட்சிக் காதல்! | 73 |
| 39. | வெற்றி ஒளி! | 74 |
| 40. | சுந்தர நெருப்பே! | 75 |
| 41. | படகோட்டி | 77 |
| 42. | பொன்னடி காண்பாய்! | 81 |
| 43. | பணிப் பெண்ணின் பக்தி! | 83 |
| 44. | பிரிவகற்றும் இரவு! | 89 |
| 45. | வேதனைக் காதல்! | 90 |
| 46. | காதற் கடன்! | 91 |
| 47. | நினைவுச் சின்னம்! | 9[illegible] |
| 48. | மாட்சி குன்றுதே! | [illegible] |
| 49. | இதய தாபம்! | 95 |
| 50. | உணர்ந்து உருகுவேன்! | 96 |
| 51. | இறுதிப் பிரார்த்தனை! | 97 |
| 52. | அருளிசை யமுதம்! | 99 |
| 53. | புவிக் காதல்! | 101 |
| 54. | இறுதித் துணை! | 102 |

| எண் | | பக்கம் |
|---|---|---|
| 55. | பூமான் புகுந்த இடம்! | 103 |
| 56. | சக்தியின் சாகசம்! | 106 |
| 57. | இன்பம் எங்கே? | 107 |
| 58. | அங்கெல்லாம் நிற்கின்றாய்! | 110 |
| 59. | அமரானந்தம்! | 112 |
| 60. | மொட்டுச் சிறைக்குள்! | 114 |
| 61. | அவளோர் குழந்தை! | 116 |
| 62. | பனித்துளியும் கதிரவனும் | 118 |
| 63. | குளிர்ந்த காதல்! | 119 |
| 64. | ஞானச் செல்வன்! | 120 |
| 65. | விந்தை! | 123 |
| 66. | குழலிசை! | 124 |
| 67. | விழைகின்றேன்! | 125 |
| 68. | கதவு திறந்தது! | 126 |
| 69. | மறந்தேன் உன்னை! | 127 |
| 70. | தயங்கி நிற்கிறேன்! | 128 |
| 71. | வாழி அலைகள்! | 129 |
| 72. | மணப்பெண்! | 130 |
| 73. | யார் சுவைப்பார்? | 131 |
| 74. | கட்டறுந்தது! | 133 |
| 75. | மண்ணுக்கு வந்தேன்! | 134 |
| 76. | அன்றும் இன்றும்! | 135 |
| 77. | பூங்கருணை! | 136 |
| 78. | விடுவதேன்? | 137 |
| 79. | எனது பிரார்த்தனை! | 139 |
| 80. | உனது அன்பு! | 140 |
| 81. | காதல் மலர்! | 142 |
| 82. | நாமம் ஓதுவேன்! | 143 |
| 83. | உண்மை உணர்கிறேன்! | 144 |
| 84. | இறைவனின் கோபம்! | 147 |
| 85. | தோல்விப் பெண்! | 151 |
| 86. | அருள் புரிக! | 153 |
| | முடிவுரை | 155 |
| | Critical Appreciation | 159 |

# முன்னுரை

இறைவன் அருளால் இவ்வுலகம் சிருஷ்டிக் கப்பட்டு, மனிதன் மனச்சாட்சியுடன் இயற்கை நியதியைப் பின்பற்றி வாழவேண்டும் என்று ஆண்டவன் ஆணையிட்டிருக்கிறான்.

ஆனால் இன்றைய உலகமோ கலகத்தின் எல்லையில் கூத்தாடிக் கொண்டிருக்கிறது; ஏழையும் பணக்காரனும், கூலியும் முதலாளியும், பண்ட விலை ஏற்றமும் திடீர் வீழ்ச்சியும் நாணயக் குறைவும், கற்பின் சஞ்சலமும், குறைந்த ஆயுளும், சட்டப் புரட்சியும், வெடிகுண்டு பாம்களும், வறுமையும் பஞ்சமும், பேராசையும் பொய்யும், எங்கு பார்த்தாலும், நம் கண்முன் தலை விரித்தாடும் நிலையைக் கண்டு நாம் சலிப்படைகிறோம் அல்லவா?

நாம்நல்லசெயலைச்செய்தால்,உலகம்ஜீவகளையுடன் முன்னேறும்; எல்லோரும் நம்மை வாழ்த்துவார்கள்; இறைவனும் நம்மை இரட்சிப்பார். கோபங் கொண்டு, பாபத்தில் இறங்கி, கலகமோகங் கொண்டிருந்தால், கடவுள் நம்மைக் கண்டிப்பார். இறுதியில் தண்டிப்பார். அஹிம்சையால், உலகம் தூய்மையடைந்து, வளர்ந்து, பொலிவுற்று விளங்கும். ஹிம்சையால், உலகம் பொடியாகும்; கலங்கிய ஆன்மா, சாக்கடையில் இறங்கி விடும். பேராசை பெருநஷ்டம் என்ற நிலையில், நமது இருண்ட ஆன்மா மங்கி மடிந்து விடும்.

ஆகவே, தாகூர், உலகம் ஆன்ம ஒளி பெற்று அன்புடன் முன்னேறவே, ''தீங்கனிச்சோலை'' என்ற பாடல்களைப் பாடியிருக்கிறார். அவருடைய பாடல்களில் உவமை நயமும் உண்மையின் தூய ஒளியும் எங்கும் சுடர் வீசிக்கொண்டிருப்பதையே, நாம் கண்டு களிக்கிறோம்.

நான் ஆங்கிலமூலத்திலிருந்து, தமிழில் வசனமாகமொழி பெயர்த்தேன்; இதைத் தழுவியே எனது நண்பர் கவிஞர் பரமஹம்சதாசன் அவர்கள், அருமையான பாடல்களை, நயமான கவிதை எழிலோடு பாடியிருக்கிறார்கள்; மிக எளிய நடையிலே, தாகூரின் கருத்தாழத்தையும் கவிதை ஒளியையும், இசை நயத்தோடு சித்திரித்திருக்கிறார்கள். படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் தரும் பாடல்கள்தான், 'தீங்கனிச்சோலை'; எல்லோரும் படித்து இன்புறும் நிலையில், அமைந்திருக்கிறது இந்தக் கவிதைத் தொகுதி. 86 பாடல்களும் அருமையான பாடல்கள்: குறிப்பாக பாடல்கள் 1, 2, 3, 33, 34, 35, 36, 55, 56, 57, 79, 84, 86 அருமையாக மாபெரும் உண்மைகளைத் தெளிவாக எடுத்துரைக்கின்றன;

உள்ளத் தூய்மைக்கு உறுதியளிக்கும் ஆனந்த வடிவத்தில், சுழல்கின்றன இவ்வினிய பாடல்கள்; சின்னஞ்சிறு சொற்கள், இறைவனுக்கு இனிய மணமுள்ள மாலைகட்டிப் பாடிப் பூசை செய்கின்றன; பாட்டின் ஆழத்தினின்று, ஆனந்தம் பொங்கி வழிகிறது; படிக்கும்போதே, நாம் இதய பூர்வமாகப் பரவசமடைகிறோம், அல்லவா?

தாகூரின் 'கீதாஞ்சலி' யைப் போலவே, அதன் தொடர்ச்சியாக, இந்தத் தீங்கனிச்சோலை மலர்ந்து மணம்வீசுகிறது; கனிகள், ஆன்மக் கனிகள் இனிமையை வாரி இறைக்கின்றன.

8வது பாடல் ''புறப்படு'' எவ்வளவு அருமை யாக அமைந்திருக்கிறது, பாருங்கள்;

''புறப்படு மனமே - காலம்
போக்கினுய், தினமே!
விருப்ப மிக்கவர்கள் - தாமதம்
விளைப்பரோ கணமே?

வருபவர் வரட்டும் - அவர்க்காய்
வழியில் நிற்காதே;
அரிய தருணத்தை வீணே
அவல மாக்குவதோ?

அருணன் உதயத்தில் - உன்பெயர்
அழைக்கப் பட்டதன்ருே?
விரைந்து சென்ருலே - முதலிடம்
விழைந்து பெற்றிடலாம்.

அரும்பின் ஆசையெல்லாம் - பனிஇர
வதனைத் தேடுவதே; மலர்
விரும்புதல் சுதந்த்ர - ஒளியை
விரைந்து கூடுவதே!''

மலரில் தேனீ அமர்ந்து தேனைத் திரட்டுவது போல, கவிஞன் தன் கவிதை மலரிலிருந்து தத்துவத் தேனைத் திரட்டுகிருன்; தத்துவம் தாமரை மலராகவே மலர்ந்து, ஆனந்தகரமான காட்சியைத் தருகிறது. இசை நிறைந்த கவிதைக் கோலத்தில், இறைவன் காட்சியளிக்கும் போது, உலகமே புதிய சோபையோடு உதயமாகிறது. சிந்தனைகள், மின்னலோவியங்களாகச் சுழல்கின்றன. உண்மைகள், பேருண்மைகள், இதயக் கமலத்தில் நர்த்தனம் செய்கின்றன, ஆனந்த வெறியோடு!

# The Kingdom of God

"O world invisible, we view thee,
O world intangible, we touch thee,
O world unknowable, we know thee,
Inapprehensible, we cluch thee!

*- Francis Thompson*

ஆன்மீகத் துறையிலே, அருளாவேசத்தோடு, இறைமயம் நிறைந்த இறைவன் உலகம் எப்படி இருக்கிறது, என்று ஆங்கிலக் கவிஞன் பிரான்ஸிஸ் தாம்ப்சன் மேலே கண்ட பாட்டில் பாடியிருக்கிறான். ஐம்புலன்களாலும் அறிய முடியாத இறைவனின் ஆன்ம உலகம், பக்தனுக்கு நன்ருய்த் தெரிகிறது, என்று உறுதி கூறுகிருன், கவிஞன்.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேராதார்'' - குறள்

குறளாசிரியரும், தாம்ப்சனும் இவ்வாறு விண்ணுலகிலே இறைவனின் மாட்சியையும் பக்தனின் ஆன்மஇலட்சியத்தையும் வற்புறுத்தியிருக்கிருர்கள்.

''Hound Of Heaven'' பாடலில் இறைவனை மறந்த பக்தனையே, இறைவன் நெருங்கிவந்து அவனை வாழ்த்தி, தனது திருக்கரத்தைக் காட்டிவிட்டு மறைகின்ற அற்புத நிகழ்ச்சியைக் காண்கிறோம். தாகூரும், தீங்கனிச்சோலையில், இறைவனின் அரிய அபூர்வ தரிசனத்தையே படம் படமாகத் தீட்டிக் காட்டுகிருர்.

கடவுளை மறந்த மனிதன், சொந்த இன்பத்தில் இறங்கி, இறுமாப்போடு, உலக ஜீவராசிகளையும் மனித வர்க்கத்தின் சுதந்திர வாழ்க்கையை

யும் தடையாக நின்று தகர்த்து விட்டு, பின்னுல் வருந்தி வருந்தி, ஏங்கி நிற்கும் நிலையை, அருமை யாகவே தாகூரின் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

இறைவனையே மறந்து பகைத்துக் கொண்டு நிற்பவன், மனிதஇனத்துக்கே பெருந்துரோகியாவான்,என்று எங்(Young) என்ற கவிஞன் பேசுகிருன்; இப்படிப்பட்ட துரோகிகள், விரைவில் சுடலைக்குச் செல்வது நலம்; எமனுடைய சுருக்கில் சிக்கிக் கொண்டு மடிவதே நலம். நீண்ட ஆயுள் கொண்ட பாபிகள், உலகத்தையே சுட்டுப் பொசுக்கி விடுவார்கள் அல்லவா? கடவுளே, இப்பாபிகளைக் கசக்கிப் பிழிய வேண்டும்!

'தீங்கனிச் சோலை'யில் 59 வது பாடல்,

அமரானந்தம்

"கங்குற் பொழுதில் வெளியினில்,உன்
கரத்தை நீட்டிக் காட்டுக.நான்
பொங்கும் மகிழ்வோ டதைப்பற்றிப்
பூரித்திடுவேன்! அளவின்றி
எங்கோ நீண்டு குறுகிச்சென்
றிடுமென் தனிமை வாழ்வினில்,உன்
தங்கக் கரத்தின் ஸ்பரிசசுகம்
தந்தால், அமரா னந்தமதே!"

இது ஒரு நிகரற்ற ஆனந்தமல்லவா? ஆன்ம எழுச்சியில் உதயமாகும் ஆன்ம ஜோதியான இறை வன் ஆசியைப் பெறுவதும் ஒரு விந்தையன்றோ?

68வது பாடல் ("கதவு திறந்தது") — இது வும் அருமையான இறைவிளக்கப் பாடல்தான், அருள் நிறைந்த பெருஞ்ஜோதி, பக்தியின் வாயி லாகப் புலனுகிறது; சின்னஞ்சிறு கவிதை மணிகள், இறைவனை அலங்கரிக்கின்றன; இறைவன், கவி தைக் கோயிலில், கொலு வீற்றிருக்கிருன்; இதய இரகசியங்கள், ஆன்ம ஒளி பெற்று மின்னலிடுகின் றன. ஆனந்தக் களிப்பில் இறைவனே சிரிக்கின்ருன். ஆஹா! இன்ப வெள்ளம் கரைபுரண்டோடுகிறது!

பாரதியாரின் ''நந்தலாலா'' எவ்வளவு அருமையாக அமைந்திருக்கிறது.

''தீக்குள் விரலைவைத்தால்
நந்தலாலா! நின்னைத்
தீண்டு மின்பந் தோன்றுதடா
நந்தலாலா!''

பாரதியாரின் 'ஊழிக்கூத்து' விதியின் விபரீதப் போக்கை, எப்படி யெல்லாம் சுடர் நடையில் காட்டுகிறது:

''ஐந்துறு பூதம்
சிந்திப் போயொன்றாகப் - பின்னர்
அதுவும் சக்திக்
கதியில் மூழ்கிப் போக - அங்கே
முந்துறும் ஒளியாற்
சிந்தை நழுவும் வேகத் - தோடே
முடியா நடனம்
புரிவாய், சுருதிசொரிவாய்!

காலத் தொடுநிர்
மூலம் படுமூவுலகும் - அங்கே
கடவுள் மோனத்
தொளியே தனியா யிலகும் - சிவன்
கோலங் கண்டுன்
கனல் செய் சினமும் விலகும் - கையைக்
கொஞ்சித் தொடுவாய்
ஆனந்தக் கூத்திடுவாய்!

அன்னை! அன்னை!
ஆடும் கூத்தை
நாடச் செய்தாய் என்னை.''

பாரதியாரின் ''கண்ணன் திருவடி'' பாடலைப் பாருங்கள்.

'கண்ணன் திருவடி
எண்ணுக மனமே

திண்ணம் அழியா
வண்ணந் தருமே

இங்கே அமரர்
சங்கம் தோன்றும்
மங்கும் தீமை
பொங்கும் நலமே

நலமே நாடிற்
புலவீர் பாடீர்;
நிலமா மகளின்
தலைவன் புகழே''

தாகூர் ஓரிடத்தில் பாடுகிறார்.

''இறைவனது வலதுகை சாந்தம்; இடதுகை கொடிது'.

இப்படி இருக்க, இறைவனை ஏமாற்றமுடியுமா? உணர்ச்சியற்ற வரண்ட உள்ளம் படைத்த பாபிகள், இறைவனையே மறந்து, உலகை அழிக்க முன் வருகிறார்களே - இவர்கள் உருப்படி யாவார்களா? இதயத்தைக் கல்லாக்கிக் கொண்டு, இறுமாப்பின் உச்சியில் நின்றுகொண்டு, பல கோடி ஜீவராசிகளை யும் சிதைக்கத் துடியாய்த் துடிக்கிறார்களே, இது சரியா? இறைவன் இதைக்கண்டு சினங்கொண்டால், சிதறிப் பொடியாய்ப் போவார்களே இந்தக் கொடிய பாபிகள்.

அன்பையும் கருணையையும் பற்றி, மகாகவி ஷேக்ஸ்பியர் தன் நாடகம் ஒன்றில் வற்புறுத்திப் பேசுகிறார்; உலகை உய்விக்க வரும் அன்பே சிறந்தது என்றும், மழைபோலக்கொட்டிக்கொண்டிருக்குமென்றும், அன்பாலேதான் அரசன் கிரீடம்தாங்கி உலகை ஆளமுடியும் என்றும், கருணையின் அகண்ட சக்தியை யாவரும் போற்றி வளர்க்க வேண்டுமென்றும் பாடியிருக்கிறார்.

இறைவனின் சிருஷ்டி சௌந்தர்யத்தை, மனிதன் அன்பால், அநுபவித்துப் போற்றி வளர்க்க வேண்டும். சிற்றுயிர்களைச் சிதைப்பதும் பெரிதல்லவே? இதைச் செய்யும் கொடிய வெறியர்களை மன்னித்து அருள் புரிக என்று தீங்கனிச் சோலை 86வது பாடல் மூலம் பிரார்த்திக்கிறார் தாகூர்.

''நடக்கும் பொழுதே, சிற்றுயிர்கள்
நசுங்கப் பச்சைப் பசும்பயிர்கள்
துடிக்க, இரத்த வெறியாலே
துடுக்காய் மிதித்துச் செல்பவர்கள்,
வெடுக்கென் றடித்துப் பிறர்பொருளை
விழுங்கும் கொடிய வெறியரிவர்
படிக்கும் நன்றிக் கடனுனக்கே
படைத்தி டட்டும் பரம்பொருளே!

இறைவன் வைத்துள்ள இன்பத்தைப் பற்றி இதோ பாரதியார் பாடுகிறார்.

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் - எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!

முத்தியென் றொருநிலை சமைத்தாய் - அங்கு
முழுதினையு முணரும் உணர் வமைத்தாய்
பக்தியென் றொருநிலை வகுத்தாய் - எங்கள்
பரமா! பரமா! பரமா!

தாகூரின் 'தீங்கனிச்சோலை'யில் மற்றும் ஒரு பாட்டு:

''எனது வாழ்வெனும் இன்னிசை வீணையில்
உனதி தயத் துணர்ச்சி புரண்டிட
இனிய கீதம் இயற்றுவிண் மீனெனப்
புனித நல்லிசை வெள்ளம் பொழிவாய்''

நமது கவிஞர் பரமஹம்ஸ தாசனின் பாடல்கள் செவிநுகர் கனிகளாகவே, தித்திக்கின்றன. ஆம்!

காரைக்குடி,
8-11-62.

V. R. M. செட்டியார். B. A.

# அணிந்துரை

தாமரையின் செவ்விதழ்களை மலரச் செய்யும் கதிரவனே, ஒருகணம் பனித்துளியையும் ஒளிமயமாக்கி அழகின் பிம்பமாக அதனைஉருப்பெறச்செய்கிறான். 'ஒரே சக்தியேஇவ்வுலகெங்கணும் ஊடுருவி, அனைத்தையும் எழில் மயமாக்கிப் பன்மையின் ஊடே ஒருமையாய்த் திகழ்கின்றது'' என்பது மறைமொழி. இவ்வாறே, கவிஞனும் தனது கற்பனை சக்தியைப் பாட்டாகவோ, பேச்சாகவோ, கட்டுரையாகவோ, கவிதையாகவோ வடித்து மகிழ்கிறான். இவ்வாறான இலக்கியத்துறைகள் பலவற்றிலும் ஒளிபெற்று விளங்கும் மேதைகள் உலகில் மிகச் சிலரே. அவருள் மகாகவி இரவீந்திர நாத தாகூர் ஈடிணையற்ற சிறப்போடு திகழ்கிறார்.

பாரத நாட்டுப் பண்பாடனைத்தின் பிரதிநிதியாகக் கனிந்து தோன்றிய பெருங்கவிஞரான தாகூரின் கவிதைகளிலே, இயற்கையின் எழில் நடனம் முக்கிய அம்சமாக விளங்கக் காண்கிறோம். எந்தப் பழம் பொருள், ஒன்றிலும் பற்றில்லாமல், இயற்கைப் பொருட்கள் எல்லாவற்றிற்கும் பல்வகை நிறம் கொடுத்து நிற்கின்றதோ, அதனையே நமது மகாகவி தமது கவிதைகள் மூலம் தேடுகின்றார். இயற்கை - நிகழ்ச்சிகளின் பின்நிற்கும் ஆன்ம சக்தியினைத் தேடுதலையே அவரது கவிதைகள் யாவற்றிலும் பரக்கக் காணலாம்.

இந்நூலாசிரியர் புனைந்த அழகிய தலைப்புப்படி ''தீங்கனிச்சோலை''யாகிய (கனிகொய்தல்) இந்நூலில் தாகூரின் அன்புள்ளம் பொங்குகிறது.

புத்தர் காலத்தில் ஒரு பஞ்சம் வந்ததாம், ஏழைகட்கு உணவளிக்க முன்வருபவர் யார்? என்று புத்தரின் சீடர் கேட்டாராம். பணக்காரர்களெல்லாம், தமக்குள்ள இன்னல்களையும் பொருள் பற்றுக் குறையையும் கூறி ஒதுங்கிக் கொண்டார்களாம். ஆனால், ஒரு ஏழைப் பிச்சைக்காரப் பெண்மட்டும் தைரியமாக முன்வந்து,

''அனைவர்க்கும் நல்வணக்கம் செலுத்தி விட்டு,
அமைதியுடன் கருணைபொங்க, 'பசியால் வாடும்
அனைவர்க்கும் உணவளிப்பேன் யானே!'' என்றாள்.
அங்குற்றோர் எல்லோரும் அதிச யித்து,
''உனக்கெவ்வா றிச்சபதம் முடித்தல் ஆகும்?
உரை''என்ன, உடனே,''இங் குறைந்தி ருக்கும்
அனைவரிலும் யானேதான் பரம ஏழை;
அதனாலே ஆற்றலெனக் கதிக முண்டு!

இங்குள்ளோர் பணமெல்லாம் எனக்குச் சொந்தம்;
ஏழை,இவர் பிள்ளை;எனக் கிலையென் பாரோ?
எங்கெங்கு பொருளுண்டோ, அங்கங் கெல்லாம்
எனக்குரிமை யுண்டு; செல்வர் இல்லந் தோறும்
சங்கோஜ மின்றிச்சென் றிரப்பேன்; சற்றும்
தளர்ச்சியுறேன்; உதைத்திடினும், தாள் பிடித்தே
அங்கவர்தம் மனமுருக்கிப் பொருள் திரட்டி,
அரும்பசியைத் தீர்த்தெளியோர்க் கன்பு செய்வேன்!''

என்றாளாம். இந் நிகழ்ச்சியை இத் தீங்கனிச்சோலை 31ம் பாடலின் மூலம் அருமையாக எடுத்துக் கூறி, ஏழையின் இதயத்தில் வாழும் தூய அன்பு வடிவான பரம்பொருளை நமக்குக் காட்டுகின்றார் கவிஞர். இதுவே மகாகவி தாகூரின் உள்ளம். இந்த உள்ளத்தின் ஒளிமிக்க வெளிப்பாடுதான் அவரது இத்தீங்கனிச்சோலை!

தீங்குகளைக் கண்டு வெம்பும் செக சிற்பியாரின் இதயத் துடிப்பு, மில்டனின் உள்ளக் கிளர்ச்சி, வேட்ஸ்வொர்த்தின் பளிங்கு நெஞ்சம், கீட்சின் தெளிவு, ஷெல்லியின் சுதந்திரதாகம், வள்ளுவரின் அறப்பண்பு, கம்பனின் காவியச்சுவை, பாரதியின் விடுதலை உணர்ச்சி, இளங்கோவின் இனியசமரசபாவம் ஆகியவற்றையெல்லாம் மகாகவி தாகூரின் கவிதைவெள்ளத்தில்ஒருங்குகாணலாகும். இத்தீங்கனிச்சோலை முழுவதும் அவை அனைத்தும் செறிந்த இலக்கியச் சோலையே. விரிகடல் போன்றது தாகூரின் வாழ்வு. கல்வி அதன் பரப்பு; கலை அக்கடலின் ஆழம். இணையற்ற மணித்திரள் அவரது இலக்கியப் படைப்புக்கள்.

இத்தகைய சிறந்த மகாகவி ஒருவரின் இதய உணர்ச்சிகளை மொழிபெயர்ப்பது இலகுவானதன்று. மகாகவியின் தூய உள்ளம், துறவு மனப்பாங்கு, தீராத தெய்வப்பசி,

இயற்கையில் இறைவனைக் காணத் துடிக்கும் பேரார்வம், பிறர் துயர் கண்டு உருகும் அருள்நோக்கு ஆகிய எத்தனை யோ குணாதிசயங்கள் கொண்ட ஒருவரே இதை எண்ணு தலும் கூடும் என்றால் அது மிகையாகாது. இவற்றுட் பல குண நலன்கள் ஒருங்கமைந்தவரே இத் ''தீங்கனிச் சோலை'' யைத் தமிழ்க் கவிச்சோலையாய்ப் படைத்திருக்கும் திருவா ளர். மு. சுப்பராமன் அவர்கள். பரமஹம்ஸ தேவரது திரு வடிப் பற்றினையன்றி, வேறு எதனையும் இதய பூர்வமாகக் கருதாத இத் திருவருட் செல்வர் ''பரமஹம்ஸ தாசன்'' என்றே பொதுமக்களிடையே வழங்கப் படுபவர். இவர் அவ்வப்போது எழுதிப் பத்திரிகைகளில் வெளியான கவி தைகள் மிகப் பலவாகும். அன்பு சொட்டும் இவரது கவி தைகள் ஆண்டவனுடைய உண்மைகளைக் காட்டி நிற்பன. 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்ற உண்மையை தமி ழமுதூறும் தீங்கவிதைகளிற் காணலாகும். தாகூரின் கவி தைகளிலும் ஈடுபாடுடைய இவரது இக் கவிதை மூலம் அந்த மகாகவியின் உள்ளத்தை எளிதில் உணரமுடியும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

இவர் ஈழ நாட்டு மட்டக்களப்பில் வாழ்ந்த நாட்க ளிலே, தாகூரின் ''கனிகொய்தல்'' தமிழ் உரைநடை ஆக் கத்தினைப் படித்து இன்புறுதலையும், அவற்றுட் சிலவற்றைக் கவிதையாக்கி மகிழ்வதையும் கண்டிருக்கிறேன். தாகூரின் உள்ளம் இவரது அக்கவிதைகளில் பிரதிபலித்தது. அவற் றினை மற்றையோரும் சுவைக்க வேண்டுமெனக் கூறி, 'வீர கேசரி' இதழ்கள் மூலம் அவை வெளிவர இசைவித்தேன். அதுவே தனது கவிதை முயற்சியை ஊக்கி, இந்நூல் வடி வுக்கு வழிகோலியதென, நண்பர் பரமஹம்ஸ தாசன், இந் நூலுக்கு எனது அணிந்துரையின் இன்றியமையாமையைக் குறிப்பிட்டு எழுதியுள்ளார். அது அவரது அன்பு வேட்கை.

பரமஹம்ச தாசன் விளக்கம் வேண்டப்படாத ஒரு பெருங்கவிஞர் என்பதை, அன்னாரது கவிதையுட் புகுந்த எவரும் இலகுவில் ஒப்புக் கொள்வர். கவிஞர் ஒருவர் இன் னொரு கவிஞர் வாயிலாக வெளிப்பட்டு நிற்கும் காட்சி இது என்றே இத் தீங்கனிச் சோலையைப் பாராட்டுதல் வேண்டும். இது 86 தலைப்புகளில் 482 பாடல்களைக்கொண்ட சொல்லோவியமாகத் திகழ்கிறது. நூலின் தொடக்கத்தி லேயே அதோ வருகிறது நமக்கு ஒரு அழைப்பு!

''ஆணை பிறந்ததும் தோணியில் வருகிறேன்.
மாசிக் காற்று வீசித் துடித்தே,
ஆற்றில் உறங்கும் அலைகளை எழுப்புதே!''

எடுத்துக் கொண்ட பொருளுக்கேற்ற குழைவு கொண்ட செஞ்சொற்களால் அமைந்த கவிதைகள் இப்படிப் பல. என்றும் நிலையான பரம்பொருளின் திருவடிகளுக்குரிய வாடாத மலர்கள் இக் கவிதைகள்! இவற்றைத் தமிழிற் கவிதையாக வடித்தளித்த கவிஞர் பரமஹம்ஸ தாசனது நற்பணிக்குத் தமிழுலகம் என்றும் கடமைப்பாடுடையது. வாழ்க இவரது கவிதை வளம்!

''கூடல்''
மட்டக்களப்பு.
(இலங்கை)
15-11-62.

அன்புள்ள
வி. சி. கந்தையா.

# சிற்றுரை

வான்மீகி, வியாசர், வள்ளுவர், கம்பர் போன்ற அருட்கவிகளின் மரபில் தோன்றிய பாரத மகாகவி இரவீந்திர நாத தாகூர். தாகூரை அவரது வாழ்நாளிலேயே உலக மகாகவியாக்கியது நோபல் பரிசு பெற்ற அவரது கீதாஞ்சலி. தாகூரின் எண்ணற்ற கவிதைத் தொகுதிகளில் (FRUIT GATHERING) 'கனிகொய்தல்' என்பதும் ஒன்று. உயர்திரு. வி ஆர். எம். செட்டியார் அவர்கள் மொழிபெயர்த்துள்ள இதன் தமிழ் உரைநடை நூலைப் படிக்க நேர்ந்த போது, அதன் நடையிலும் கருத்திலும் கவர்ந்திழுக்கப்பட்டு, என்மனம் அதிலேயே சொக்கிச் சுழன்று கொண்டிருந்தது. அவ்வுரை நடைச் சித்திரத்தைச் சந்தம் கம்மும் கவிதை வடிவில் பார்க்க இதயம் விழைந்தது. அவ்வப்போது அவற்றைக் கவிதைகளாக எழுதிப் பார்த்து மகிழ்ந்தேன். அக்கவிதைகளே ''தீங்கனிச் சோலை'' என்னும் இத் தொகுப்பு. இவற்றை எனது ஆத்ம திருப்திக்காகவும் கவிதைப் பயிற்சிக்காகவுமே எழுதினேன். இவை நூல் வடிவம் பெறுமென்று அன்று நான் நினைக்கவே இல்லை. கால சக்தி இதை ஆக்கிவிட்டது.

இத் 'தீங்கனிச் சோலை' கீதாஞ்சலியை விட, ஆழ்ந்தகன்ற நுண்ணிய கருத்துப் புதையலும், கவிதை நயமும் செறிந்தது. தாகூரின் சிறந்த பல கவிதைகளைக் கொண்ட தொகுதி இது. இன்பத்திலும் துன்பத்திலும், இரவிலும் பகலிலும், இருளிலும் ஒளியிலும், இயற்கையிலும், செயற்கையிலும், எங்கெங்கும் இறைவனைத் தேடுகிறார் தாகூர். தேடிக் கண்டு கொண்டு பாடிப் பரவச மடைகிறார் சில சமயம்! செந்தமிழில் திருவாசகத் தேன் பொழிந்த மணிவாசகரின் இதய ஒலியை, செவி கொடுத்துக் கேட்டால் தாகூரின் இத் தீங்கனிச் சோலையில் நுகரலாம்.

பலாப்பழம், புறத்தே முட்கள் செறிந்த கடினத்தோல் உடையதுதான். அதைக் களைந்து சுளையைச் சுவைக்கத் தொடங்கினல் எப்படி இருக்கும் என்பதைத் தமிழர்களுக்குக் கூற வேண்டுமா? அதுபோலவே தாகூரின் கவிதைகள் சிந்திக்கச் சிந்திக்கத் தேனூறும் பொருட்சுவை நிறைந்தவை. மேலாழ்ந்த வாரியாகப் பார்ப்பவர்க்கு உட்பொருள் எளிதிற் புலப்படாமற் போகலாம். என்ருலும் சாதாரண மக்களும் கவிதைத் தேன் பருக விரும்பும் காலம் இது. கவிதை எல்லோருக்கும் புரிய வேண்டுமென விழைபவர்களில் யானும் ஒருவன். எனவே தாகூரின் இத் தீங்கனிச் சோலைக் கவிதைக் கனிகளை எல்லோரும் சுலபமாக இனிமையாகச் சுவைத்துண்ணும் வண்ணம் ஆக்க, இயன்றவரை முயன்றிருக்கிறேன். எனது முயற்சியின் வெற்றியை ரசிகப் பெருமக்கள்தான் தீர்மானிக்க வேண்டும்.

இத் தீங்கனிச் சோலை உருவாகத் துணை புரிந்தவர்கள் பலர். முதலாவதாக, கவிதாவேசம் ததும்பும் காந்தசக்தி வாய்ந்த தமது உரைநடைமூலம் இந்த எண்ணத்திற்கு எனக்குத் தூண்டுதலாய் அமைந்தவர், ஆங்கில-தமிழ் கவிதா விமர்சன மேதையும், சிறந்த அறிஞருமான உயர்திரு. வி.ஆர்.எம். செட்டியார் B. A. அவர்கள். இப்பெரியாரவர்களே இந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்புக்கு உரிமையாளரும் கூட. எனவே, அன்பும் பண்பும் மிக்க இப் பெருந்தகையாளர், இந்நூல் வெளிவர அனுமதி யளித்ததோடு, கவிதைகளைப் படித்துப் பார்த்து இந்நூலுக்கு அருமையான முன்னுரையும் முடிவுரையும் வழங்கியுள்ளார்கள்.

இலங்கை - மட்டக்களப்பு எனது அருமை நண்பர் - வித்வான் பண்டிதர். வி. சி. கந்தையா அவர்கள் இக் கவிதைகளை ஆரம்பத்திலேயே பார்த்துப் பாராட்டி, வீரகேசரி இதழ்களில் வெளிவர ஏற்பாடு செய்ததோடு, இப்போது எனது வேண்டுகோளுக் கிணங்கி அழகிய அணிந்துரை ஒன்றும் இந் நூலுக்கு அளித்துள்ளார்கள். அப்போது வீரகேசரியில் ஆசிரியராய் இருந்த திரு. கே. பி. அரன் அவர்க

ரும், அந்த ஸ்தாபனத்தாரும் (1956ம் ஆண்டுக்கு முன்பே) இக் கவிதைகளைத் தொடர்ந்து தமது வீரகேசரி வார இதழ்களில் வெளிவரச் செய்து ஆதரவளித்தார்கள். வாசக நேயர் பலர் பாராட்டி உற்சாகம் ஊட்டினர். ஆத்மஜோதி ஆசிரியரும் அருட்பணித் தொண்டரும் எனது அருமை நண்பருமான அன்புமணி திரு. நா. முத்தையா அவர்கள், எனது கவிதைகளை வெளியிடுவதில் பல ஆண்டுகளாகப் பேரார்வம் காட்டி வந்திருக்கிறார்கள். அதன் தொடர்பாக இத் தீங்கனிச் சோலையைத் தமது ஆத்மஜோதி வெளியீடாகவே வெளியிட்டுள்ளார்கள். ஆத்மஜோதி அச்சக நண்பர்கள் சிரத்தையோடு இதை அச்சிட்டிருக்கிறார்கள். ஈழத்தின் (கலை) மணியமும் எனது நண்பருமான திரு. வி. கனகலிங்கம் அவர்கள் இதற்கு அழகிய முகப்புச் சித்திரம் தீட்டியுள்ளார்கள். அனைத்திற்கும் சிகரமாக எனது மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தர் அவர்கள் அருள் கனிந்த 'ஆசியுரை' வழங்கியுள்ளார்கள். இவர்கள் அனைவருக்கும் எனது பணிவன்பான நன்றியையும் வணக்கத்தையும் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

அதிகரம்,
17-4-63.

பரமஹம்ஸ தாசன்.



கவி தாகூர்

# கவீந்திரர் அஞ்சலி!

புத்திரவி வலிமையினும், கவி ரவீந்த்ரன்
புகழ்வலிதென் றியம்பிடுவேன்! பொழுதெல்
(லாம்நின்
றெத்தனைதான் ஒளிபெயினும், புவியிற் பாதி
இருளாட்சி யன்றி,ஒளி இரவிக் குண்டோ?
எத்தனைநா டுண்டுலகில்? மொழி, நிறங்கள்
எத்தனை?எத் தனைகட்சி? ஏக காலத்(து),
அத்தனைக்குள் ளும்கவிஞர் பெருமான் தாகூர்
அருளாட்சி எனில்,அருணன் இவனுக் கீடோ?
1

மனிதகுலம் தழைத்தோங்கப் பாரத தத்தாய்
மணிவயிற்றில் உதித்ததவ மணிகள் கோடி!
அனைவரிலும் புகழ்க்குரியோன், கவி ரவீந்த்ரன்!
ஆம்;எவர்,தம் நூற்றுண்டில் அவனி யெங்கும்
புனிதமொழி யணங்குபலர், கோடி, கோடி
புகழ்மலர்கொண் டர்ச்சித்துப் போற்றி செய்யும்
இனியவிழாக் கண்டவர்கள்? இவனை யன்றி
எவர்க்கிந்தப் பேறுண்டு? வாழ்க தாகூர்!
2

பண்புமொழிக் காவியப்பொற் கோயில் வைகிப்
பகரரிய ஒளிபரப்பும் கவித்தெய் வத்துள்,
கம்பனைப்போல், வள்ளுவர்போல், இளங்கோ
(வைப்போல்,
காசினியில் யாருமிலை! எனினும், ஒன்றாய்,
அம்புவியெல் லாம்திரண்டோர் பெருவிழாச் செய்
(து),
அஞ்சலிக்கப் பெற்றதிலே கவி ரவீந்த்ரன்
இன்பவங்கத் தங்கரவி தாகூ ரைப்போல்,
எங்குண்டு? இவன்புகழ்யார் இசைக்க வல்லார்?
3

எத்தனையோ மாகவிஞர், அழிவில் லாப்பே
ரிலக்கியங்கள் படைத்தவருண் டெனினும், யாரே,
இத்தலத்தில், பழமையொடு - புதுமை, மேற்கில்
இனியகிழக் கொன்றுபட, இருள் துடைத்துப்
புத்தொளியும் புதுமணமும் பொலியும் இன்பப்
பொற்குவியல் பலதுறையும் புகுந் தளித்தார்?
அத்தனையும் படைத்தளித்தான் கவி ரவீந்த்ரன்!
ஆம், உலக மாகவிஞன் இவனே யன்றோ?
4

கலையுலகின் மலைவிளக்கு; புலவர் போற்றும்
கற்பனையின் தனியிமயம்; கவி யணங்கின்,
எழில்நடனத் திருவரங்கம்; உலகு போற்றும்
இலக்கியப்பொற் கலைச்சுரங்கம்; எங்கும் பொங்கிப்
பொழியுமணிக் கவிதைமுகில்; நவ யுகத்தின்
புகழ்பரப்பும் கவிமுரசம்; காவி யப்பொற்
சிலைவடித்துக் கவிஞருல கேத்த வாய்த்த
தெய்வகவீந் திரன்மலர்த்தாள் அஞ்ச லிப்பாம்!
5

— பரமஹம்ஸ தாசன்.

# தீங்கனிச் சோலை

## 1. அழைப்பு!

நானிலத் தலைவ! நின் ஆணை பிறந்ததும்,
அடிமை, என் கூடையில் அன்புக் கனிகளை
நிரப்பி, உன் புனிதசந் நிதியில்வைக் கின்றேன்!
ஆனால், அவற்றுள், ஏனோ அறியேன்,
பழுக்கா தவைசில; பறிபோ னவைபல!

பருவம் முற்றிப் பழுத்த[து]; ஓர் தருவின்
நிழலில், தலைவ! நின் குழலிசைக் கின்றது!
எனினும், அதுதுயர்த் தொனியாய் ஒலிக்குதே!

ஆணை பிறந்ததும், தோணியில் வருகிறேன்;
மாசிக் காற்று வீசித் துடித்தே
ஆற்றில் உறங்கும் அலைகளை எழுப்புதே!

வாழ்வுத் தோட்டம், வழங்கிற்று பலனெலாம்!
உழைப்பாற் களைத்து ஓய்ந்திடும் சமயம்;
மாலைப் பொழுது மங்கும்இந் நேரம்,
அலைகடற் கரையில் அமைந்தநின் இல்லில்
இருந்தெனை, வருகவென் றிசைக்குதோர் அழைப்பு!

## 2. மலரும் கனியும்!

கொஞ்சும் மழலைப் பிராயத்தே
கோதற் றது,என் வாழ்வுமலர்!
நெஞ்சம் நிறைந்த மகிழ்விதழில்
இரண்டொன் றேதான் நீங்கிடினும்,
கிஞ்சிற் றேனும் கவலைகொளாக்
கீத மலராம்! ஏனென்றால்,
கெஞ்சிப் பிச்சை கேட்கும்இதைக்
கிட்டி வசந்தப் பூங்காற்றும்!

இன்றோ, இளமைப் பருவத்தின்
இறுதி; அதற்குள் என்வாழ்வு
நன்றாய்ப் பழுத்த கனி;இதிலோர்
அணுவும் உதிர்க்க நானறியேன்;
குன்றா இனிமைச் சுமைதாங்கிக்
குழைந்து கசிந்து, தனைமுற்றும்
ஒன்றாய்த் திரட்டி அர்ப்பணிக்க
உள்ளம் துடிக்கு திக்கனிதான்!

# 3. அவன் கருணை!

மதுர மிகுந்த புதுமலர்க்கு
மட்டும் தானோ வசந்தவிழா?
முதிர்ந்தே உதிரும் இலை,சருகு
முதலாய் வாடும் மலர்க்கிலையோ?
மதிகண் டெழும்பே ரலைகளுடன்
மட்டும் தானோ கடல்பாடும்?
சிதறிக் கதறிக் கரைக்கிரங்கும்
சிற்றலை கட்குப் பாடாதோ? 1

கனக மணிகள் வைத்திழைத்த
கவினார் இரத்னக் கம்பளத்தில்
எனது மன்னன் நிற்கின்றான்!
இனிய அவன்றன் இணைதொட்டு
வணங்கப் பொறுமை யொடு,களிமண்
வடிவம் பலகாத் திருக்குதந்தோ!
புனிதன் அவற்றின் நிலைக்கிரங்கிப்
பொற்றாள் எடுத்து வைக்கின்றான்! 2

இன்பத் தலைவன் அருகினிலே
இருப்போர் பலதந் திரிகள்,சில
அன்புப் பெரியோர்; ஆனாலும்,
அவன்,தம் கருணைக் கரங்களினால்,
துன்பப் பேதை எனை,வலியத்
தொட்டுக் கட்டிக் கொண்டே,தன்
உம்பர்க் கரிய கழற்கென்றும்
ஊழிய னாக்கி வைத்திட்டான்! 3

# 4. தலைவனின் திருமுகம்

காலை, கண்வி ழித்ததுமே,
கண்டேன் தலைவன் கடிதத்தை!
ஏழை, படியாக் குற்றத்தால்
இதனுட் செறிந்த பொருளறியேன்!
கோல மதியர் நூல்களுடன்
குலவட் டும்,நான் தொல்லைசெயேன்!
சீலன் கடிதப் பொருளிவர்தான்
செப்பு வாரோ? யாரறிவார்? 1

கண்ணில் ஒற்றி *முடங்கல்தனைக்
கருத்தில் இறுகப் பதித்திடுவேன்;
விண்ணில், சாந்த நிசியினிலே,
வெள்ளி முளைக்கும் வேளையில்,என்
வண்ணத் தொடையில் *திருமுகத்தை
மலர்த்தி, மௌனத் திருந்திடுவேன்;
கண்ணிற் பட்ட தத்தனையும்
கருத்தை எனக்குத் தொகுத்துரைக்கும்! 2

உதிரும் இலைகள் அதன்பொருளை
ஓதும்; நதியும் அதைப்பாடும்!
மதுரத் தொனியில், விண்ணின்றேழ்
வன்னச் சுடரும் அதைவாழ்த்தும்!
எதுதே டியவை? எதுகற்றேன்?
எதையும் அறியேன்; என்னினும்,என்
இதயச் சுமைகள் குறைந்திதனல்,
இன்பக் கவிகள் எழக்காண்பேன்! 3

*கடிதம்

* * *

# 5. தவித்திடுவேன்!

பொருளை அறியா நிலையினில்உன்
புனித நினைவுச் சின்னத்தை
ஒருகைப் பிடிமண் மறைத்திடலாம்;
ஒப்பில் அரசே! இப்பொழுதென்
அறிவின் வளர்ச்சி யால்,உன்னை
மறைத்த பொருட்கள் அனைத்தையுமே
சிறிதும் ஐய மில்லாமல்
தெளிவாய் அறிந்து கொள்கிறேன்! 1

மலரின் இதழில் உன்னெழில்தான்
வண்ணம் தீட்டும்; அலைநுரையில்
ஒளிரும் மின்னி; மலைச்சிகரம்
ஓங்கி நின்பே ருண்மைசொலும்;
தலைவ, நினது முகம்மறைந்த
சமயம் கடிதம் தனைப்பார்த்தால்,
நிலவும் பொருளை யறியாமல்,
நெஞ்சம் துடித்துத் தவித்திடுவேன்! 2

## 6. வழிகாணேன்!

ஓடும் வீதிக ளில், - அலை
உதிர்க்கும் ஆழியி னில்,
நீடு வான்மிசை யில், — யான்செல்
நெறியைக் காணவில் லை. 1

பட்சிச் சிறகுக ளும், - பொங்கும்
பருவத் தேன்மல ரும்,
நட்சத்தி ரச்சுட ரும், - மறைத்தன
நல்ல வழியினைத் தான்! 2

பார்க்க முடியா த, — இன்பப்
பாதையின் பேரொளி தான் — நம்
ஆக்கைக் குருதியி லே, - ஓடி
அலையு தோமன மே? 3

# 7. வழிப்போக்கன்!

எண்ணம் கலையுதில்லை, — கால்கள்
இருப்புக் கொள்ளுதில்லை; — இந்த
வண்ணச் சுடர்மணியும் — பெரிதாய்
மனதில் தோற்றுதில்லை! 1

அழகு சொட்டுமுகம், - எவனோ
அன்னி யன்ஒருவன்; — மிகப்
பழகி யவனைப்போல், — என்னைப்
பார்த்துப் புன்னகைத்தான்! 2

கண்ணால் அழைத்துவிட்டு, — தெருவைக்
கடந்து சென்றுவிட்டான்; — அவன்
பொன்னடி ஓசையென்றன் - நெஞ்சைப்
புண்ணாகச் செய்யுதடி! 3

காற்றுக் குமுறுதடி, — கடல்
கத்திப் புலம்புதடி! — மன
வேற்று மைப்புயல்கள், — அவற்றுடன்
விரைந்து சென்றிடட்டும்! 4

வீதி வழிநடந்தே — எனதுயர்
விருப்பைக் கொள்ளைகொண்டான்; சர்வ
பேதங் கடந்தவன்போல், — அவன்விழி
பேசி நடந்தடி! 5

வேற்றவன் என்றாலும், - அவனொரு
விந்தை மனிதனடி! - கொடுங்
கூற்றையும் வென்றவன்போல் - அவன்நடைக்
குறிப்புச் சொல்லுதடி! 6

* * *

# 8. புறப்படு!

புறப்படு மனமே, - காலம்
போக்கிஞய் தினமே!
விருப்ப மிக்கவர்கள் - தாமதம்
விளேப்பரோ கணமே? 1

வருபவர் வரட்டும்; — அவர்க்காய்
வழியில் நிற்காதே;
அரிய தருணத்தை — வீணே
அவல மாக்குவதோ? 2

அருணன் உதயத்தில் - உன்பெயர்
அழைக்கப் பட்டதன்ருே?
விரைந்து சென்ருலே, - முதலிடம்
விழைந்து பெற்றிடலாம்! 3

அரும்பின் ஆசையெல்லாம் — பனிஇர
வதனேத் தேடுவதே; மலர்
விரும்புதல் சுதந்த்ர - ஒளியை
விரைந்து கூடுவதே! 4

# 9. உதறிச் செல்கிறேன்!

தனையின் றளித்த கனியதனைத்
தானே விழுங்கும் புழுவினைப்போல்,
எனையீன் ற,உடல் தனையழிக்க
எண்ணித் தியங்கும் எனை,நினைத்தேன்! 1

எனினும் உளுத்த சிறையிதனை
இன்னும் விரும்பேன்; மட்பாண்டம்
தனைக்கொண் டலைந்த திதுவரையிற்
சாலும், இனியும் தாங்கியிரேன்! 2

வாழ்விற் கலவா நெறிகளையும்,
மலர்ந்த சிரிப்பை நசுக்கிவிடும்
பாழும் கனத்த பொருட்களையும்
பாரில் உதறிச் செல்கின்றேன்! 3

பொன்று இளமைச் செல்வத்தைப்
புல்லத் துடித்து, காலத்தை
நன்றா டுருவிச் செல்கின்றேன்;
நாட்ட மிதனிற் பின்வாங்கேன்! 4

நெஞ்சே! உனது இரத்தத்தில்
நீந்தித் தவழ்ந்து கவிபாடும்
விஞ்சைப் புலவன், விண்ணில்அதோ,
வெற்றி நடனம் புரிவதைப்பார்! 5

## 10. தரிசிக்கப் பெற்றேன்!

கையினைப் பிடித்தி ழுத்துக்
    கனிவுடன் பலர்முன் பென்னை
ஒய்யார மாய் உயர்ந்த
    பீடத்துட் கார வைத்தாய்!
ஐய,நான் மனங்க லங்கி
    அங்கிங்கு பார்த்தி டாமல்,
மெய்யெலாம் நடுங்கக் கால்கள்
    விலவிலத் திட,எ ழுந்தேன்! 1

சஞ்சலம் குதர்க்கம் ஐயம்
    தளர்நடை தடுத்தும், மற்றோர்
நெஞ்சங்கோ ணுது செல்ல
    நிலைகெட்டுத் தத்த ளித்தேன்;
விஞ்சைய! முடிவில் பெற்றேன்
    விடுதலை; எனினும், துன்பும்
மிஞ்சிய உதையும் மண்ணில்
    வீழ்ச்சியும் உடனே பெற்றேன்! 2

பாதை,என் முன் திறந்து
    கிடந்தது; பரந்த விண்ணைப்
பேதைமென் சிறைகள் நோக்கி
    விரிந்தன; உதய பைம்பொற்
சோதியிற் கலப்ப தற்கே
    துடித்து, வெம் புயல் துரத்தும்
சீதள மேகம் போல
    விரைந்துநான் செல்ல லுற்றேன்! 3

மணிமுடி யகற்றி, மின்னல்
    மாலையில் தொங்கும் வாளாம்
கனல்மிகு கோடைக் கார்போல்,
    கவலைதோய் இன்பில் வாழ்வோர்
தனித்தவெம் புழுதிப் பாதை
    தன்னில்நான் ஓடி வந்தேன்,
புனித,நின் இறுதி யான
    புகல்வர வேற்பை நாடி! 4

அன்னையின் வயிற்றை விட்டு
    வெளிவந்த பின்பே, அன்புப்
பொன்னெழில் தாய் முகத்தைக்
    கண்டிடும் சேய், அதைப்போல்,
நின்புவி மனையை விட்டு
    நீக்கிடப் பட்ட பின்பே,
தண்ணிய நின்மு கத்தைத்
    தரிசிக்கப் பெற்றிட் டேன்யான்! 5

# 11. பொன் மாலை

பைம்பொன் மாலை யணிந்ததனால்
பழிக்கின் றதெனை யவமானம்!
வம்பாய்ப் பிய்த்தால் கழுத்திற்கே
சுருக்காய் மாறி வதைத்திடுதே! 1

நின்னைப் பாட வொட்டாமல்
நெருக்கி, எனது மென்கழுத்தைப்
புண்ணாக் கிடுதிப் பொன்மாலை;
புனிதா, இதைநீ யகற்றாயோ? 2

நின்முன் இதனை அணிந்து,எளியேன்
நிற்க, வெட்கம் தின்னுதெனை!
மன்னா, இதைநின் திருக்கரத்தில்
வைத்தால் தான்,விடு தலையெனக்கே! 3

இதைநீ அடியே னிடம்ஏற்றே,
இதற்குப் பதிலாய், எனையுனது
பதமா மலர்மாலையில்விரைவில்
பரிவாய் இணைப்பாய் பரம்பொருளே! 4



# 12. உவக்காத பரிசு!

இருபுருவக் கரைசுழிக்க, யமுனை வெள்ளம்
இரைந்துவிரைந் தோடியது; குன்று தோறும்
இருள்போன்ற பெருங்காடு சூழ்ந்து நிற்க,
இடையிடையே அருவியிசை முழக்கிற்(று;)
சிறுகுன்றின் மீதமர்ந்து, குருகோ விந்த [ஆங்கோர்
சிங்வேத நூலாராய்ந் திருந்தார்; அப்போ(து)
ஒருசீடன் செருக்குடன்முன் வணங்கி, ''தாங்கள்
உவக்காத பரிசென்''றோர் இரண்டைத்
தந்தான்!

ஒளியலைகள் தவழ்வைர வளையல் அஃதை
ஒருவிரலால் சுழற்றியவர் பார்த்த போது,
வளையலது தவறிநதி யதனிற் பாய்ந்து
மறைந்த(து) ''ஐயோ'' எனநதியில் மறைந்
தான் சீடன்!
விழிகளை, நூல் தனில்ஆழப் பதித்து விட்டார்
வித்தகரும்; வளையலைப்பே ராற்று வெள்ளம்
விழுங்கியதும், தேடி, அதில் வீழ்ந்தோன் தானும்,
வேதனையில் ஆழ்ந்து, கரை யேறக் காணேம்!

அந்திமயங் கிடுமாலை வேளை, அப்போ(து)
அயர்ந்துடலம் நனைந்துவந்தான் சீடன்;
உள்ளம்
நைந்தபெரு மூச்சுடனே குருவை நாடி,
''நான்தந்த வளையலது வீழ்ந்த தெங்கே?
சிந்தையுவந் திப்பொழுது தெரிவித் தாலும்,
தெரிந்தெடுப்பேன் அதை''என்றான்! குருவும்
அஃதோ
''அந்தஇடந் தான்!.''என்று கூறி யே, மற்
றதனையும்கை யாலெடுத்து எறிந்தார் ஆற்றில்!

# 13. பயத்தைக் கண்டறியான்!

சற்றசைந் திட்டாலும் — உனையே
தொட்டுத் தழுவுகின்றேன்! — நினது
வெற்றிக் கழலின்ஒலி - தனைநான்
ஒட்டியே பாடுகின்றேன்! 1

நீக்க மறநிறைந்த — உனது
நெட்டுயிர்ப் பைத்தீண்டும் — உயர்
பாக்கியம் பெற்றவன்தான் - எதிலும்
பயத்தைக் கண்டறியான்! 2

படகைச் செலுத்திடுவான் — பெரும்புயற்
படையை எதிர்த்துடனே! - அலை
கடலின்கொந் தளிப்பினைக் — கண்டு
கலக்கம் சிறிதுமுறான்! 3

வீட்டுக் கதவுகளைத் — திறந்து
வேகத்து டன்வருவான் — ஜகம்
ஆட்டிப் படைத்தவனை - எதிர்கொண்
டார்வத் துடன்அழைப்பான்! 4

இலாபநட் டத்தையெல்லாம் - தயக்கமில்
லாமல் கணக்கெடுப் பான் — இதய
தாப முரசொலிக்குச் - செவியைச்
சாய்த்துணர்ந் தேநடப்பான்! 5

ஒவ்வொரு காலடிக்கும் - தவறா
துன்னைத் தொடர்ந்திடவே — அவன்
செவ்விய நெஞ்சுருகும், - அன்புத்
தீனர் வழித்துணைவா! 6

# 14 சூக்குமம் அறிவேன்!

இந்த உலகினிலே - யான்பெறும்
இன்பப் பொருட்களெல்லாம் — உன்
சுந்தரப் பொற்கரமே - தந்திடும்
சூக்குமம் நன்கறிவேன்! 1

இன்னலி லும்,அதனுல் - நினதன்பு
புன்னகை பூக்குதன்றே? — என்
கண்ணீர்த் துளிகளிலும் - நினதொளி
மின்னித் துடிக்குதன்றே? 2

மற்றவ ரின்அழைப்பை — யான்,கிஞ்
சிற்றிலும் ஏற்பதில்லை; — என்
உற்ற வழித்துணையாம் — உனையிழந்
திட்டிட நேருமன்றே? 3

மனத்தின் போக்கினிலே, — யான்பிடி
வாதத்து டன்நடந்தேன்; - என்
கனத்த பேதமையே — உனதன்புக்
கனலைத் தூண்டியது! 4

''இந்த உலகில்உனக் - குரியநல்
இன்பப் பொருட்களெல்லாம் - என்
விந்தைக் கரம்தரும்'' என் — றுரைத்தநின்
மெய்மொழி யையுணர்ந்தேன்! 5

★

## 15. கீதக் குயில்கள்!

புரியும் விதம்நீ புகல்கின்றாய்;
 புனிதா, நின்னைப் புகல்பவர்கள்,
புரியாத் தர்க்கம் புரிகின்றார்;
 புவியில் புதுமை இதுவன்றோ? 1

விரிவான் சுடரின் மணிக்குரலை
 வியந்து கேட்கின் றேன்; விந்தைக்
கரசே! நினது தருவினத்தின்
 ஆழ்ந்த மோனம் தனையுணர்வேன்! 2

பொங்கும் மணத்தேன் மலர்போலென்
 புந்தி மலரும் என்றுணர்வேன்;
எங்கோ, மர்மச் சுனையில்நிறைந்
 தெழுந்த தென்வாழ் வென்றறிவேன்! 3

பனிப்ர தேசந் தனில்நின்று
 பறந்து வந்த பறவைகள்போல்,
நினது கீதக் குயிலினம், என்
 நெஞ்சைத் தேடி வந்தனகாண்! 4

கோடைக் கனலை எதிர்த்திடவே
 கூடு கட்டின என்னுளத்தே!
ஆடற் பருவம் வரும்வரை, யான்
 அவற்றைக் காத்துக் கொள்கின்றேன்! 5

* * *

## 16. உய்யவைத்தாய்!

வகைதெரிந் தவர் குறுக்கு
        வழியில்தே டிட முயன்றார்;
தகவிலேன் இரவெல் லாம்பே
        தமையினால் அலைந்தேன்; ஆனால்,
பகவனே! நின்னைக் கண்டு
        பயப்படும் அளவு, கல்வி
மிகுதியில் லாத தால், நின்
        வீட்டைத்தற் செயலாய்க் கண்டேன்! 1

ஐயத்தால், திரும்பும் போதுன்
        அருட்கையால் பிடித்த ணைத்தே
உய்யவைத் தாய்நீ என்னை;
        ஒப்பிலாய்! இதற்குத் திட்டி
வெய்யதந் திரிகள் என்னை
        வெறுக்கின்றார்; இவர்தான் முன்பு
மெய்வழி தெரியா தானென்
        றெனைப்பரி கசித்த மேலோர்! 2

# 17. மண் விளக்கு

இல்லத்தி லேயிருந்தென் — மண்விளக்
கெடுத்து வந்திருந்தேன் அது
நல்ல பயன்தருமென் — றுள்ளத்தில்
நம்பிக்கை கொண்டிருந்தேன்! 1

''மக்களே, உங்களுக்கு — நல்ல
வழி தெரிவதற்கு, — இதோ
தக்க வெளிச்சமதைக் — காட்டித்
தருவேன்'' என்றுரைத்தேன்! 2

மீண்டும் வருவதற்குள் — இரவை
விழுங்கி விட்டதிருள்! — நிசப்தம்
நீண்ட தெருவிலெலாம்! — அதிலே
நின்றுநான் கூவுகின்றேன்! 3

''விண்சுட ரே! ஒளியை, — என்மேல்
வீசுவாய்! ஏனெனில்,என் — சிறு
மண்ணின் விளக்குடைந்து — சிதறி
மண்ணில் மடிந்ததந்தோ!'' 4

## 18. அற்புதம்!

மொட்டினை மலர்த்த உன்னுல்
முடியா(து),எம் முயற்சி யால்நீ
கட்டாயப் படுத்தி ஞலும்
காரியம் பலியா(து), உன்கை
பட்டதும் கசங்கிற் றந்தோ!
பறித்திதழ் எறிந்தாய்; வண்ணம்
ஒட்டிட விலே; மணம்தேன்
உறைந்தில; உனக்கீ தாமோ? 1

முகைமலர்த் திடுவ தற்கோர்
முதல்வனுண்(டு] அதிச யத்தின்
சிகரமே அவன்றன் செய்கை!
சிறுகடைக் கண்ணுல் பார்ப்பாள்;
நகைபுரிந் தெழில் குலுங்க,
நரம்பெல்லாம் உயிர்துடிக்க,
அகமலர்ந் திதழ் விரிக்கும்
அரும்[பு]! இஃதற் புதமே யன்றே? 2

# 19. மலர் வணக்கம்!

மழைகாலத் தின்பிறகு பொய்கை தன்னில்
மலர்ந்ததொரு கடைசித்தா மரைப்பூ; அந்த
அழகியநன் மலர்கொய்து, தகுசன் மானம்
அடைவதற்கென் றரண்மனைவா யிலையடைந்
தான்
மழவனெனும் ஒருதோட்டக் காரன்; ஆங்கு
வழிப்படுயாத் திரிகன்அதை விரும்பி, சத்வன்
கழற்கென்று விலைகேட்க, 'பவுன்ஒன்' றென்றான்;
கணத்திலவன் அளிப்பதன்முன், வந்தான் மன்
னன்! 1

புத்தர்பிரான் திருவடிக்கே பொருத்தமென்(று),
அப்
புனிதமலர்க் கவன்தரும்அப் பொருளைப்போன்
பத்துமடங் கதிகவிலை தருவே னென்றான்! (று
பணமிகு யாத்திரிகன், அதில் 'இருபங்' கென்
றான்!
மெத்தமகிழ்ந் திட்டஅந்தத் தோட்டக் காரன்,
மேலின்னும் பெறவெண்ணி, 'மலரை விற்கச்
சித்தமிலை' எனவணக்கத்தோடு கூறிச்
சென்றிட்டான்; மற்றவரும் சென்றார் நொந்து!
2

மாந்தோப்பின் மத்தியிலோர் சாந்திக் கோயில்
வளரமைதி தவழ்ஜோதி வதனப் புத்தன்
பாந்தமல ரடியினில், தா மரைப்பூ வைத்துப்
பணிந்தெழுந்து கசிந்துருகி மழவன் நின்றான்!
காந்தவிழி ஒளிபரப்ப, கருணை பொங்கக்
'கண்மணியே! யாதுனக்கு வேண்டும்!' என்ற
ஏந்தல்மொழி கேட்டவனும், ''சற்றே னும்நின்
இணையடியைத் தீண்டுமின்பம் வேண்டும்!''
என்றான்! 3

## 20. இரவுப் பேரரசி!

இருளால் திரையிட் டுலகாளும்
இரவே! நின்றன் இசைபாடும்
அருளார் கவியாய் எனையாக்கு!
அனந்த யுகங்க ளாய்ச்சிலர்நின்
கருணை நிழலில் மௌனமுடன்
கவிதை புனைந்து மறைந்திட்டார்;
பெரிதும் அவர்தம் பாட்டினையே
பெருமை யுடன்யான் பாடுகிறேன்! 1

ஒருசக் கரமும் இல்லாமல்
உலகெங் கணுமே நிசப்தமுடன்
விரைந்து சுழன்று வரும்,நினது
வெற்றித் தேரில் எனையேற்றாய்.
சிறந்த பலரை யுவந்தளித்துச்
செருக்குண் கால மாளிகையில்
இருண்ட எழிலின் பொலிவுடனே
இலங்கும் இரவுப் பேரரசீ! 2

திருட்டுத் தனமாய்க் கொல்லைவழிச்
சென்று, கேள்வி பலகேட்க
விரும்பும் சிலர்,நின் ஒளியற்ற
வீட்டில் நுழைந்து, தெளிவாக
மறுத்தற் கரிய பதிலெதுவும்
வருமென் றெதிர்பார்த் தலைந்தலைந்தும்,
சிறிதும் காணுமையினுலே
சிந்தை வருந்தித் தியங்குகின்றார்! 3

காணற் கரிய பரஞ்சோதிக்
கரத்தி னின்று தெறித்த,இன்ப
பாணங் களினுல் இதயங்கள்
பல,பே ரின்ப வெறியுடனே
கானம் முழக்கி, ஆழ்ந்தஇருட்
கட்டை அசைத்து விட்டன;மெய்
ஞான விழிப்பைப் பெற்றிட்ட
நல்லான் மாக்கள் இவர்தாமே! 4

விழித்த பல,ம காத்மாக்கள்
விண்ணின் சுடரை வியந்து, பெருங்
களிப்போ டுற்று நோக்கி,அதிற்
கண்ட அற்பு தத்தினேயே
குழைந்து நினேந்து சுகிக்கின்ருர்;
கோதில் அவர்கள் தம்மையும்,நின்
அளப்பில் மோனத் தையும்பாடும்
அரிய கவியாய் எனேயாக்காய்! 5

# 21. அடைதல் திண்ணம்!

என்றன் அற்ப வாழ்நாளில்,
எண்ணில் பலநாள், கொடுஞ்சோம்பல்
என்னைத் தடுத்தென் வழியினிலே
இன்னல் முட்கள் பரப்பிடினும்,
என்னுள் மறைந்த பெருவாழ்வை
என்றே யான்எய் திடல்உறுதி!
என்னுள் மர்ம முடன்மலர்பே
ரின்ப மலர்துய்ப் பேனொருநாள்! 1

ஒப்பில் லாத பேரருளின்
ஒளியைச் சிறிதாய் உணர்கின்றேன்.
தட்பா ரமுதத் தென்றல்அலை
தாவித் தழுவி மறையும்; அதன்
நுட்பச் சுகம்துய்க் கையில், எண்ணம்
நுவலற் கரிய மணம் வீசும்!
இப்பார் புறத்தே பொங்கிடும்பே
ரின்பத் தையுய்ஓர் நாளுண்பேன்! 2

தங்கம் பொலியும் ஒளித்திரளின்
பின்பே இன்பம் தளிர்த்திடுமாம்;
பொங்கிப் புரளும் தனிமையில், இப்
போகம் விளைந்து நிலைத்திடுமே!
எங்கும் நிறைந்து ததும்பிநிற்கும்
ஏகாந் தத்தே ஈசனவன்
மங்காச் சிருஷ்டிப் பொருள்யாவும்
மாசற் றினிதாய் மலர்ந்திடுமே! 3

## 22. குழலைத் தருக!

இலையுதிர் காலக் காலைவெயில்
        என்றிலும் இன்று கொதித்திடுதே!
தலைவ, நினது பாட்டமுதம்
        சஞ்ச லத்தால், விட்டு,விட்டு
ஒலிப்ப தெனில், வேய்ங்குழலை
        ஒருசற் றெனக்கு உதவிடுக!
எளியேன் மனதின் நிலைக்கேற்ப,
        இசைத்துக் களித்தே ஆடிடுவேன்! 1

துடைமேல் அதனைக் கிடத்திடுவேன்;
        தூக்கி மார்பில் அணைத்திடுவேன்;
இடையே உதட்டிற் பதித் திடுவேன்;
        எதையோ பாட்டென் றிசைத்திடுவேன்;
வடிவாய்த் தரைமேல் வைத்திடுவேன்;
        மாலைப் பொழுதில் மலர்கொய்தே
தடந்தார் புனைந்து சூட்டிடுவேன்;
        தண்ணூர் மணமும் சேர்த்திடுவேன்! 2

தீபம் ஏற்றி வைத்துனது
        தெய்வக் குழலை வணங்கிடுவேன்!
மேவி இரவில் நின்னிடமே
        மீண்டும் அதனைச் சேர்த்திடுவேன்!
மூவாத் திங்கள் உடுக்களிடை
        முற்றும் தனியாய்ச் சுற்றிடும்போ(து)
ஆவ லாக நள்ளிரவுக்
        கான இசைநீ அதிலிசைப்பாய்! 3

## 23. கவிஞன்

கட்டற் றுலவிடும் கவிஞனின் உள்ளம்,
தெண்ணீர் புரள்கையில், தென்றல் தவழ்கையில்,
வண்ண முகையின் மலர்ச்சியில் எல்லாம்,
இன்ப வாழ்வின் எழில்அலை கண்டு,
அன்பால் விம்மி ஆனந்த நடஞ்செயும்!

அருணன்,இப் பொழுது அஸ்தமித் திட்டான்;
இருளெனும் போர்வையால், விரிவான், கடலின்
மேற்பரப் பென்னும் மேனியை மூடிற்று;
களைத்து மூடிய கண்களின் இதழ்போல்,
வானும் கடலும் மௌனத்திற் கூடின!
கவிஞன் இன்பக் கடலுள் மூழ்கத்
தகுதி யானநற் றருணமீ தல்லவா?
எழுது கோலை எடுத்துவிட் டுடனே,
சித்தந் தன்னைச் சிந்தனைக் கடலின்
ஆழத்தில் தேக்கி, அழியா மோன
இரகசியம் அறிந்து நன்கனு பவிக்க
விட்டு விடுகிறான், விந்தைக் கவிஞன்!

# 24. நாதம் பொழிக!

இருண்ட திரவு என்னரசே,
எளியேன் உயிரில், நின் துயில்தான்
விரைந்து பாய்ந்தே ஆழத்தில்
மேவிக் கலந்து விட்டதுகாண்! 1

காதல் துயரே, விழிப்பாய்நீ!
கதவைத் திறக்க வறியாமல்
பேதை கலக்க முடன், வெளியே
பெரிதும் காத்துக் கிடக்கிறேன்! 2

०கடிகை கால அளவின்றிக்
காவல் புரிகின் றது; விழிப்பாய்ச்
*சுடர்கள் கவனிக் கின்றததோ!
சுழலும் காற்றும் அசைந்திலதே! 3

மவுனம் ஏழை நெஞ்சத்தே
மண்டிப் பெருகி விட்டது; என்
கவலை போக்க விரைந்துடனே
கண்ணை விழிப்பாய் காதலனே! 4

வெற்றுக் கிண்ண மாம், என்னுள்
விந்தை நாதம் பெய்து, இரவின்
கற்றை மோனக் கடல்கலக்கிக்
கானத் திரையை எழுப்பிடுவாய்! 5

० நாழிகை * நட்சத்திரங்கள்

# 25. உதய கானம்!

காலைப் பறவை மகிழ்ந்துதய
கானம் பொழியும் விந்தையென்னே!
கோலப் பரிதி வருகையை, முன்
கூட்டி இதனுக் குரைத்தவர்யார்? 1

வெளியில் ஒளி, தலை நீட்டிடுமுன்
மிகுந்த இருள், தன் சுருளலையால்
குளிர்ந்த விண்ணைச் சூழ்ந்துநிற்றல்
குவல யத்தில் இயல்பன்றோ? 2

வானில் படர்ந்து, இலைத்திரளில்
மண்டிக் கிடக்கும் காரிருளை,
மோனக் கதிரோன் தாண்டிவந்துன்
முன்எப் படியோ ஒளிசெய்தான்? 3

அன்புப் புள்ளே! 'இரவொழிந்த(து),
அருணன் ஒளியிஃ தோ.' என, நீ
இன்பப் பண்ணை விடியுமுன்பே
இசைத்தாய், உலகம் நம்பவில்லை! 4

உறங்கும் மனிதா, விழித்தெழுவாய்!
உதயக் கதிரின் ஆசிபெறத்
திறந்துன் முகத்தை வெளிக்கொணர்வாய்!
திடமாய்ச் சுற்றி நோக்கிடுவாய்! 5

ஆவி உருகும் படி, இனிதாய்
அதிகாலையிலே கவிபாடும்
தேவ கானப் புள்ளுடன்நீ
சேர்ந்தே அமுதப் பாட்டிசைப்பாய்! 6

## 26. ஆசைக் குரல்

உடுக்க ணங்கள் ககனத்தே
உறங்கிற்(று), என்னுள் ஒய்ந்தயர்ந்து
கிடக்கும் வறிஞன், மெலிந்திடுதன்
கிழட்டுக் கரங்கள் தமை,விரிந்து
மிடுக்காய் உயர்ந்த விண்ணோக்கி
விரித்துப் பசியின் குரலாலே,
தடித்த இரவின் இருட்காதில்
சத்த மிட்டுக் கதறிநின்றான்! 1

மடிந்த பாலை வனம்போன்ற
வானில், சாய்ந்த பூதம்போல்
இடிந்து கிடக்கும் குருட்டிருள்முன்
ஏழை தனது பிரார்த்தனையைத்
தொடர்ந்தான்; வெற்றுக் கூண்டதனைச்
சுற்றிக் கத்தி வரும்புட்போல்
கடந்த சூன்ய வெளிமுற்றும்
கதறிற் றவன் ஆசைக்குரல்தான். 2

காலைக் கதிரோன் ஒளிப்பவனிக்
காட்சி கண்ட வுடன்,வறிஞன்
சாலக் களித்தான்; ''செவிட்டிரவு,
தன்பொக் கிஷம்தான் வரண்டதென
ஓல மிட்டதென் பாக்கியமே;
ஒப்பில் வாழ்வுப் பேரொளி!நின்
சீலந் தன்னை மதிக்கவொணு;
தெவிட்டாத் தேன்,நின் தரிசனமே!'' 3

# 27. அழியாச் செல்வம்

கங்கைநதிக் கரையினிற் 'சஞதன்' என்போன்
கவலையற்று, ஜபம்செய்து கொண்டி ருந்தான்.
அங்கொரு,பி ராமணன்வந்(து). "ஐயா, ஏழை,
ஆதரித்தோ ருதவிசெய வேண்டும்!'' என்ருன்!
புங்கவனே, எனக்குளதித் திருவோ டன்றிப்
பொருள்வேருென்றிலையென்று புகல,பார்ப்பான்,
'எங்குலதெய் வம்சிவன்தான், கனவில் தோன்றி,
எளியேனை நின்னிடமே ஏகச் சொன்னன்!'' 1

என்றதும்,அச் சாதுவுக்கு நினைவு வந்த(து);
''என்றேஓர் நாள் கூழாங் கற்க ளோடு
ஒன்ருகக் கிடந்தஉயர் மாணிக் கக்கல்
ஒன்றையெடுத் தேமண்ணிற் புதைத்தே னன்றே,
என்றேனும் எவருக்கும் உதவ!'' வென்றே,
இன்றிவனுக் கதைக்கொடுப்போம்!' என்ற
ழைத்துச்
சென்றதனைத் தோண்டியெடுத் தளித்தான்; அந்தச்
செம்மணிகண் டந்தணனும் திகைத்துப் போனன்!
2

விலைமதியாக் கவின்மணியைக் கண்டதாலே
வியப்பெய்தித் தரையினிலுட் கார்ந்து, மேற்கு
மலைமுகட்டில் கதிர்மறையும் வரைசிந் தித்தான்;
மாடாடும் இடையரொடு மனைநா டிற்று.
நிலைதெளிந்தான்; எழுந்துசஞ தனிடம் சென்ருன்;
நிமலகுரு வேநிலையாச் செல்வம் நீத்து,
அழியாப்பே ரான்மிகச்செல் வத்தில் இம்மி
அருளுக! ''வென்(று)இரத்தினத்தை எறிந்தான்
ஆற்றில்! 3

## 28. ஆசைத்தீ அணைப்பாய்!

பலசமயம் நின்வீட்டுக கதவண்டை
கைகூப்பிப் பலதும் கேட்பேன்;
சிலசமயம் மெதுவாகச் சிறிதளவும்,
சிலவேளை திடுதிப் பென்று
அளவுக்கு மேலதிக மாகவும்நீ
உதவிடுவாய்; அவற்றில் யானோர்
சிலவற்றை ஏற்பதுண்டு; பலவற்றை
நழுவவிட்டும் செல்வ துண்டு! 1

கரங்களிலே சிலபொருட்கள் கனத்திடும்;நல்
விளையாட்டுக் கருவி யாக்கிப்
பெரும்பாலும் களித்தலுத்த பின்புடைத்தே
எறிந்தவைகள் பெரிதும் உண்டு;
நொறுங்கியவற் றொடுநினது கொடைக்குவியல்
களும்சேர்ந்துன் நுண்தோற் றத்தை
மறைத்தன;என் பேராசை என்னுளத்தை
யேதேய்த்து மாய்த்த தந்தோ!

''அத்தனையும் நீயெடுத்துக் கொள்''எனும்,என்
குரல்ஒலியின் ஆரம் பம்கேள்!
உத்தம!என் திருவோட்டை உடைத்தெறிவாய்;
ஆசைத்தீ ஒருங்க ணைப்பாய்!
அத்தா!நின் நன்கொடையாம் அருஞ்சிறைவிட்
டகற்றியுன்றன் அகண்ட மோனப்
புத்தமைதிச் சந்நிதியிற் புல்லனெனைப்
பிடித்திழுத்துப் பொருத்து வாயநீ! 3

## 29. விளையாட்டு மோகம்!

தோல்வி யடைந்தோர் மத்தியிலே
தூண்போல் எனையும் நிற்கவைத்தாய்!
வாழ்வு தனில்யான் வெற்றிபெற
மாட்டேன் என்பதை நன்குணர்வேன்!
வீழ்வு வரினும் விளையாட்டை.
விடமுடி யாதென் பதும் அறிவேன்;
ஆழ்நீர் நிலையில் குதித்திடும்போ
தமிழ்ந்தா லும்,அதாற் கவலைகொளேன்! 1

அடியோ டென்னையே அழித்துவிடும்
விளையாட்டினையே ஆடுகிறேன்!
கடைசிப் பைசா தொலையும்வரை
கனத்த பொருள்யா வையுமிழந்து,
முடிவில் உயிரைப் பந்தயமாய்
முடிந்துவைத்தே சோதிக்கும்
கொடுமை நிறைந்த தோல்வியையே
வெற்றி யாகக் கொள்கின்றேன்! 2

* * *

# 30. நின் கருணை!

கந்தைத் துணியைச் சுற்றி, என்தன்
கட்டி மகளைப் பிச்சைக்கு
நிந்தைக் கிடமாய்த் தெருவினிலே
நீவிட் டிட்டாய்; அப்பொழுதோர்
சுந்த ரப்புன் முறுவலது
தூய வானிற் பறந்ததுதான்
விந்தை! அதனைக் கண்டவளும்
வியந்து மகிழ்ந்து நடந்திட்டாள்! 1

இல்லந் தோறும் சென்றிரந்து
பிச்சை யெடுத்து வரும்போது,
மெல்லி யல்தன் திருவோடும்
மிகுந்து நிற்கும்; என்றாலும்,
கொள்ளை யடிக்கப் பட்டிடுவாள்
கோதை; இதுபோற் பலதடவை!
உள்ளம் வெதும்பித் திரும்பிடுவாள்;
ஓடும் வரண்ட காட்சிதரும்! 2

அலைந்து திரிந்து நாள்முழுதும்
அலுத்துக் களைத்து வாடி, மனம்
நலிந்து முடிவில் வருவாள், நின்
நன்மா ளிகைக்கே! பேதையின், அந்
நிலையோ பரிவு தரும்! அப்போ
நீ, கைப் பிடித்துப் போயவளை
விலையில் நின்சிம் மாதனத்தில்,
அருகே இருத்தி விதந்திடுவாய்! 3

# 31. ஏழையின் துணிவு!

பஞ்சத்தீ சிராவஸ்தி என்னும் நாட்டில்
பரவிற்று! அதைக் கண்ட புத்த பிட்சு,
நெஞ்சுருகித் தம்சீடர் குழுவை நோக்கி,
''நிலைகுலைந்த மக்கள்பசி நீக்க வல்லார்
நுஞ்சார்பில் எவருள்ளார்?'' எனலும், சற்றே
நுண்ணமைதி நிலவிற்று; பின்எழுந்து,
நெஞ்சுலர்ந்து தலைகவிழ்ந்து நின்று சொன்னர்
நெடுவட்டித் தொழில்புரியும் ரத்தி னகர்! 1

''என்பொருட்கள் அத்தனையும் செலவிட் டாலும்
எத்தனைபேர்க் குணவுதரும்? இதுபோல் இன்
னும்
வன்பொருட்கள் மிகவேண்டி வருமே!'' என்று.
மன்னர்படைத் தலைவன் ரண சிங் எழுந்து,
''என்புனித உயிர்தனைக்கேட் பினும்,இப் போதே
இரணத்தியாகம் செய்தளிப்பேன்! எனினும்,
அந்தோ
பொன்பொருள்,நல் உணவெனது மனைய கத்தில்
போதுமள வில்லை''யெனப் புலம்பி நின்ருன்!
2

பண்ணைமிராஸ் நவதர்ம பாலன், நெஞ்சம்
பதைத்தபெரு மூச்சுடனே பகர்ந்தார்; 'ஐயோ,
விண்ணின்று மழைபெய்யாக் குறையால், என்றன்
விளைநிலமெல் லாம்வரண்டு விட்ட தந்தோ!
மன்னவனுக் கிவ்வாண்டு வரி செலுத்தும்
வகையேதென் றறியாது மயங்கு கின்றேன்!''
என்னலுமே, பிச்சையெடுத் துண்டு றங்கும்
ஏழைப்பெண் சுப்பிரியா எழுந்து நின்ருள்! 3

அனைவர்க்கும் நல்வணக்கம் செலுத்தி விட்டு,
அமைதியுடன் கருணைபொங்க, ''பசியால்
வாடும்
அனைவர்க்கும் உணவளிப்பேன் யானே!'' என்றாள்.
அங்குற்றோர் எல்லோரும் அதிச யித்து,
''உனக் கெவ்வா றிச்சபதம் முடித்தல் ஆகும்?
உரை!'' என்ன, உடனே, ''இங் குறைந்தி ருக்
கும்
அனைவரிலும் யானேதான் பரம ஏழை;
அதனாலே ஆற்றலெனக் கதிக முண்டு! 4

இங்குள்ளோர் பணமெல்லாம் எனக்குச் சொந்தம்;
ஏழை, இவர் பிள்ளை, எனக் கிலையென் பாரோ?
எங்கெங்கு பொருளுண்டோ அங்கங் கெல்லாம்
எனக்குரிமை யுண்டு; செல்வர் இல்லந்தோறும்,
சங்கோஜ மின்றிச்சென் றிரப்பேன்; சற்றும்
தளர்ச்சியுறேன்; உதைத்திடினும், தாள் பிடித்
தே
அங்கவர்தம் மனமுருக்கிப் பொருள் திரட்டி,
அரும்பசியைத் தீர்த்தெளியோர்க் கன்பு
செய்வேன்! 5

***

## 32. விடா மன்னன்!

அடியேன், எனது மன்னனையே
    அறிந்து கொள்ள விலை;எனவே,
படிமேல் கப்பம் கேட்டவர்தாம்
    பணித்த போதெல் லாம்,எனது
கடனைக் கொடுக்கா தொளிந்தொளிந்து
    காலங் கடத்தித் தலைமறைவாய்
நடிக்க நினைத்தேன்; சிறிததனுல்
    நச்சுப் பலமும் பெற்றிட்டேன்! 1

பகல்வே லைக்குப் பிறகும்,இராப்
    பதிந்த கனவின் பின்னரும்,யான்
மிகவும் விரைந்து மறைந்தொளிந்து
    விடுவேன்; ஆனுல், என்வாழ்வின்
அகமும் புறமும், தொடர்ந்துயிர்க்கும்
    ஆவி ஒவ்வொன் றிலும்,அவன்தான்
புகுந்து வருத்தித் தன்கப்பப்
    பொருளைக் கறக்க முயன்றிட்டான்! 2

அரசன் முற்றும் எனைநன்ருய்
    அறிந்துகொண்டு விட்டதன்பின்
மறைந்தே உறைய இடமொன்றும்
    வாய்க்க வில்லை;இன்று,அடியேன்
உரிய வெல்லாம் அவனடிக்கே
    உவந்தர்ப் பணித்து, வணங்கி,அவன்
அருளாட் சியின்கீழ் எனக்குரிய
    அம்சம் பெறவே விழைகின்றேன்! 3

## 33. நானும் நீயும்!

''மக்கள் தொழத் தக்கதொரு விக்ர கம்,என்
வாழ்வினின்றும் வடித்தெடுக்க முடியு மோ?''
வென்(று)
உட்குவிந்த சிந்தனையுட் புகுந்தேன்; ஆங்கென்
உருக்குலைந்த கனவுகள்,பே ராசை, துன்பம்,
மக்கிமடிந் திட்டபல ஏமாற் றங்கள்,
மாசுகள்,வெந் தூசியெலாம், வரிசை யாய்,நான்
துக்கமுடன் வெட்கிமனம் சோர்ந்து வீழத்
தொடர்ந்தெழுந்த தையோ,என் சொல்வேன்
அஃதை! 1

''நீவிரும்பும் படி,எளியேன் வாழ்வி னின்றும்
நின்னிதயத் துடிப்பையொட்டி நிகரில் லாவோர்
ஓவியம்நீ தருக''வென உனை விழைந்தேன்,
ஒப்பில்லாய்! அற்புதநின் உயிர் துடிக்க,
ஜீவகளை ததும்ப,அருட் கனல்தேன் சிந்த,
தெய்வீக எழில்தவழ, அமைதி கொஞ்சப்
பூவுலகு தொழும்சித்ரக் காவி யம்மே
புனைந்தளித்தாய், நின்பெருமை புகலற் பாற்றோ?
2

## 34. இறைவன் கோவில்?

''மன்னர்பிரான்! நீயமைத்த தெய்வக் கோயில்
வாயிலிலும் புகுந்திலர், நரேந்திர சாது!
விண்பரவு வெளியினிலோர் சாலை யோரம்,
விளங்குமரத் தடியில், உளங்குவிந்து, நாமப்
பண்ணிசைத்து நிற்கின்றார்; செம்பொற் கிண்ணப்
பைந்தேனை மறந்து,பங்க யத்தே னுக்கே
மண்டிவிரைந் தோடிமொய்க்கும் வண்டி னம்போல்
மாதவர்முன் பக்தர்குழாம் குவியு தந்தோ! 1

அணுகுபவர் இன்றிவெறிச் செனக் கிடக்கு
தையே,நம் கற்கோயில்!'' என, வணங்கிப்
பணியாளன் புகன்றிட்டான்! அதனைக் கேட்ட
பார்த்திபனும், நொந்து,நரோத் தமரை நாடி,
"புனிதகுரு வே!அடியேன், இழைத்த ரத்னப்
பொற்கோபு ரந்திகழும் கற்கோ யில்லில்,
இனிதமர்ந்து இறைவணக்கம் புரிந்தி டாமல்,
எந்தாய்!நீ வெறுந்தரையை ஏற்றதென்னே? 2

அடியார்கள் மனமுருகப் பரம பக்தி
யமுதூட்டும் அருள்வடிவே! குறை,யா தென்று
அடியேனுக் கருள்க!''எனப் பணிந்தான் மன்னன்.
அதைக்கேட்ட சா(து)அமைதி யாக, ''வேந்தே!
கடவுளர்நின் கோவிலிலே இல்லை யென்று,
கண்டதனால் தான்வந்திங் குற்றேன்!'' என்றார்.
முடியரசன் படபடென வெகுண் டெழுந்து,
முழுதுணர்ந்த தவமுனியை முனிந்து சொல்வான்;
3

‘‘இருபதுலட் சம்பவுன்கள் செலவிட் டன்றோ,
இச்சிறப்பச் செல்வத்தின் எழில் மணக்கும்
திருக்கோவில் அமைத்திறைவர்க் கர்ப்ப ணித்தேன்;
தெரியாதோ ஈதுமக்கு!’’ என்றான். அப்போ(து)
அருள்வடிவத் தவமுனிவர் புன்ன கைத்து,
அன்பொழுகக் கூறுகின்றார்; ‘‘அரசே, யாவும்
அறிவேன், நற் கோயிலைநீ அர்ப்ப ணித்த
அவ்வாண்டில், அப்பொழுது நடந்த வெல்லாம்! 4

ஆயிரமா யிரம்குடிகள் தீ,வி பத்தால்
அவதியுற்று வீடிழந்து, உதவிக் காய்,நின்
வாயிலண்டை வாடி நின்றார்; இந்தப் பஞ்சை
மக்கள்துயர் நீக்கவழி வகுக்கா தோன்,பொற்
கோயிலெனக் குத்தருகின் றானாம்!’’ என்று
கொற்றவனின் அருளிச்சை எழுந்த தப்பா!
‘‘நாயனாம்,இஃ தால்தான்இவ் வெளியே, ஈசன்
நல்லன்புக் கோயிலென நாடி உற்றேன்! 5

அதனால்தான் நின்கோவில் புகுவா ரற்ற(து);
அங்கே,நான் கட்டிவைத்தேன் எனும் அகந்தை
மதச்சின்னம் தான்நிலவு’’ தென்றார் அண்ணல்!
மன்னன் வெகுண்(டு), என்னாட்டை விட்டோ டென்று
முதியவரைக் கடிந்துகன லுமிழ்ந்தான்; சாந்த
மூர்த்தி,உடன் முறுவலித்து,‘‘ஆம்! இறைவன் இச்சை
இதுவே;எம் இறைவனைநீ துரத்தி விட்ட
இடத்திற்கேஎனையும்விரட் டிடுக!’’ என்றான்.

## 35. வெற்றி முழக்குக!

வெற்றி எட்டெட்டுத் திக்கும் எட்டவே,
  வீறு டன்ஜய பேரிகை கொட்டுவீர்!
சுற்றி டும்இடர்ப் பேய்கள் நடுங்கவே,
  ஜோதி ஞானப்போர் வாளைச் சுழற்றுவீர்!
பற்றிப் பாரைச் சிதைத்திடும் நாத்திகப்
  பகை யொழிந்திட பக்தி முழக்குவீர்!
சற்றும் அச்சமில் லாஇளங் காளைகாள்,
  சத்ய யுத்தநா தத்தை எழுப்புவீர்! 1

வீரச் சின்னங்கள் யாவும் புழுதியில்,
  வீறு குன்றிக் கிடப்பதைக் காணீரோ?
காரி ருள்கவிந் தின்ஒளி மங்கி,இக்
  காலந் தீதெனக் காட்டுதல் நோக்குவீர்!
தீரர் காள்,உடன் ஆர்வக் கனல்எழத்
  திண்மை மிக்க ஜெயக்கொடி தாங்குவீர்!
ஆர்க லித்து,எக் காளத்தை ஏந்துவீர்!
  அங்கம் பூரிக்கச் சங்கெடுத் தூதுவீர்! 2

நாள னைத்தும் உழைத்தலுத் திட்டபின்,
  நான் தனித்துச் சுகம்பெற எண்ணினேன்;
மாலைக் காணிக்கை ஏந்தி,நின் கோயிலின்
  வாயில் நோக்கி,வாழ் வுப்பெரும் பாதையில்,
கால் கடுக்க நடந்தனன்; ''ஐய,என்
  கட்ட றுத்து மனப்புண்ணை மாற்றி,நின்
தாள் பிடித்துக் கிடக்கும்நற் பேறருள்;
  தந்தை யே!'' என வந்தடைந் தேனுனே! 3

ஆயின், அப்ப! நின் தூயவெற் றிச்சின்னம்
  அழகி ழந்து புழுதியில் தோய்ந்திதோ,
காய்வ தைக்கண்டு சேய்மனம் நோகுதே!
  கருணை வள்ளலே! இரவு கவியுமுன்,
வாய் மனைதொறும் அந்தி விளக்கிடல்
  மரபன் றோ?என்றன் வாழ்க்கையில், மாலையின்
தூய் விளக்கிடும் வேளையீ தல்லவோ?
  சுத்த னே,இன்னும் சோதனை செய்வதேன்? 4

இரவு, விண்சுடர்க் கன்புத்தா லாட்டுதல்
  இல்லை யோ?செவ்வி தழ்க்கம லம்வென்ற
திருமு கத்த! உறக்கம் இழந்தன,
  செயென் கண்கள்; தளர்ந்தனன் மூப்பினால்,
இறைவ! ஒடிச் சலசலத் திட்ட,வாழ்
  வென்னும் யாத்திரை இத்துடன் தீர்ந்தது;
இறுதி யாய்நின் கடனும் முடித்தெனென்
  றெண்ணி னேன்;அந்தோ, இன்னும்வாழ் வுள்
ளதே! 5

ஆழ்ந்த மோனத் தமைதியைப் பெற்றிட
  வல்ல, நானின்றுன் சந்நிதி யுற்றது!
'சாந்தி நல்கெ'ன் றிதுவரை வேண்டின
  தன்மைக் காக,யான் நாணினேன்; ஏனெனில்,
வேந்த! நின்வெற்றிக் காளம்புழுதியில்
  வீழ்ந்து றங்கிடக் கண்டிட்டேன்; ஆதலால்.,
சூழ்ந்து வெம்பகை மோதினும், யாவையும்
  சுக்க லாக்கும் கவசமே வேண்டினேன்! 6

நெஞ்சில் மண்டிய பேரிருள் ஓட்டுவாய்;
 நீசக் காமப் பொறாமையை வாட்டுவாய்!
நஞ்சு மீழ்,பயப் பாம்பினைக் கொல்லுவாய்;
 நானெ னும்,அகம் பாவத்தைக் கெல்லுவாய்!
வஞ்சி னக்கொடும் பேயை விரட்டுவாய்;
 மைந்தன் என்னுள்நின் மாண்பை நிரப்புவாய்!
தஞ்ச மென்றடைந் திட்ட,என் வாழ்விலுன்
 சக்தி பொங்கித் தழைத்திடச் செய்குவாய்! 7

இன்னும் ஏழையென் விண்ணப்பம் கேட்டருள்;
 இழிவு கொண்டவென் தளர்வினைப் போக்கி,நின்
மின்னும் மோகனப் புன்னகை யால்,எனுள்
 வீறு பொங்கிடும் பேரிள மை,எழில்,
திண்மை தந்துன் பெருங்கரு ணைக்கடல்
 திளைத்து, நெஞ்சம் சிலிர்த்திடப் பேரின்பம்
உண்ணச் செய்க;யான் நின்புகழ்ச் சின்னத்தை
 உலகில் என்றும் நிலைபெற நாட்டவே! 8

அப்ப! நீயெனக் கிப்படிச் செய்திடின்,
 அச்சு றக்கம்விட் டிட்சணம் மீளுவேன்!
எப்ப டிப்பகை யம்பு பொழியினும்,
 எட்டிப் பாய்ந்தத னூடு விரைகுவேன்!
சொற்ப வாழ்வெனும் பாதையில் மோதிடும்
 துன்பப் பாறைகண் டஞ்சிக் கிடந்திடேன்!
தப்பி டாதுநின் வெற்றி மணிக்கொடி
 தாங்கி, எங்கணும் ஓங்கப் பணிசெய்வேன்! 9

வைய கத்துளீர்! நும்மிலே ஓர்சிலர்
மட்டு மேனும், அனைத்தும் துறந்துவிட்(டு),
ஐய மற்றுடன் வருக,என் னோடு;என்
ஆர்வந் தன்னில்வந் தணைக; சுயநலச்
செய்ய போகிகள் கனவுகண் டழுது,பின்
சென்றி டட்டும்;இன்(று) எப்படி யேனும்,நாம்
ஐய னின்வெற்றிக் காளம் முழக்கியே
ஆக ணும்,விரைந் தோடி வருவிரே!

# 36. சௌந்தரிய சக்தி!

தாயே!என் சௌந்தரிய சக்தி! உன்றன்
தன்மையறி யார்,மூட பக்தி யால்,நின்
தூயவுடல் தழுவிடுமென் கலையை அந்தோ,
தூசுபடுத் தினர்;அதைக்கண் டேழை நெஞ்சம்
ஓய்வின்றித் துடித்ததம்மா! இரவெல் லாம்,கண்
ணுறங்காது களிவெறியில் தோய்ந்த, அந்தப்
பேயர்கள்தம் செவ்விழிமேல், காலை வெய்யில்
பெருகிற்(று)என் ருலும்கண் திறக்க வில்லை! 1

செவ்வல்லி பூத்தகுளத் தென்றல் வந்து
ஜில்லென்று வீசி,அவர் தணல்மூச் சிற்குப்
பவ்யமுடன் துதிபாடிக் குளிர்பாய்ச் சிற்று;
பரந்த இருள் ஆழத்துள் உறைந்த மீன்கள்
செவ்வெறியர் தமைக்கூர்ந்துநோக்கிற்று;ஆனுல்,
''தெளிந்திலதன் ஞர்உறக்க மயக்கம் அம்மா!
இவ்வறியா மூடரைத்தண் டாயு தத்தால்
இடித்தெழுப்பி நீதியருள்'' எனப்பிரார்த் தித்
தேன்! 2

அருளாட்சி புரிந்திடுநின் அரிய ணைதான்,
அலர்பொழிலில், வசந்தப்புள் ளிசையில், மோதும்
திரைகானம் தனக்கமைதிச் சுருதி கூட்டும்
திவ்யதருக் கூட்டத்தின் நிழல் கவிந்த
விரிநதியின் கரைகளில்அன் ரோஉண்(டு)? அன்னுய்!
விழல்மூடக் கொள்கையினர் நின்பாற் கொண்ட
பரிவெல்லாம் வெறுமயக்கம்; அவர் நினைத்த
படியே,உன் றனையமைக்கப் பார்க்கின் ருரே! 3

எனவே,நின் அணிமணிகள் தமைப் பறித்து
  இரவினிலே பதுக்குகின்ருர் மடையர், அந்தோ!
புனிதே!நின் தனையுருக்கி வார்த்தெ டுத்துன்
  பூமேனி தனையிவர்புண் படுத்தும் போ(து),என்
மனதினிலே பளிச்சென்ருேர் வேல் புகுந்த
  வடுவொன்று வருத்தியது; உடனே ''தேவி,
நினதுசுடர் வாளேந்திக் கொடிய ருக்கு
  நீதிபுகட்'' டெனப் பதைத்தேன்; செவிசாய்த்
                                    திட்டாய்! 4

அன்பரசி! நின்கருணைத் திறம்என் னென்பேன்!
  அறிவிலியர் கொடுமைகளைப் பொருள் படுத்தா(து)
என்புருக்கும் அன்புக்கண் ணீரு குத்தாய்;
  எந்தாய்!நின் மாருப்பே ரன்புக் காதல்,
பண்பற்ருேர் நிந்தைமொழி யனைத்தை யும்நற்
  பரிவொடுதன் மனப்புண்ணில் மறைத்த தம்மா!
அன்பினிலே, துன்பமைதி யதனில், தீனர்
  அழுகுரலில் அன்ருே,நின் அருள் துலங்கும்? 5

கட்டற்ற பேராசைக் கயவர், அந்தோ
  கண்ணற்று நின்வாசற் கதவிற் தாவி,
முட்டற்ற நள்ளிரவில், உக்ரா ணத்தை
  முழுமூச்சாய் உடைத்ததனுட் புகுந்துன் தூய
பட்டணி,பொன் னகைக்கொள்ளை இட்டார்; அந்
                                    தப்
  படுகொள்ளைப் பொருள்,சற்றும் நகர்த்தொ
                                    ணது,
மட்டாந்தார்; அதையான்கண்(டு), ''அம்மே! நீயிம்
  மடையரைமன் னித்தருள்!''என் றுருகி நின்றேன்.

வித்தகி, நின் கருணைரசம் புயல்போற் சீறி,
  வெடித்துடனே பொழிந்தவரைக் கீழ்வீழ்த் திற்று!
நத்தியகொள் ளைப்பொருட்கள் புழுதி மண்ணில்
  நாற்புறமும் சிதறிற்று; தாயே, நின்றன்
உத்தமநற் கருணைக்க டாட்சத் தையின்(று)
  ஒளிமின்னற் கொடியில், இடி முழக்கில், கொட்டும்
சக்திமிகு செங்குருதிப் பொழிவில், சூர்யாஸ்
  தமனத்தின் சினத்தியில் அன்றோ, கண்டேன்! 7

## 37. காலம் வந்தது!

புத்தர்பிரான் சீடர்உப குப்தர், ஓர்நாள்
புகழ்மதுரா புரிமதிலின் சுவரோ ரத்தில்,
நித்திரையில் ஆழ்ந்துவிட்டார் புழுதி மண்மேல்!
நெடுவீதி விளக்கனைத்தும் அணைந்தா யிற்று!
சத்தமிட்ட கதவுகளும் சாத்தப் பட்டுத்
தண்ணமைதி நிலவிற்று நகரில்! வானைப்
புத்தணிசெய் மீனினமும், ஆடி மேகப்
பூந்திரைக்குள் முற்றுகப் புகலா யிற்று! 1

உறக்கத்தில் ஆழ்ந்தவர்தம் நெஞ்சைத் தொட்டு
உலுக்கியதோர் சலங்கையொலி! உடனே குப்தர்
விருட்டென்று அதிர்ச்சியுடன் விழித்தெ ழுந்தார்!
விண்கருணைக் கண்களில்,ஓர் பெண்கை யேந்தும்
சிறியதொரு விளக்கினெளி தைத்த தப்போ!
தேடியடைந் திட்டவளோ, நடன மாடும்
ஒருதாசிப் பெண்;அவள்தம் உடம் பனைத்தும்
ஒளிவீசும் சுடர்நகைகள் பொலிய லாச்சு! 2

மேனியிலே ஒளிநீலச் சல்லாப் பட்டு
மேகமெனப் படர்ந்திருக்க, வெறியை யூட்டிக்
காணுபவர் நிலைகுலைக்கப் பூரித் தோங்கும்
கட்டுடலம் பெற்றஇளங் கன்னி! அன்னுள்!
ஞானஒளி தவழும்உப குப்தர் தூய
நன்முகத்தைக் கைவிளக்கால் நன்கு பார்த்தாள்,
ஊனமிலாப் பேரழகும் இளமையுங் கண்(டு)
உண்மையிலே திகைத்துவியப் புற்றுப் போனுள்!
3

★

''இளந்துறவீ! எனைமன்னித் தருள்க! அன்பொ(டு)
எனதுமனைக் கெழுந்தருள்க! இந்த வீதிப்
புழுதியிலே தாங்கள்படுத் துறங்க லாமா?''
புகன்றிட்டாள் கனிந்தமொழி, பொது மகள்
தான்!

''எழில்மாதே! நீ,வீதி வழியே செல்க!
ஏற்றதொரு காலம்வரும்; வருவேன் அப்போ!''
மொழிந்திட்டார் இதைச்சாது! பளிச்சென் றுங்கு
முன்னிருளைப் பிளந்துமறைந் தது,ஓர் மின்னல்! 4

விண்ணிலொரு மூலையிலே உறுமிற் றப்போ
வெம்புலிபோற் புயலொன்று! அதனைக் கேட்ட
பெண்ணணங்கு நடுக்குற்றாள்; பாதை யோரப்
பெரும்பகுதி மரக்கிளையில் அரும்பி நின்ற
கன்னியெலாம் இதழ்வெடிக்கத் தொடங்கிற்(று);
ஆங்கே
கனதூரத் தினிலிருந்து வசந்தக் காற்றின்
தண்ணலைக ளுடன்,புல்லாங் குழலி சைத்தேன்
தமிழருவி யெனமிதந்து சார்ந்த தெங்கும்! 5

ஆண்டுபல சென்றுவிட்ட பின்போர் கங்குல்;
அடவியினுள் அம்மன்பூச் சொரிவி ழாவை
வேண்டியங்கு சென்றுவிட்டார் நகர மக்கள்!
விண்ணகத்தின் நடுவிருந்து முழுவெண் திங்கள்,
நீண்டபெரு மோனத்தில் ஆழ்ந்தி ருக்கும்
நெடுமாட வீதிநகர் நிழல்மீ தெல்லாம்
ஈண்டுருகு வெள்ளியினும் ஒளிவெள் ளத்தை
இறைத்தமுத புரியாக்கிக் கொண்டி ருந்தான்! 6

தனித்துநம திளந்துறவி நிசப்த மாம்,அத்
தடந்தெருவில் விரைந்தெங்கோ நடந்து சென்
றார்!
புனிதரவர் தலைக்குயரக் காதல் நோயால்
பொறிகலங்கி விட்டஇளம் பூங்கு யில்கள்,
இனியதளிர் மாங்கிளைகள் மீத மர்ந்து
இன்துயிலில் லாக்காதல் இசைபா டிற்று!
வினைகடந்த உபகுப்தர், நகர்ப் புறத்தின்
வீதிகடந் துயர்கோட்டை மதில் கடந்தார்! 7

காலடியில், மரநிழலிற் கிடப்ப தென்ன?
கருங்கட்டை யன்றொருபெண் உருவமன்றோ?
காலத்தின் பெருமையினால் நிலை குலைந்த
கரியஉரு; கொடியவிஷப் புழு நெளியும்
தூலமெலாம் புண்ணின்மயம்; சொல்லக் கூசும்
தொழுநோயின் உறைவிடமாம்; துணையா ருண்டு?
ஞாலத்திற் காபத்தென் றொதுக்கி, அந்த
நகர்க்கப்பால் கிடத்திவிடப் பட்ட நங்கை! 8

அருகமர்ந்தார் துறவி;அவள் சிரத்தைத் தூக்கி
அன்பாகத் தம்மடிமேல் அணைத்தார்; காய்ந்து
சருகான உதடுகளை நனைத்தார் கொஞ்சத்
தண்புனலால்; புண்களிலோர் தைல மிட்டார்!
''கருணையுருத் தாங்கிவந்த தாங்கள்..?'' என்று
கண்திறந்தாள் தாசிப்பெண்! ''ஏற்ற காலம்
வருமெனமுன் மொழிந்தஅந்தக் காலம், இப்போ
வந்தது;நான் வந்தேன்!''என் றுரைத்தார் சாது!
9

## 38. புரட்சிக் காதல்!

காதல, இனிந மக்குள்
    வீண்ஊடற் கதை யிராது;
பேதையென் மேல் தொடர்ந்து
    பெரும்புயல், அனந்தம் கங்குல்
மோதி,என் விளக்க ணைத்து,
    முன்றில்வான் சுடரை யெல்லாம்
பேதுற மறைத்தென் நெஞ்சில்
    பேரிருள் வளர்த்த துண்டு! 1

பலமுறை கட்டு மீறி
    பாலாற்றுக் கரையு டைந்து,
விளைந்தஎன் நிலம னைத்தும்
    வெள்ளத்தால் அழிந்த துண்டு;
கலக்கமும், துயர் நிறைந்த
    கதறலும் பேரி ரைச்சல்
முழக்கமும் எனது வானை
    முட்டிநிர்த் துளியாக் கிற்று! 2

ஐய,நின் காதல் தன்னில்
    அதிர்ச்சியும், இடிமு ழக்கும்,
மையிருட் புயலும், மின்னல்
    வாள்நகை வீச்சு மன்றி,
மெய்யிலே உணர்ச்சி யற்ற
    வெறுமர ணத்தைப் போன்ற
தொய்வுறும் அலட்சி யத்தின்
    தொடர்பில்லை யெனக்கண் டிட்டேன்! 3

# 39. வெற்றி ஒளி

சுவர்வெடிக் கின்ற(து); ஆகா!
சுத்தனின் சுடர்ச்சி ரிப்பே
புவனமா ளிகையுள் மண்டிப்
புகுந்தது போலும்! கங்குற்
பவஇருள் நெஞ்சு டைந்து
பட்டது; வெற்றி யே! நின்
நவஒளி வாளால், ஐயம்,
நப்பாசை யனைத்தும் வீழ்த்தாய்! 1

வெற்றியே, வீரம் மிக்க
வேந்தனே, வருக! எல்லை
யற்றவோர் சக்தி யே,பே
ரழகுநீ, வருக! ஓங்கு
கற்றைவிண் ணொளிப் பிழம்பே,
கனன்றிங்கு வருக! தூய்மை
பற்றுநின் வெண்மைப் பாங்கே
பயங்கர சௌந்தர் யந்தான்! 2

மூண்டதீ முன்பு நின்போர்
முரசொலி முழங்கு தந்தோ!
நீண்டசெந் நிறத்தீ தீவர்த்தி
நிமிர்ந்தொளி பரப்புதம்ம!
தூண்டொணுச் சோதி! நின்றன்
சுடர்தனில் மரண மெல்லாம்
மாண்டிடு தன்றோ? நின்றன்
வன்மையார் உரைக்க வல்லார்? 3

## 40. சுந்தர நெருப்பே!

சுந்தர நெருப்பே, அன்புச்
சோதர, உனக்கு வெற்றி
வந்தனை பாடு கின்றேன்;
வாழிநீ! அச்ச மூட்டும்
விந்தைசேர், சுதந்தி ரத்தின்
விறல்மிகு ஒளித்தேன் மண்டும்
செந்தழல் அமுதே, நீதான்
திக்கெட்டும் பரவு கின்றாய்! 1

விண்ணெட்டக் கரங்கள் தம்மை
வீசுகின் றாய்நீ; வீணை
மென்னரம் புகளில், உன்கை
விரல்கள்பாய்ந் தமுதம் போன்ற
இன்னிசை யெழுப்பும்; அந்த
எழில்மிகு நடன கீத
நன்னயம் உரைக்க, என்றன்
நாவுக்கு வன்மை யுண்டோ? 2

மரணத்தின் கொடிய வாயில்
மகிழ்ந்தெனைப் புகுத்தும், அந்த
இறுதிநாள் கழிந்த பின்(பு),என்
எழில்மிகு தசை நிறைந்த
உறுதிகொள் கால்கை யெல்லாம்
உவப்புடன் நீறு செய்வாய்!
எரிந்துட ன் சாம்ப லாகி
என்னுடல் கலக்கும் உன்னுள்! 3

புயலெனச் சீறிப் பாய்ந்து
பொசுக்கிடும் நெருப்பே! உன்றன்
பயங்கரச் சுழலில் சிக்கிப்
பதைக்கும் என் இதயமும்;என்
உயிர்க்கனல் மின்னிக் கொண்டுன்
ஒளிமிகு ஜோதி தன்னுள்
நயமுடன் கலந்து கொள்ளும்;
நானுனை யன்றி வேறு? 4





# 41. படகோட்டி

கொடிய கங்குல்; கரியஇருள்;
குமுறும் கடலைப் படகோட்டி,
கடிதிற் கடந்து கொண்டிருந்தான்;
கலங்கித் துயரால் பாய்மரமும்,
துடியாய்த் துடித்துத் தவித்திடவே,
சுழற்றும் புயற்காற் றதனிடத்தை
இடித்துப் புகுந்து பிடித்ததந்தோ!
எங்கும் துடிப்பின் எதிரொலியே! 1

தீய இரவின் விஷக்கொடுக்கால்
தீண்டப் பட்டுப் பயமுற்ற
தூய வானம், குரைகடல்மேல்
சோர்ந்து சாய்ந்து வீழ்ந்ததுகாண்!
மாய இருள்மேல் கடல்அலை,தம்
வலிய தலைமோ திடச்சீறிப்
பாய்கின் றன;என் றாலும்,அவன்
படகால் கடலை நீந்துகிறான்! 2

இருண்ட வெளியைப் பாய்மரத்து
இளவெண் ணிறத்தின் உதவியினால்,
திரண்ட இரவே அதிர்ச்சியுறச்
செலுத்து கின்றான் படகதனை!
விரைந்தே இவன்செல் வதுமெங்கே?
விந்தைச் சந்திப் பெங்குளதோ?
உறங்கும் நிசியில், கடலில்,இவன்
ஓடும் மர்மம் யார்கண்டார்? 3

கடலின் எந்தக் கரையருகோ
காணும் வீட்டில், விளக்கினொளி
குடிகொள் மோன வாசலிலே,
குந்திப் புழுதித் தரைமீது,
விடியும் வரைக்கும் வழிமேலே
விழிவைத் திருக்கும் எந்தப்பெண்
கொடியைக் காண, இவன்ஆவல்
கொண்டுள் ளானோ யாமறியோம்! 4

புயலை இருளைக் கடலலையைப்
பொருளாய்ச் சற்றும் கருதாமல்,
அயரா தே,முன் செல்படகின்
ஆர்வப் போக்கின் நோக்கெதுவோ?
உயர்ந்த நவமா மணிவகைகள்
உளவோ படகில்? இல்லை;விலை
வியந்து மதிக்கத் தக்கபொருள்
வேறொன் றினையும் காணேமே! 5

அழகு ரோஜா மலரொன்றை
அவன்கை பற்றி யுள்ள(து):அவன்
விழைவுக் காதற் பாட்டொன்று
வேலைக் காற்றில் மிதந்திடுது!
விழிமூ டாமல் இரவெ ல்லாம்
விளக்கின் முன்பு தனியாக,
வழிபார்த் தவனை எதிர்நோக்கும்
வனிதைக் கோதான், அவையிரண்டும்? 6

குறுக்குப் பாதை ஒதுக்கத்துக்
குடிலில் அவள்தான் வசிக்கின்றாள்;
முறுக்கிப் பின்னுக் குழல், காற்றில்
மோதி யலைந்தே, அவள்கண்ணை
மறைக்கு(து); அவள்தம் உடைந்தசிறு
மக்கிப் போன கதவின்வழி
உறுக்கிப் புகுந்து கதறிடுது
ஓயா தலையும் பேய்க்காற்று! 7

துடித்துத் துடித்து மண்விளக்கின்
சுடர்கள் சுவரின் மேல்நிழலை
அடுக்கி அடுக்கிச் சொரி ந்திடுது;
அலறும் காற்று, தன்பெயரை
எடுத்துச் சொல்லி யழைப்பதுபோல்
எண்ணு கின்றாள்; எனினும், அவள்
உடுத்த பெயர்தான் யாதாமோ?
உரைக்க நமக்கிங் கியாருளரே? 8

நீண்ட தூரம், வெகுநேரம்
நீந்திப் படகைக் கடந்ததனால்,
ஈண்டு வருவான் படகோட்டி
இளைத்துக் களைத்து; விடிவதன்முன்
ஊன்றிக் கதவைத் தட்டிடுவான்;
ஊரார் யாரும் அறியார்கள்
பாண்டு முரசு முழங்காது
படகோட் டியின்நல் வரவுணர்த்த 9

ஒளியால் மட்டும் பொலிவுற்று
ஓங்கும் இல்லம்; புனிதமுறும்
புழுதி; அவள்தன் காதல்உளம்
பொங்கி இன்பக் கடலாகும்!
அலையும் ஆழிக் கரையை,அவன்
அடையும் பொழுதே, மௌனமுடன்
தொலையும் அவளைப் பற்றிய தோர்
துயர்,சந் தேகம், பயமெல்லாம்!

* * *

## 42. பொன்னடி காண்பாய்!

பெருகிய கடலாம் இந்தப்
பெரும்புவி வாழ்வு; அஃதில்
குறுகிய கால்வா யாம்,இக்
குவலயத் தெனது வாழ்நாள்;
சிறுதுளி உயிர் பொதிந்த
சிற்றுடல்; அதனைப் பற்றி
வருடங்கள் எத்த னையோ
வாழ்ந்துளேன்! அதனால் என்ன? 1

ஒளியுடன் ஆங்கே யுள்ள
இருளுமே ஒன்று தானா?
தெளிவுற அதையின் னும்நான்
தெரிந்துகொண் டிலனே! என்றும்
நிலைபெறு சுதந்த்ரம், எங்கும்
நிறைந்தபே ரருளே யன்றோ?
வெளியன்பில் மயங்கி, நேர்மை
தவறுமோ விமலன் நீதி? 2

ஊமைபோல் இருட்ட றைக்குள்
உறுதியாய் நடித் துயர்ந்த
தூய்மைசேர் முத்தெ டுக்கச்
சிப்பியைச் சுக்கல் செய்வான்;
பாமர நெஞ்சே! நீயப்
பரனருட் செயல்காண் பாயோ?
பூமியில் தொலைந்து போன
நாளுக்குப் புலம்பி டாதே! 3

இனிவரும் நாளைப் பற்றி
எண்ணிஇன் புறுக! அந்தோ
மணியடித் திட்ட திப்போ,
வந்தது காலம்! சற்றும்
சுணங்கிடேல்; பிரியும் பாதைத்
தொடர்கண்டு விடைபெற் றுச்செல்!
புனிதயாத் திரிக நெஞ்சே,
பொன்னடி காண்பாய்; அஞ்சேல்! 4

## 43. பணிப் பெண்ணின் பக்தி!

திருவருள் வடிவப் புத்த
தேவனின் சின்னம் தாங்கி,
ஒருபெரும் ஆல யத்தை
உயர்த்தினன் பிம்பி சாரன்
திரள்மணி முத்தெ ழுத்துத்
திகழ,வெண் சலவைக் கல்லில்
அருள்மணி வாழ்த்தொ லிக்க
எழுந்தது அரிய கோவில்! 1

மாலையில், ஆல யத்தில்,
மலருடன் தீப மேற்றி
சீலமாய் வணங்கிச் செல்லத்
தினமுமா ளிகையி னின்றும்,
கோலமா மன்னர் பெண்கள்,
குதூகலப் புதும ணப்பெண்
பாலர்கள் பலரும் வந்து
பண்புடன் சேர்வ துண்டு! 2

அரசனின் மைந்தன், நாட்டுக்
கரசனாய் வந்த பின்பு,
நெறிசெய்த தந்தை தெய்வக்
கொள் கைக்கே நேர்மா றாக,
அரியஆன் மீக ஞான
தத்வநூல் அனைத்தும், ரத்த
வெறியுடன் நெருப்பி லிட்டுக்
கொளுத்திடும் விதி சமைத்தான்! 3

இலையுதிர் வசந்த காலம்;
எரிபகற் பொழுது சாய்ந்து,
மலருடன் பூசை செய்யும்
வனப்புறும் மாலை வேளை;
நலமுறு மன்னன் தேவி,
நல்லதோர் பணிப்பெண், புத்தர்
ஒளிமல ரடியி ணைக்கு
ஒப்பிலாப் பக்தி பூண்டாள்! 4

புனிதநீ ராடித் தங்கப்
புதுத்தட்டில் தீப மேந்தி,
பனிப்புது மலர்வ ளோடு,
பண்பு. நல்லமைதி பொங்க,
இனியகண் மணி துலங்கும்
இருகரு விழி யுயர்த்தித்
தனிமோன முடன், இராணி
தண்முகம் சார்ந்து நின்றாள்! 5

பணிப்பெண்ணைக் கண்ட தேவி
பயந்துளம் துடித்தாள்; "என்ன
வினையடி செயத் துணிந்தாய்?
வேந்தனே, "புத்தர் கோயில்
அணுகியே பூஜை செய்வார்
அனைவர்க்கும் மரணம்" என்றே
மணிமுர சறைந்த செய்தி
மடப்பெண்ணே அறியா யோநீ?" 6

என்ற,நல் இராணிக் கப்போ
இன்வணக் கம்செ லுத்திச்
சென்றனள். வெளியே அந்த
ஸ்ரீமதி பணிப்பெண்! பின்னர்
மன்றல்செய் தரசன் மைந்தன்
மணப்பெண்ணுய்ப் புதிதாய் வந்த,
நன்றெழில் செய்து கொள்ளும்
அமுதாமுன் நாடி நின்ருள்! 7

தங்கத்தாற் பிடித்த சட்டம்
தாங்குகண் ணுடி தன்னை,
நங்கைதன் தொடையிற் சாத்தி,
நறுங்கருங் கூந்தல் பின்னிப்
பொங்கெழில் வகிடுக் கேற்பப்
பொன்னிளம் பிறைநெற் றிக்கு
மங்கலத் திலக மிட்டு
வனப்புச்செய் திருந்தாள் அன்னுள்! 8

சிரிமதி நிலையைக் கண்ட
அமுதாவின் செங்க ரங்கள்,
பரபரப் புடன் நடுங்கிப்
பதைத்தன; பயத்தால் வேர்த்தாள்!
"ஒருவிநா டியும்நீ இங்கு
உறைந்திடேல்; ஓ(டு),எ னக்குப்
பெரியதோர் ஆபத் தைநீ
பெயர்த்துவந் துள்ளாய்!" என்ருள்! 9

அரசிளங் குமரி சுக்லா
சாளரத் தருக மர்ந்து,
இரவியின் மறைவு நல்கும்
இன்னொளி தனிலோர் நாவற்
பெருங்கதை தனைச் சுவைத்துப்
படிப்பதில், பெரிதும் ஆழ்ந்தும்
நறுமல ருடன்வந் திட்ட
நங்கைகண் டாள், பதைத்தாள்! 10

நாவலோ மடியி னின்று
நடுங்கிக் கீழ் விழுந்த தப்போ;
பாவைஸ்ரீ மதியின் காதில்
பரிவுடன் புகன்றாள் சுக்லா;
''பூவைநீ அச்ச மற்ற
புனிதைதான், எனினும், பொல்லாச்
சாவை,ஏன் தேடு கின்றாய்?
சடுதியில் விரைந்தோ டிச்செல்!'' 11

பலமனை தாண்டி விட்டாள்
பணிப்பெண்;கம் பீர மாகத்
தலைதனை உயர்த்தி, உள்ளத்
தவிப்புடன் குரல் கொடுத்தாள்;
''நலமிகு அரசர் பெம்மான்
நற்குலப் பெண்காள்! புத்தர்
மலரடி தொழ விரைந்து
வருக,நற் றருணம் இஃதே!'' 12

சட்டென்று கதவைச் சாத்தித்
தாளிட்டார் சிலர் பயந்து!
முட்டாளென் றவளைத் திட்டி
முடித்தனர் சிலர்; விசும்பைத்
தொட்டமா ளிகைமேல் ஓங்கும்
வெண்கலத் தூபி மீது
பட்டபொற் கதிர்கள், மங்கி
மறைந்தன பரிதி யோடு! 13

தெருமுனை களிலே சின்னஞ்
சிறுநிழல் தவழ்ந்து செல்ல,
பெருநகர் இரைச்ச லெல்லாம்
பெரிதும்ஓய்ந் தன முழங்கி!
அருகுள சிவனார் கோவில்
மணியோசை, அந்திப் பூசை
வருகையை உணர்த்த, மாலை
மடிந்திருள் பரவ லாச்சு! 14

நீலத்தைக் கரைத்த ஏரி
நீரென இருள்தோன் றிற்று!
கோலமெல் லொளியை வீசித்
துடித்தன உடுக்கள் கூட்டம்!
மாளிகைப் பூந்தோட் டத்துக்
காவலர், மரங்க ளூடே
ஆலயந் தனில், விளக்கு
வரிசைகண் டச்ச முற்றார்! 15

உருவிய வாள்க ளோடும்
ஓடோடிச் சென்றூர்; ஆங்கு
சிறுபணிப் பெண்ணைக் கண்டார்;
திகைத்தனர், கேட்க லுற்றூர்;
''மரணத்திற் கஞ்சி டாத
மதிகெட்ட பெண்ணே, நீயார்?''
''அருளுருப் புத்தர் பக்தை,
அடியவள்'' கனியச் சொன்னுள்! 16

அடுத்தவோர் கணத்தில், காவ
லாளியின் கூர்வாள் பாய்ந்து,
குடித்தது பணிப்பெண் ஆவி!
இதயத்தின் குருதி வெள்ளம்,
தடித்துணர் வற்ற கல்மேற்
சரிந்தது! உளம் வெதும்பித்
துடித்துமாண் டது,விளக்குச்
சுடர்,கோவிற் படியின் மீதே! 17

* * * * *
* * * *
* * *

# 44. பிரிவகற்றும் இரவு!

இடைநடுவில் நின்று, நமை
ஏங்கப் பிரித்துவைக்கும்
கொடிய பகல், முடிவில்
குறைந்து மறைந்திடுது! 1

மின்னும் பகல்மீது
வீசித் திரைபோர்த்திக்
கன்னி யிரவு, நமைக்
களிப்புக்குள் ளாக்குகிறாள்! 2

எனது அறைக்குள்
எரியும் விளக்கினையும்,
கனிந்துமுதிர் கங்குல்
கரைத்து மறைத்திடுது! 3

உனது கரியநிற
முள்ள இருட்பணியாள்,
தினையும் இரைச்சலின்றித்
தெள்ளமைதி யாய்வருவான்! 4

கங்குல் கழியும்வரை
கன்னியென்பால் நீயிருக்க,
இங்கிதப்பொற் கம்பளத்தை
எடுத்து விரித்திடுவான்! 5

# 45. வேதனைக் காதல்!

துன்பப் படுக்கையிலே
துடித்து இரவனைத்தும்
கண்கள் களைத்திதயம்
கனத்துத் தவிக்கிறதே! 1

கங்குல் கழிந்திளம்பொற்
காலைதரும் பேரின்ப
மங்கலத்தே னுண்டு
மகிழ்ந்திடவும் தெம்பில்லை! 2

புன்னகையால் என்னுளத்தைப்
புண்படுத்தும் தாரகைமேல்,
தண்ணூர் இருட்படலைச்
சார்த்தி மறைத்துவிடு! 3

வாழ்க்கையின் இன்ப
வெறியை, மகிழ்வினை, என்
நோக்கிற் படாமல்
விலக்கி நொறுக்கிவிடு! 4

கரிய நினதிரவு,
கற்றையிருட் போர்வையினுல்
சிறியேனை முற்றுகப்
போத்தத் திருவுளஞ்செய்! 5

பாருலகின் போராட்டப்
பாழ்வெறியி னின்றென்னைச்
சீரார் திரையிட்டுத்
துன்பத்தைத் தீர்த்திடச்செய்! 6

## 46. காதற் கடன்!

இன்றுவரை நானவன்பால்
எய்தியுள்ள நன்மைகட்கு,
நன்றிக் கடன்செலுத்தும்
காலம் நலிந்ததுவே! 1

கன்னி இரவும்
கழிந்து விடிந்ததிருள்;
இன்னலின் பின்,அவள்தம்
வாழ்வும்ஒளி எய்தியது! 2

துன்பத்தில் வாடித்
துடித்த மலர்க்கொடியை,
அன்புக் கரங்களினுல்
நீயே அணைத்துகந்தாய்! 3

சேயிழைக்கு உண்மையில்நான்
செலுத்தக் கடன்பட்ட
தூயநன்றி, அன்பையெலாம்
சுமந்துனக்கே கொண்டுவந்தேன்! 4

என்னுல் அவள்பட்ட
இன்னல்கட்கும், தீமைகட்கும்,
மன்னிப்பைக் கோரி,உன்பால்
வந்தேன், இரங்கியருள்! 5

என்பால் அவள்மலர
எண்ணி, எதிர்பார்த்த
அன்பு நறுங்காதல்
மலரும் அலர்ந்ததிப்போ! 6

காதலாய் நெஞ்சிற்
கனிந்தமலர் யாவையுநின்
பாதத்தில் வைத்துப்
பணிந்து வணங்குகிறேன்! 7

## 47. நினைவுச் சின்னம்!

பழையஎன் காதற் கடிதங்கள் பலதைப்
பேழையிற் பத்திர மாய்ச்சே
மிழையவள் மறைத்து வைத்திருக் கின்ருள்,
என்பதை, ஒருதினம் கண்டேன்!
அழகிய நினைவுச் சின்னமாய் வைத்து
விளையாடும் கருவிக ளாக,
இளங்கொடி அதனை எண்ணினுள் போலும்!
இன்றதை விட்டகன் றனளே! 1

கொந்தளிக் கின்ற காலவெள் ளத்தின்
கொடும்அலை களினின்றும், கோழைச்
சிந்தையோ டவள்இச் சிறுமுடங் கலதைத்
திருடிய பின்புரைத் திட்டாள்;
''இந்தநற் கடிதம் யாவும்என் னுடைத்தே''
என்(று), அந்தோ! இன்றவை கட்குச்
சொந்தங்கொண் டாட யாருமிங் கிலையே!
தூயதைப் பாதுகாப் பவர்யார்? 2

ஆயினும், மௌன மாகவே இங்கு
அவைகிடக் கின்றன; அந்தச்
சேயிழை நினைவுச் சுடரழி யாமல்
காத்திடச் சீர்வளர் அன்பு
போய்விட வில்லை யின்னுமிங்(கு)! எனது
புந்தியே பொற்சிலை வைகும்
கோயிலாய் அமைந்து கூறுது சான்று!
குலக்கொடி என்னுயிர்க் குயிராம்! 3

## 48. மாட்சி குன்றுதே!

என்கு லக்கொடி! நீமறைந் திட்டபின்,
மங்கி என்மனே மாட்சியும் குன்றுதே!
இங்கு முன்புநீ இன்னுயிர் வாழ்ந்தநாள்
மங்க லத்திரு வோங்கி வளர்ந்ததே! 1

அன்று போலென தாருயிர்க் கண்மணி,
இன்றும் என்னகத் தின்பம் பொலிந்திட,
நன்றெ ழில்,ஒளி, நல்லொழுங் கும்,நிலே
நின்றி டத்தயை செய்திடு நிர்மலி! 2

கால மென்னும் கடும்புயல் கொட்டிய
பாழும் குப்பைகள் யாவும் பறக்கவை!
காலி யானதைக் கண்டு நிரப்பியே,
பாழ டைந்ததைப் பார்த்துத் துலக்குவாய்! 3

ஆல யத்துள் அருங்கத வைத்திற;
சீல நற்றிரி ஏற்றிடு; தெய்வத்தின்
கோலச் சந்நிதி தன்னில்நாம் கூடுவோம்,
நீள் புவித்துயர் நீங்கிட மோனமாய்! 4

## 49. இதய தாபம்!

மென்ன ரம்பை இழுத்து விசையுடன்
கன்னி யாழிசை கூட்டிடும் காலையில்,
இன்னல் பொங்கி எழுந்ததென் நெஞ்சிலே
உன்னி டுங்கடல் போல்;உயிர் நாதனே! 1

பேதை, துன்பப் பெருஞ்சுமை நீங்கியே,
நாத வெள்ளத்தில் நன்கு திளைத்திட,
சீத ளத்தமிழ்ப் பண்ணிசை சிந்துவாய்,
நீத யைபுரிந் தேநின் கரத்தினல்! 2

பரிவி லாதஅந் நாட்களில் பாவிபால்
அரிய நின்மனம் எண்ணிய தியாதென
அறிவ தற்குநல் லாதர வா கவே
சொரிகு வாய்,இன்று நல்லிசைத் தூமழை! 3

கங்குல், தேய்ந்து கரைந்து கரைந்துயிர்
மங்கி, என்மனே வாசற் கதவின்பால்,
தொங்கிக் கொண்டலை கின்றது; தூயநன்
மங்க லப்பண் ணிசைத்து மறையட்டும்! 4

எனது வாழ்வெனும் இன்னிசை வீணையில்,
உனதி தயத் துணர்ச்சி புரண்டிட,
இனிய கீதம் இயற்றுவிண் மீனெனப்
புனித நல்லிசை வெள்ளம் பொழிகுவாய்! 5

## 50. உணர்ந்து உருகுவேன்!

விண்ணில் ஓர்கண மின்ன லில்,பெரும்
விந்தை யாம்நின் படைப்பினின்
உன்ன தக்கலை வன்மை யேகண்(டு)
உருகு வேன்சிறு வாழ்விலே!
மன்னு தொல்புவி யைக்க டந்துபல்
வன்ம ரணச்செ யலிலும்,
எண்ணி லாதநின் சிருஷ்டி யின்மர்மம்
எல்லை யின்றி விரியுதே! 1

காலத் திற்கொரு பொருளி லாச்சிறு
கருவி யாய்ச்சில வேளையில்,
ஞால மீதென்றன் வாழ்வு தோன்றலை
நானு ணர்ந்திடும் போதெலாம்,
ஏழை, என்பய னற்ற தன்மையை
எண்ணி நெஞ்சம் குமுறியே,
கோழை யாய்அழு தேகண் வீங்கிடக்
குளமெ னப்புனல் சொரிகுவேன்! 2

ஆயி னும்சிறி யேன்,நின் பேரருள்
அங்கை யில்சுழன் றூடிடும்
தூய வேளையில், மதிப்பி லாச்சிறு
துரும்பு நானிலை யென்பதும்,
ஏய நற்சுடர் மாம ணீயென
எளியன் வாழ்வுன் கரத்திலே
ஆய நல்லொளி வீசி டும்,உயர்
அருமை யும்உணர்ந் துருகுவேன்! 3

## 51. இறுதிப் பிரார்த்தனை!

மங்கி வெளிச்சம் மறைந்துவரும்
    மாலைப் போதென் றோ,ஒருநாள்,
தங்கப் பரிதி பிரிந்திடுவான்
    தமியே னிடத்தே விடைபெற்று!
பொங்கும் ஆலின் கீழ்,இடையர்
    புல்லாங் குழலை இசைத்திடுவர்;
அங்கப் பொழுது புல்வெளியில்
    ஆடு மாடு மேய்ந்திருக்கும்! 1

கரைந்து மறையும் என்வாழ்நாள்,
    கலந்த இருளில்; அத்தருணம்,
இரங்கிக் கனிந்த பிரார்த்தனையொன்(று)
    எளியேன் புரிவேன்; ''பூதேவி,
பரந்த புவியின் எழில்முழுதும்
    பார்க்கு முன்பே, விரும்பியெனை
விரைந்தேன் அழைத்தாள்? இதையெனக்கு
    விளக்க வேண்டும்!'' எனத்துதிப்பேன். 2

''இனிய இரவின் அமைதியிலே
    எழிலார் உடுக்கள் மர்மமெலாம்
தனியாய் எனக்கேன் உரைத்திட்டாள்?
    தகிக்கும் அவள்தம் பகலொளி,என்
மனதிற் புதிய சிந்தனையை
    மலர்த்தி யதுமேன்? வாஞ்சையுடன்
புனிதா, பேதைக் கிவற்றையெலாம்
    புரிய வைக்க வேண்டும்!''என்பேன். 3

*படியைப் பிரிந்து செலு முன்யான்
பாடி முடித்த பாட்டிறுதி
அடியைத் தொடர்ந்து இசைத்து,இசையின்
அந்தம் சேர்த்து வந்திடட்டா?
முடியிற் புனைந்த மாலையையும்,
முதல்வா, நின்பொன் முகத்தினையும்,
அடியேன் ஒருகால் தரிசிக்க
அன்பு விளக்கை ஏற்றிடவா?'' 4

*உலகம்

★★★
★ ★
★★★

## 52. அருளிசை யமுதம்!

அம்பு விதனேயே — துயிலில்
ஆழ்த்தி விடுகின்ற — அந்த
இன்பத் தாலாட்டுக் — கீதம்
இசைத்த வர்யாரோ? 1

வாழ்வுச் சிகரத்தில் — இசையலே
வந்து மோதுகையில், — நாங்கள்
ஆழ்ந்த பேரின்பக் — கடலில்
ஆடிக் களிக்கிறோம்! 2

நாத ஒலியது - இருளில்
நலிந்து மறைகையில் — மன
வேத னேயுடனே — உடல்
வெயர்க்கத் துடிக்கிறோம்! 3

அந்த மில்லாத - நின்
அருளிசை யமுதம் — வெகு
சந்தப் பொலிவுடன் - என்றும்
சப்திக் கும்நாதம்! 4

வந்தி டும்போதும் — திரும்பி
மறைந்தி டும்போதும் - அந்தச்
சுந்த ரநாதம் — ஒரே
ஸ்ருதி விளேயாட்டே! 5

விலே மதிக்கொணு — அனந்த
விந்தை மணிகளே — உனது
மலர்க் கரத்துள்நீ — மூடி
மறைத்து விடுகின்றாய்! 6

செல்வம் யாவுமே — கொள்ளைத்
　　திருட்டுப் பட்டதென - எண்ணி
உள்ளத் துடிப்புடன் — நாங்கள்
　　உயிரை விடுகின்ருேம்! 7

திருவு ளப்படிநீ — கையைத்
　　திறந்து மூடினுல், - யாவும்
ஒருநி லைப்படும், - லாப
　　நஷ்டம் ஒன்றுமிலை! 8

## 53. புவிக் காதல்!

கண்ணுலே, வாயால், மற் றுறுப்பா லெல்லாம்
காசினியை யான்முத்த மிட்ட துண்டு!
எண்ணிறந்த சுருளாகச் சுருட்டிப் பாரை
என்னிதயத் துள்ளேவைத் திருக்கின் றேன்! என்
திண்ணியசிந் தனைவெள்ளத் தால், இ ராவைத்
தீம்பகலை நிரப்பிவிட்டுப் புவியும் நானும்
கண்ணியமாய்த் தொடர்ந்தொன்றாய் வளர்ந்த தாலே
காதலித்தோம்; பேதமறக் கலந்து விட்டோம்! 1

வாழ்வினையான் ஆசையுடன் விரும்பும் அந்த
மர்மத்தை யறிவீரோ? வானி னின்று
பால்போன்று பொழியும்ஒளி, இயல்பாய் என்னுட்
பாய்ந்துளது, அதைமேலும் பருகு தற்கே!
நீள்புவியைத் தொடுவதொடு விடுவ தெல்லாம்
நெஞ்சுக்கோர் எளிதான செயல்தா னென்றால்,
வாழ்வில்நிகழ்ந் திடும்உறவு - பிரிவுக் கும், ஓர்
வகை, ஆழ்ந்த பொருளிருக்கத் தானே வேண்டும்? 2

சாதலினால் பேரன்புக் காதல் நெஞ்சம்
தளர்ந்துபெரும் ஏமாற்றம்அடைந்தால், அந்த
வேதனைத்தீ யாரையும் விடாது; பொல்லா
விஷப்புழுப்போல், நல்வாழ்வின் துறையி லெல் லாம்,
பேதமறப் புகுந்துள்ளே படர்ந்(து), அரித்துப்
பெருநாசப் படுத்திவிடும் அனைத்தை யும்; விண்
சீதளப்புன்ன னகையுடுக்கள் தாமும், வெந்து
தீய்ந்துகரிந் திருண்டொழிந்து தீரு மன்றோ? 3

## 54. இறுதித் துணை!

முகில்,என் னிடத்தே புகன்றிட்ட தெல்லாம்
''மறைகிறேன்'' என்ற வார்த்தை ஒன்றே!

இரவோ, ''கொடிய அருணோ தயத்தில்
விரைந்து மறைந்து விடுகிறேன்'' என்றது!

துன்பம் உரைத்தது, ''அன்பே, இரவின்
அடித்தடம் போல்யான் மோனத் தமிழ்ந்துவேன்!''

என்னுயிர் என்னிடம் சொன்னது யாதெனில்,
''முழுமையி லேநான் மூழ்கி மறைகிறேன்!''

பூமி புகன்றது,''என் பொன்னொளிக் கதிர்கள்,
விநாடி தோறுநின் விலைமதிப் பற்ற
சிதறிய அமர சிந்தனை களையே,
கொஞ்சித் தழுவிக் குதுகலிக் கின்றன!''

காதல் என்பால் கழன்றது; ''நாட்கள்
விரைந்தே ஓடி மறைகின் றன;யான்
உனக்கென வே,காத் திருக்கிறேன் உலகில்!''

மரணமோ, ''உனது வாழ்க்கைத் தோணியைச்
செலுத்திக் கொடிய திரைகடல் தனையே
கடக்கச் சித்தமாய்க் காத்துளேன்'' என்றது!

## 55. பூமான் புகுந்த இடம்!

மாலைமடிந் திருள்புவியில்
மண்டிவரும் முதற்சாமம்;
சிலநதிக் கரையருகோர்
செத்தபிணம் சுடும்சுடலை
சூழமைதித் தனிமையிலே
கவிதுளசி தாசரவர்,
ஆழியசிந் தனையுடனே
அதன்வழியே சென்றிட்டார்! 1

உயிர்நீத்த தம்கணவன்
உடலருகே, காலடியில்,
தயிரியமாய் அமர்ந்தொருபெண்
தன்னைமணப் பெண்போல,
உயர்ந்தரகப் பட்டாடை
உடுத்தழகு பொலிந்திருந்த
செயல்கண்டார் கவிஞர்; அவர்
திருவுருக்கண் டவள்எழுந்தாள்! 2

அடிபணிந்து பெண்ணணங்கு,
''அருட்குருவே! ஆசியினல்
அடியாள்என் கணவனேடு
சொர்க்கத்தை அடைந்துவிடும்
படி, தாங்கள் செயவேண்டும்!''
எனப்பகர, துளசிமகான்,
"மடமகளே, அவசரமேன்,
வானுலகை யடைவதற்கு? 3

இப்புவியும் அற்புதஞ்சூழ்
இடந்தானே? சொர்க்கத்தை
உற்பத்தி செய்தவனே
இவ்வுலகும் ஓங்குவித்தான்!''
செப்பிடலும், நங்கை, ''ஐய!
சிறுபேதை சொர்க்கத்தை
ஒப்பவில்லை; வேண்டியதென்
உயிர்க்கணவன் தானெனக்கு!'' 4

என்றவுடன், புன்னகைசெய்
தியம்பினர் குருதேவர்;
''நன்றெனது குழந்தாய்! நீ
நன்மனைக்கு மீண்டும்செல்;
இன்றோடு முப்பதுநாள்
எய்துதற்குள் காண்பாய்நீ,
உன்கணவன் தனை!'' எனப், பெண்
உவகையுடன் திரும்பிவிட்டாள்! 5

நாடோறும் கவிதிலகம்
நாடி, அவள் மனைசென்று,
பீடுயர்ந்த கருத்தொளியைப்
பெய்தவள்தம் நெஞ்சினிலே
ஊடுருவிச் சிந்திக்கும்
உணர்வளித்தார்! அதனால், அப்
பேடைமனம் தெய்வீகக்
காதலிலே பெருகியது! 6

முப்பதுநாள் சென்றேடி
முடிகின்ற தறுவாயில்,
அப்பெண்ணைப் பக்கத்து
வீட்டார்கள் அணுகி,"அடி
எப்படி,நீ உன்கணவன்
தன்னைக்கண் டிட்டனையா?
செப்"பென்று வினவிடலும்,
விதவையவள் சிரித்துரைத்தாள்! 7

"ஆமாம்,என் பர்த்தாவைக்
கண்டேன்நான்!" ஆவலுடன்,
"நாம்பார்க்கக் காட்டவரை;
எங்கேநின் நாயகர்?"என்(று)
ஏமாப் புடன்கேட்க,
இளையாள், "இறையாம்என்
பூமான்,என் நெஞ்சகத்துட்
புகுந்துகலந் தான்!"என்றாள். 8

* * *

## 56. சக்தியின் சாகசம்!

உன்னத சிருஷ்டியின் மர்மமாய் — ஆழ்ந்(து)
உறங்கிடும் பெண்மையென் ருேதுமோர் — சக்தி
என்னித யம்தொட்டு விட்டனள், — பக்கம்
எய்திய ஓர்கணப் போதிலே! 1

ஈசன் வழங்குபே ரன்பையே, — அவர்க்
கின்பமாய் மீண்டும் தருபவள்; — எங்கும்
மாசற்ற செளந்தரீய சக்தியாய்த் — திகழ்
வண்ண இயற்கை வடிவினள்! 2

பொங்கும் இளமைப் பொழிலவள்; - அதில்
பூத்துக் குலுங்கும் எழிலவள். - என்றும்
மங்காத ஜோதி மணமவள்; - தூய
வாழ்வில் இனிக்கும் குணமவள்! 3

தத்தித் தவழ்ந்திடும் ஓடையில் - அவள்
சாகச மாய்க்குதித் தாடுவாள்! - தூய
புத்திளங் காலேக் கதிரிலே - இன்பப்
புன்னகைத் தேனிசை பாடுவாள்! 4

கொந்தளித் தோங்கும் அலேகளால் — பாரின்
கொடிய வரட்சி களேகிருள்! - அந்த
விந்தை மிகுந்த பரமனே, - அவள்
வெறியில் மயங்கித் திளேகிருன்! 5

இன்பத்தில், அன்பில், எழிலிலே, - வெளி
ஏகிடும் சோகப் புரட்சியில், புவித்
துன்பத் திரண்டாய் வெடித்துடன் - அவள்
சொக்கிடக் காட்சி யளிக்கிருன்! 6

# 57. இன்பம் எங்கே?

நிரந்தர மாய், என் நெஞ்சில்
நிறைந்த அம் மங்கை யாரோ?
அறிந்திலேன்! அவள்தம் காதல்
அடைந்திட முயன்றேன்; ஆனால்,
புரிந்திலேன் அதற்குத் தக்க
புண்ணியம்; அதனால் தோற்றேன்!
விரிந்தபூ மாலை சூடி
வியந்தவள் தனைப் புகழ்ந்தேன்! 1

கணப்பொழு தவள் முகத்தில்
கனிந்தவோர் முறுவல் மின்னி
அணைந்தது! சோகத் தாழ்ந்த
அணங்கவள் நொந்து சொன்னாள்:
''இணங்குநல் லின்பம் உன்பால்
எனக்கில்லை'' எனவே! நெஞ்சால்
வணங்கினேன், அவள்அன் பென்னும்
வரம்பெறத் தினமும் போற்றி! 2

மலர்க்கரத் திற்கு வைர
வளையல்கள் சமைத்திட் டேன்; நல்
விலைக்கிரத் தினம் இழைத்த
விசிறியால் விசிறி னேன்; அக்
கலைக்கொடிக் கிசைந்த தங்கக்
கட்டிலில் மஞ்ச மிட்டேன்!
சிலைக்கரும் பவள்தம் கண்கள்
சிரித்தன இதழ் துடிக்க! 3

துன்பத்தில் இதயம் தோய்ந்த
தோகை, அப் போது சொன்னாள்:
''இன்பத்தேன் இவற்றி லெல்லாம்
எனக்கேதும் இல்லை'' என்றே!
பண்புடன் அவளை வெற்றிப்
பல்லக்கில் வைத்துப் பின்பு
அம்புவி யனைத்தும் சுற்றிக்
காட்டினேன் அன்புக் காக! 4

இருளடி மைக்குட் பட்ட
இதயங்கள், அவள்தம் காலை
வருடின பணிந்து; வெற்றி
வாகையின் முழக்கம் விண்ணை
உருவின பிளந்து! மங்கை
ஒளிவிழி ஒருக ணந்தான்
பெருமையில் மிதந்த தன்பின்
பெருகுநீர்க் கடல்மூழ் கிற்று! 5

சோகத்தில் வீழ்ந்த நங்கை
துயருடன் உரைத்தாள்: ''வெற்றி
வேகத்தில் வேற்று நாட்டை
வீழ்த்தியே அடிமை யாய்த்தம்
போகத்திற்(கு) ஆக்கும் வாழ்விற்
பொருளில்லை; அதிலே இன்ப
மோகத்திற் கிடமெ னக்கு
முற்றிலும் இல்லை!'' என்றே. 6

இறுதியாய்க் கேட்டேன்: ''யாரைத்
 தேடுருய்? இயம்பா யா?''என்(று).
உரைசெய்தாள்; ''பேசில் லாஅவ்
 வொருவனுக் கே,காத் துள்ளேன்!''
மறைந்தன பின்னும் நாட்கள்!
 வழுத்தினுள்: ''யான்கா ணு,அக்
கருணைநா யகன் — எப்போதென்
 காதலன் வருவான்?'' என்றே! 7

# 58. அங்கெல்லாம் நிற்கின்றாய்!

மையிருட்டில் மின்னி
மலர்வதும், உன் பொன்னொளியே!
வெய்யபோர் மத்தியிலே,
வெற்றி தோல் விக்கிடையில்,
பைய முளைத்துவரும்
பண்பு நலன்களெலாம்,
ஐய, நின் தூய
அருட்செயலை யன்றியுண்டோ? 1

நிறைந்த துயர்க்கடலை
நீந்தும்வலி நின்னுடைத்தே!
பரந்த வெளியுலகை
எட்டியெட்டிப் பார்ப்பதும், நின்
சிறந்த மனையே!
திகழ்போர் முரசத்தால்
வருந்தி யழைப்பதுவும்
மாசறுநின் காதலன்றோ? 2

இச்சகத்து வாழ்வில்
அனைத்தும் இழந்தபின்னும்
மிச்சமாய் நிற்பது, நின்
மேன்மைப் பெருங்கொடையே!
அச்சமற்றுச் சாவின்
அருங்குகைக ளைத்தேடி
நச்சித் திரிவதும், நின்
நல்லுயிரின் ஓவியமே! 3

வீதிப் புழுதிமண்ணாய்
    விரிந்து கிடப்பது,நின்
சோதி மனத்துகளே!
    சொர்க்கமும் அஃதேதான்!
பேதை எனக்காக,
    மற்றும்பல் பேருயிர்க்காய்
ஆதியந்த மில்லாய்,நீ
    அங்கெல்லாம் நிற்கின்றாய்! 4

★★
★★

# 59. அமரானந்தம்!

தெருவீ தியில்நான் நடந்த லேந்து
திரிந்து சோர்ந்து விடுவதுண்டு!
வறீய கொடிய வெய்யிலிலும்
வாடித் தவியாய்த் தவிப்பதுண்டு!
மறையும் மாலேக் கதிர்களும், என்
வாழ்வின் மீது பயமுறுத்தும்
பெரிய நிழல்கள் தமை, அள்ளிப்
பெய்வ துண்டு பலமுறையும்! 1

எனினும், அந்தக் கணத்தே, நின்
இனிய குரல்கேட் டிடவேண்டும்
என, நான் கருதி அச்சமயம்
ஏங்கித் துடிப்ப திலே; ஆனல்,
இணையில் எனதா ருயிர் நண்பா!
எளியேன் உன்னேத் தொட்டுணரும்
புனித இன்பம் பெறுவதற்கே
பொழுதும் விழைந்து குழைந்திடுவேன்!
2

நெஞ்சுள் மறைந்து கிடந்திடும், என்
நிறைந்த செல்வச் சுமைகளே, உன்
'விஞ்சைக் கரத்தில் தந்துவிட
விலேயே இன்னும்' என்றிதயம்
மிஞ்சும் துயர வேதனேயால்
விம்மித் துடித்துத் தவிக்கின்றேன்;
'அஞ்சேல்' என்றென் சுமைகளேநீ
அன்பாய் ஏற்றுக் கொண்டருளே! 3

கங்குற் பொழுதில், வெளியினில்,உன்
கரத்தை நீட்டிக் காட்டுக!நான்
பொங்கும் மகிழ்வோ டதைப்பற்றிப்
பூரித் திடுவேன்! அளவின்றி
எங்கோ நீண்டு குறுகிச்சென்
றிடுமென் தனிமை வாழ்வினில்,உன்
தங்கக் கரத்தின் ஸ்பரிசசுகம்
தந்தால், அமரா னந்தமதே! 4

# 60. மொட்டுச் சிறைக்குள்!

''இன்ப வசந்தம் ஏகுதே! மற்றோர்
நண்பகல் வந்தும் நலிந்ததே! அந்தோ,
மொட்டுச் சிறைக்குள் முடங்கிக் கிடந்துயான்
பட்டிடும் துயரைப் பார்ப்பவர் இலையோ?''
இளமுகைக் குள்ளுறைந் திடுமனம், இவ்வா(று)
அழுது கதறி அரற்றுதல் கேட்டேன்!

''அன்பு மணமே, அஞ்சேல்! உனது
துன்பம் அனைத்தும் தொலைந்திடும்; துயர்மிகு
ஏக்கம் தவிர்க! இனும்சில வேளையில்,
காக்கும் நின்சிறைக் கட்டுடைந் திடும்;நீ
எங்கும் பரவும் எழில்மண மாவாய்!
பொங்கிநின் வாழ்வு பூரணம் பெற்று,நீ
மறைந்திடும் பொழுதும் வசந்தம் பொழியும்!''

இதயத் துடிப்புடன் இளமணம், பின்னும்
கதறிடு(து) அரும்பினுட் கறந்திட்ட வாறே:
''அநியாயச் சிறைவிட் டகலுவ தெப்போ?
மணிக்கணக் கோடி மறைந்திடு கின்றதே!
இன்னும்,இப் பேதை எதைத்தேடி, எங்கு
நண்ணிச் செல்கிறேன்? கன்னியே னுக்கிது
சரியாய் ஒன்றும் புரிந்திட வில்லையே!''

''ஏக்கத் திற்கினி இடங்கொடுக் காதே!
ஊக்கத் துடனே உயிர்த்திடு மனமே!
கோடை வசந்தக் குளிரிளந் தென்றல், நின்
ஈடிலாக் காதலை, எங்கோ இருந்துகொண்(டு),
எப்படி யோ, கேட் டறிந்துவிட் டதினி;
அற்புத மாகநின் வாழ்வலர்ந் திடுநாள்
தூரத்தில் இல்லை; துயரகன் றிடுவாய்!''

தாகம் மிகுத்த தண்மணக் கன்னி,
சோக வெறியில் துடிக்கிறாள் மீண்டும்:
''ஐயோ, என்நிலை அறிபவர் யாரே?
மெய்யாய்என் வாழ்வை விழுங்குதே பேரிருள்!
எவர்செய்த சதியோ? ஏழையென் வாழ்வு
அவலமாய்ப் பயனற் றழிவது மேனோ?
ஏனின்னும் நானிங் கிருக்கிறேன் உயிரோ(டு),
என்பதை யாரும் எனக்குரை யாரோ?''

''அச்சம் களைவாய் அருந்தேன் மணமே!
நிச்சயம் மலர்ச்சிநேரும், உன்வாழ்வில்!
பொன்கதிர் பரப்பும் தண்ணரு ணோதயம்
அண்மி விட்டது, அதோபார் கிழக்கில்!
அகண்டசை தன்யமாம் அருட்பெருஞ் சோதியில்
இரண்டறக் கலந்துநீ இன்புற்று, வாழ்வின்
தத்துவம் உணரும் தருணம் இதேதான்!''

## 61. அவளோர் குழந்தை!

இன்னும் அவளோர் குழந்தை!
அரசே! எழில்மிகுநின்
பொன்மா ளிகைதனைச் சுற்றித்
திரிந்து, பொழுதனைத்தும்
மின்னற் கொடியென்ன ஆடுகின்
றுள்; விளை யாட்டுக்கேற்ற
கன்னற் கருவியாய் நின்னையே
ஆக்கக் கருதிவிட்டாள்! 1

குழல்தான் கலைந்து சிதறிப்
புரண்டு குமைவதையோ,
எழிலார் துகில்வெம் புழுதியில்
தோய்ந்து இழுபடும், எந்
நிலையோ, எதையும் அறியாள்;
அவளோடு நீகதைக்கும்
பொழுதோ, உறங்கி விடுவாள்;
பதிலே புகல்வதில்லை! 2

அன்பாக நீயவள் கையிற்
கொடுக்கும் அரியமலர்,
மண்பால் நழுவி விடுவதுண்
டு; பின்பு வன்புயல்தான்
பம்பிக் குமுறிச் சுழலும்
பொழுதும், பரந்தஇருள்,
விண்பால் நிறைகின்ற வேளையும்
தூங்காள், விழித்திருப்பாள்! 3

பேதையின் பொம்மையிப் போதெலாம்
மண்மேற் பிரிந்திருக்கும்!
வேதனை மிஞ்சிநெஞ் சைப்பயம்
ஆட்கொளும் வேளைவந்தால்,
ஆதர வாக,உந் தன்னையே
கட்டி யணைப்பதுடன்,
கோதிலா நின்தொண்டு குன்றுமோ
வென்றும் குமைந்திடுவாள்! 4

ஆடிடும் போதவள் தன்னையே
நீ,புன் னகையரும்ப
நாடுகின் றாய்;அவள் தன்மையெல்
லாம்நீயே நன்கறிவாய்!
நீடுமண் மேல்இன்று ஆடும்
குழந்தையே, நின்மணப்பெண்!
ஆடுநாள் நின்றிடி னே,அது
வேகாத லாய்விடுவே! 5

## 62. பனித்துளியும் கதிரவனும்!

அங்கம் கரையத் தொழுதழுது
அன்புச் சிறுமி பனித்துளியாள்,
தங்கப் பரிதி யிடம் கேட்டாள்:
''தலைவ! உனது தழல்வடிவை
அங்கெப் பொழுதும் தாங்குவதார்?
அகண்ட வானப் பெண்தானே?
இங்கிப் பேதை பலசமயம்
இன்பக் கனவு காண்பதுண்டு! 1

உனது பணிக்கே வாழ்வதென
உதித்த கனவை நனவாக்க
வினையேன் ஆற்றல் இலனென்றும்
வேவதுண்டு; எம்பெரும!
இணையில் லாநின் பேருருவை
எளியேன் அகம்தாங் கிடல்எளிதோ?
தனியாய் உருகி வழிகண்ணீர்க்
கதம்ப மன்றோ தமியனுரு!'' 2

தண்ணார் இரவி புன்னகைத்து,
''சகல புவிக்கும் யானேதான்
எண்ணில் ஒளிதந் துதவுகிறேன்;
எனினும், தனித்த எதனிடத்தும்
உண்ணின் றுளிர எனக்கியலும்;
உன்போற் சிறிய பனித்துளியும்
என்னைத் தாங்கி ஒளிமுத்தாய்
எழில்பெற் றிடலாம்!'' எனப்புகன்றான். 3

# 63. குளிர்ந்த காதல்!

வேகும் கலத்தை யே,கணத்தில்
மீறி யுடைத்துப் பொங்கிவழிந்(து)
ஏகும் திராட்சை ரசம்போன்று,
எந்தப் பெரிய தடைகளையும்
வேகத் தோடு தகர்த்தெறிந்து
வெகுண்டு செல்லல் தான்,உலகில்
ஏக மாய்நாம் காண்காதல்
இயல்பாம்! ஏழைக் கிதுவேண்டாம்! 1

மண்ணுக் கினிய வளமூட்டி,
வாடும் பயிரின் உயிர்மீட்டி,
பெண்மைக் கினிய மனைகளில்,மட்
பாண்டம் நிறையப் பெய்துவக்கும்
கண்ணுக் கினிய மழைபோன்று,
கனிந்த குளிர்ந்த காதலையே
என்னுள் வளர்ந்து செழித்துமலர்ந்
திடநீ யருள்வாய் எம்மானே! 2

மண்ணிற் பாய்ந்து, மரக்கிளையின்
வழியாய்ப் புகுந்து, மலர்கனிகள்
எண்ணில் விளைக்கும் தண்மழைபோல்,
எளியேன் வாழ்வின் உட்புகுந்து,
தண்ணார் இதயப் பேரமைதி,
சாந்தி மலர்நற் கனிகளினால்,
விண்ணின் பத்தேன் அமுதூட்டும்
விஞ்சைக் காதற் பேறருள்க! 3

# 64. ஞானச் செல்வன்!

காட்டுமரக் கூட்டத்துள், ஆற்றின் மேலைக்
கரைதனிற்சூ ரியன்மறைந்தான்; ஆடு மாட்டை
ஓட்டிவந்து சேர்த்துவிட்டுக் கௌத மர்முன்,
ஒருங்கமர்ந்து குளிர்காய்ந்து கொண்டு, பாடம்
கேட்டனர்பன் னகசாலைச் சிறுவர்; அப்போ
கிட்டிவந்தோர் இளம்பையன், முனிவர் பாதப்
போட்டினிலே மலர்கனிவைத் திறைஞ்சி, இன்பப்
பூங்குயிலின் தீங்குரலிற் புகல லூற்றான்: 1

''வாழ்விறுதி நிலையுணர்த்தும் தூய உண்மை
வழிச்செல்ல விழைந்துநுமை யடைந்தேன்;
தேவ!
ஏழையெனக் கருள்புரிக! சத்ய காமா
எனதுபெயர்'' எனமொழிய, குருபி ரானும்
வாழியென ஆசிதந்து, ''நீபி றந்த
மரபெதுவோ? பேருண்மை அறிவைக் கொள்ளத்
தாழ்வகன்ற வேதியனே தகுதி யுள்ளான்!
சாற்று'' என்றார். தலைவணங்கிப் பகர்ந்தான்
பையன்! 2

''குருமணியே! எனதுகுலம் இன்ன தென்று
கூறவெனக் கேதெரியா(து); அதனால், எந்தன்
அருமைத்தாய் இடங்கேட்டு வருகின்றேன்'' என்(று)
அங்கிருந்து விடைபெற்றான்; நதிகடந்தான்;
பெருகுமணற் பாலைவனத் தோரம், ஆழ்ந்த
பேருறக்கம் கொளும்கிராமத் திறுதி வைகும்
சிறுகுடிலை யடைந்தான்;ஆங் கறையி னுள்ளே
தீபமொன்று மங்கியதாய்த் தெரிந்த தப்போ! 3

கதவருகே வரவையெதிர் பார்த்த வண்ணம்
காத்திருந்த தாய், மகனைக் கரத்தெ டுத்து,
இதயமகிழ் வொடுஉச்சி மோந்து, முத்தம்
இட்டனள்;பின் குருவிடம்சென் றிட்ட செய்தி
விதம்கேட்டாள்; ''அந்தணர்க்கே உயர்ந்த ஞான
மேன்மைபெறும் தகைமையுண்டாம், என
மொழிந்தார்
பதந்தெரிந்த கௌதமர்;என் தந்தை யின்பேர்
பகர்ந்திடுக எந்தாயே!'' என்றான் பாலன். 4

விழிமலர்கள் கீழ்நோக்கத் தலை குனிந்து,
மென்குரலில் புகன்றாள்தாய்: நானோ ஏழை;
இளமையிலே எஜமானர் பலர் எனக்கு;
என்னருமைச் செல்வா!நீ கணவ னற்ற
அழகியஎன் கரங்களிலே மழலை பேசும்
அமிழ்தவடி வாயமர்ந்தாய், அறிக!'' என்றாள்.
ஒளிவெள்ளம் தனைக்கதிரோன், ஆஸ்ர மத்தின்
ஓங்குமரத் துச்சியெலாம் இறைக்க லுற்றான்! 5

காலையில்,நன் நீராடிக் குடுமி நன்கு
காய்ந்திடுமுன், பன்னகசா லைச்சி றார்கள்,
சீலகுரு பார்வையில்,அம் மரத்தின் கீழே
சேர்ந்துட்கார்ந் தனர்;சத்ய காமா, அந்த
வேளையில்வந் தான்;குருவின் பதம் வணங்கி
வெகுமோனத் தொடுநின்றான்! அவனை நோக்கிக்
கோலநகை யொடுமுனிவர், நினது ஜாதிக்
குறிப்பறிந்து வந்தனையா, என்ன?'' என்றார்! 6

ஃ ஃ ஃ

இளஞ்சிறுவன் புகன்றபதில்: ''எனது ஜாதி
இனுமறியேன்; வினவிட,என் தாய் பகர்ந்தாள்:
''இளம்பருவந் தனிலெனக்குப் பலபேருண்டு
எஜமானர்; கணவனிலா உனதே ழைத்தாய்,
நலங்கிளர்செங் கரங்களில்நீ மிளிர்ந்தாய்!'' என்று;
நானிதையே தானறிவேன் சுவாமி!'' என்றான்,
கலைந்தநறுந் தேன்கூட்டின் ஈக்க ளைப்போல்
கனன்றுமுணு முணுத்ததுமா ணவர்தம் கூட்
டம்! 7

''கீழ்ச்சாதிப் பயல்,இவனின் துணைச்ச லைப்பார்;
கிஞ்சிற்றும் வெட்கமிலை!'' தெளிவில் லாஇப்
பேச்சொலிகள் எழுந்தன!கௌ தமர் எழுந்தார்!
பேருவகை யொடு,சத்ய காம னைத்தம்
மூச்சாரத் தழுவிமுத்த மிட்டுச் சொன்னார்:
''மூவாநன் மருந்தனைய குழந்தாய்! நீயே,
மேற்சாதி அந்தணனை விடச் சிறந்தோன்;
மெய்ஞ்ஞானம் பெறற்குரியோன் நீயே!'' என்று. 8

## 65. விந்தை!

காலை உதயக் கதிர்பட்டுக்
     கதவு திறந்த வேளைமுதல்,
மூலை முடுக்கெல் லாம்புகுந்து
     முழுநாள் வரைக்கும், அந்தரங்கக்
கோல மொழிகள் பேசிவரக்
     கோமான் இரவிக் கிந்நகரில்
சாலச் சிறந்த வீடொன்று
     தானுண் டென்றல் விந்தையது! 1

ஒழிவில் காலக் கடல்கடந்து,
     ஓயாப் புனித யாத்திரையால்
நளினக் கதிராய் வந்த,கொடை
     நலத்தை, ஓங்கும் நற்றருவில்,
பொழிலில், தோட்ட வேலைகளில்,
     பூத்த மலரின் புன்னகையில்
எளிதாய் இன்று காலையில்தான்
     கண்டின் புற்ற தோரிதயம்! 2

## 66. குழலிசை!

பொங்கி வரும்அவனின்
புல்லாங் குழலிசையில்,
இங்கிதத் தேன்மலரின்
இனியமணம் வீசிடுது! 1

தளிர்த்த இலைகளெல்லாம்
தங்கநிற மாகிடுது!
குளிர்ந்த புனல்,மின்னிக்
குதித்து நடந்திடுது! 2

ஓங்கும் தருநிழலில்,
உன்னதத்தேன் வண்டுகளின்
ரீங்கார வெள்ளம்
சுழன்று நிறைந்திடுது! 3

நண்பனின் மெல்லுதட்டின்
நகையமிழ்தைத் தான்திருடி
என்வாழ்விற் பூசிடுது
இனிய குழற்கானம்! 4

# 67. விழைகின்றேன்!

இதயத் துடிப்பாற் பொங்கியெழும்
    எனது பாட்டின் வேகமெலாம்,
சிதையத் தன்னந் தனியாய்நீ
    சென்றெங் கோ,நின் றுலவுகிறாய்! 1

நிண்பாட் டுடன்,நின் பதமலரைத்
    தீண்டற் கரியேன்; திகைக்கின்றேன்!
என்பாட் டலையோ, நின்கழலை
    எட்டித் தொட்டின் புற்றிடுது! 2

எட்டாத் தொலைவில் இருந்தே,என்
    இளமை விளையாட் டுன்னுறவைத்
தொட்டுத் தொடர்ந்து நிகழ்ந்திடுது;
    துயரும் அதனால் சுவைத்திடுது! 3

இனியாய்! உனது பிரிவே,என்
    இதயப் புல்லாங் குழல்வழியே
கனிந்து கசிந்தே உருகி,உயிர்க்
    கான வெள்ளம் ஆகிடுது! 4

கடலைக் கடந்து நின்படகென்
    கரையை அடைந்த வுடன்,நீயே
அடியேன் ஜீவக் குழல்பற்றும்
    அரிய பொழுதை விழைகின்றேன்! 5

## 68. கதவு திறந்தது!

எதிர்பாரா வேளையிலே,
என்னிதயச் சன்னற்
கதவு,படீ ரென்றின்று
காலை திறந்ததைய! 1

எழில்மிக்க நின்னகத்தை
எட்டியான் பார்ப்பதற்கு
ஒளிமிக்க கண்ணாய்!
உதவி யதும்இதுவே! 2

நீயறிந்த என்பேர்,
நிலத்தில், வசந்தமலர்,
தூய தளிரில் எலாம்
துலங்கப் பொறித்திருக்கும்! 3

விந்தையிதைக் கண்டு
வியந்து, பெருமோனச்
சிந்தனையில் மூழ்கித்
திளைத்துக் கிடக்கின்றேன்! 4

## 69. மறந்தேன் உன்னை!

உள்ளத்துள் நீமறைந்து
உறைகின்றாய்; புறப்பேராசை
வெள்ளத்திற் சுழலும் நெஞ்சிற்
குனைக்காணும் வெற்றியில்லை! 1

இறுதிநாள் வரைக்கும் என்றன்
எண்ணம்,பேராசைக் கெட்டா(து)
உறுதியாய் விலகி, அப்பால்
ஒளிந்துநீ மறைந்துகொண்டாய்! 2

இளமையின் விளையாட் டில்,நீ
இன்பமாய் மலர்ந்தாய், என்னுள்!
குழந்தையேன் விறு விறுப்பாய்க்
குதிப்பதில் மறந்தேன் உன்னை! 3

உற்சாக வாழ்வி லெல்லாம்
உவந்தெனைப் பாடி னாய்நீ!
கற்சிலை யேன்,உன் மீது
கவிசெய மறந்தே போனேன்! 4

# 70. தயங்கி நிற்கிறேன்!

ககனத் திருந்துநீ கைவிளக் கதனை
எடுத்துப் பிடிக்கையில், என்முக மெல்லாம்
ஒளிநகை பரவி மலர்கின் றது;அதன்
நிழல்உன் மீதே விழக்காண் கின்றேன்!

காதல் விளக்கைப் பேதையேன் உளத்தால்
தாங்கிப் பிடிக்கையில், தண்ணொளி நின்மேல்
படர்கின் றது;அதன் பரந்த நிழலில்,யான்
பின்புறம் தயங்கிப் பேச்சற்று நிற்கிறேன்!

* * *

# 71. வாழி அலைகள்!

விண்ணை விழுங்கும் கதிரலைகள்;
மின்னிப் படரும் ஒளியலைகள்;
கண்ணைக் கவரும் எழிலலைகள்;
கருத்திற் புரளும் கருத்தலைகள்! 1

பண்ணிற் பெருகும் இசையலைகள்;
பாட்டில் இனிக்கும் சுவையலைகள்;
எண்ணிற் கடங்கா அறிவலைகள்;
யாவும் வாழி, அலைமயமே! 2

கடலின் அலைத்தா லாட்டினிலே,
கவினார் உடுக்கள் கண்ணுறங்கும்!
திடசிந் தனைப்பே ரலைகளெலாம்,
திரண்டு பொங்கிப் பெருகியெழும்! 3

வாழ்க்கைக் கரையின் ஓரமெலாம்,
மணிகள் மோதிச் சிதறிவிழும்!
தாக்கும் வினைப்பே ரலைக்கேற்ப,
சாவும் பிறப்பும் சார்ந்துவரும்! 4

சிறகை விரித்தோர் கடற்புட்போல்
சிறியேன் இதயம், பேரின்ப
வெறியாம் அலையை எழுப்பி உயர்
விண்ணிற் பறந்தே சென்றுலவும்! 5

# 72. மணப்பெண்!

எட்டுத் திசையும் நிறைந்ததோர் — அந்த
இன்பமெல் லோடியும் வந்தவள், — உடல்
கட்டித் தழுவி மகிழ்ந்தது; — அந்தக்
கன்னி அயர்ந்து கிடந்தனள்! 1

விண்ணொளி யாவும் திரண்டவள் — கண்
விழிக்கும் வரை,முத்த மிட்டன! — அவள்
தண்ணுயிர்ப் பில்,வசந் தம்மலர் — யாவும்
சார்ந்து பெருமூச் செறிந்தன! 2

அங்கத்தின் ஒவ்வோர் அசைவிலும், — புனல்
அருவியி னோடிளந் தென்றலின் — குரல்
இங்கித மாகக் கலந்துடன் — குழைந்
தின்னிசை பாடத் தொடங்கின! 3

கானில் முகிலில் கடல்தனில் — கூடிக்
கலந்தபல் வண்ண அலைத்திரள், — அவள்
தேனின் இனிய உயிர்தனில் — ஒன்று
சேர்ந்து கலந்தெழில் சிந்தின! 4

பண்கள் குழைத்துப் பிசைந்துரு — வாக்கப்
பட்டமென் பட்டுடற் பாவை,என் - மணப்
பெண்அவ ளே!என் அகத்தினில் — தூய
பேரின்பப் பொன்விளக் கேற்றினள்! 5

# 73. யார் சுவைப்பார்?

தங்க மலர்கள் தளிரிலை கள், — கோடி
தாங்கிவந் தின்பத் தனிவசந் தம், — என்
அங்கம் சிலிர்க்கப் புகுந்ததென் னுள்; - இசை
ஆர்த்தன காலைச் சுரும்பினங்கள்! 1

மெல்லிளங் காற்றெனைப் புல்லித் தழுவி
விளையாடு கின்ற தெழில்நிழலில்!
'ஜில்'லென் னுள்நின்று தேனருவி யொன்று
தித்தித் திட த்தவழ்ந் தோடிடுது! 2

கண்மல ரைப்பனி மூழ்கிய காலைக்
கதிரென இன்பம் தழுவிடுது. — வீணைப்
பண்ணென வே, என தங்கமெ லாம், அலை
பாய்ந்துயிர் நாதம் துடித்திடுது! 3

நங்கையென் வாழ்வுக் கரையில் அலைத்திரள்
பொங்கிக் குதித்துப் புரண்டிடுதே! — நீ
அங்கு தனியாக வோதிரிந் தாய்? — என
தாவிக் கருந்துணைக் காதலனே! 4

விந்தை மிகுந்தபல் வண்ணச் சிறகுள
விட்டில்கள் போலெனைப் பற்றியதோர்
சுந்தரப் பொற்கன வெத்தனை வந்தெனைச்
சுற்றிச் சுழன்று பறந்ததையா? 5

இன்றென் நரம்பில் திரண்டொலிக் கின்ற(து)
இனிய 'நா தப்பிரமம்' என்பதொன்று! – மன
மன்றிற்பே ரின்ப நடம்புரி கின்றன
மாமணிப் பாத மலரிரண்டு! 6

ஒய்வற் றுடம்புட் சிறைவிரித் தேபறந்
தோடி யலைந்த துயிர்க்குரல்தான்! - அன்புத்
தூய! நீனையன்றி, யாரிடத் தேயிதைச்
சொல்வது? கேட்டிதை யார்சுவைப்பார்? 7

## 74. கட்டறுந்தது!

கட்டுக்கள் யாவும் அறுந்தன, - என்
கடன்கள் அனைத்தும் தொலைந்தன; - அடை
பட்ட கதவும் திறந்தன; — நான்
பாய்ந்தெங்கும் சுற்றிப் பறக்கிறேன்! 1

அங்கொரு மூலையில் மற்றவர் — மிக
அஞ்சிப் பதுங்கி நடுங்கியே — ஒளி
மங்கிய கால மணிகளால் — வலை
மட்டத் தறிகளில் நெய்கிறார்! 2

பண்டங்கள் விற்ற பணங்களை - எண்ணிப்
பார்த்துக்கொண் டேபழம் பாங்குடன் - எனை
அண்டையில் மீண்டும் அழைக்கிறார் — மண்
ஆர்ந்த புழுதியிற் தோய்ந்தவர்! 3

வீரப்போர் வாள்கையில் மின்னுது; - மார்பில்
வெற்றிக் கவசம் விளங்குது; - என்
தீரப் பரிதயார் ஆச்சுது; — இனித்
திண்ணம்யான் பொன்னரசு சோச்சுவேன்! 4

✶

## 75. மண்ணுக்கு வந்தேன்!

அன்றுநீர் வாண மாய்ப்பே
    ரின்றிநான் அழுதுகொண்டே,
உன்றன்மண் ணுலகில் வந்தேன்
    அல்லவோ? ஒப்பிலாதாய்! 1

என்குரல், இனிமை இன்றே
    எய்திய தெனினும், வாழ்வு
நன்குற இடமெ னக்கு
    நல்கிநீ நகர்ந்தாய் அன்றோ? 2

உனைமுதல் துதித்தென் பாட்டை
    ஓதிடில் தானிவ் வையம்
எனைமதித் திடுமென் னும்,நம்
    பிக்கையும் எனக்குள் உண்டு! 3

என்னைநீ விட்டு வைத்த
    இகத்தையான் விரும்பும் உண்மைத்
தன்மையைக் கண்டு கொள்ளத்
    தாகம்நன் குனக்குண் டன்றோ? 4

# 76. அன்றும் இன்றும்!

கோழைமனத் தொடுநடுங்கி, என்னைக் காத்துக்
கொளக்கருதிச் சிறுநிழற்கீழ்ப் பதுங்கி னேன், அன்(று)
ஏழையினேன்; இப்பொழுதோ, பேரின் பத்தேன்
எழிலலையின் சிகரம்எனை இறுகப் பற்றி,
வாழ்வுநதி தனிலிழுத்துச் செல்வ தாலே,
மறித்தெதையும் சுழித்தலைத்து மடிக்கும் பொல்லா
நீள்துயரப் பாறையிலும், இலகு வாய்,என்
நெஞ்சமலர் தொத்திமகிழ்ந் திடுதல் கண்டேன்! 1

முன்பெனது வீட்டினிலோர் மூலை தன்னில்
முடங்கிவா றெனைநாடி வரு விருந்தின்
பண்பிற்குத் தக,விரிவில் லாதென் இல்லம்
பலங்குறுகிக் கிடப்பதனை நினைந்து நோவேன்!
அன்ப,எதிர் பாராப்பே ரின்பத் தால்,என்
அகந்திறந்து கிடப்பதனால் இன்(று), உனக்கும்
மன்புவிக்கெல் லாமும்இடந் தரத் தகுந்த
மனையெனதென் றறிந்துணர்ந்து மகிழு கின்றேன்! 2

உடம்புக்கே முன்பெல்லாம் கவலை கொள்வேன்;
ஓயாமல் அலங்கரிப்பேன் வாசம் பூசி!
நடந்திடுவேன் கவனமுடன் நுனிக்கா லாலே;
நற்பரம! இப்பொழுதோ, நனிபே ரின்பத்
தடங்காற்றுன் றெனைத் தூக்கிப் புழுதி மீது
தள்ளியதால், நின்பாதத் தளிரைப் பற்றிக்
கிடந்தினிது புரள்கின்றேன் மண்மீ தெல்லாம்,
கிளுகிளுத்த சிரிப்பொலித்துக் குழந்தை போன்
றே! 3

# 77. பூங்கருணை!

மூவுலகும் நின்னுடைத்தே,
முக்காலும் ஐயமில்லை!
தாவிடுபேய் வறுமையிலாத்
தன்மையினால், நின்றனக்கு
மேவியநின் செல்வத்தே
வீழவில்லை ஆசைவெறி!
பூவினிடைப் பொருளெல்லாம்
பொருளற்ற தெனக்கண்டாய்! 1

ஆதலினால், நாளடைவில்
அரசே, நின் சொத்தனைத்தும்
காதலுடன் தந்துதவிக்
களைப்பின்றி யே, தொடர்ந்து
பேதமிலா நின்னரசைப்
பேதையென்னுள் நாட்டிவிட்டாய்!
பூதலத்தில் என்போன்றுன்
பூங்கருணை பெற்றவரார்? 2

எந்நாளும் நின்னருணன்
எழிலுதயக் காட்சியைநீ
என்னிதயத் துள்ளிருந்தே
இனியவிலைக் கேற்கின்றாய்!
தண்ணார்ந்த நின்னன்பு
தமியேனின் வாழ்வுருவில்
மண்ணார்ந்து விண்ணுயர
வளர்வதைநீ கண்டுகொண்டாய்! 3

## 78. விடுவதேன்?

பறவைகட்குத் தீங்குரற்
பாடல்நீ யளித்தனே;
பிறகவை உனக்கதைப்
பெருமையோடு தந்தன!
நறுமணக் கவிபல
நல்கினை எனக்கும்நீ;
உரியதற்கு மிகுதியாய்
உகந்தனே, கொடுத்தனன்! 1

பாரமற்று வேகமாய்ப்
பறக்கு துனது காற்றினம்;
சாரமிக்க தொண்டதில்
சக்தியதிக முண்டுதான்!
தீரமாகத் தாங்கினுல்
திருந்துவேனென் றெண்ணியோ,
கோரமான சுமைகளைக்
கொட்டினுய்என் கைகளில்? 2

யாவுநின் திருப்பணி
யாய்ப்புரிந் திருப்பதே,
மேவுமென் பொறுப்பினை
விரைவினிற் குறைப்பதாம்!
தாவிலாச் சுதந்திரம், இ
தால்முயன்று யான்பெற
நீவிரும்பி யோ, சுமை
நிறைத்தனை எனக்குமுன்? 3

புவிபடைத்து, ஒளிகளால்
　　பொலியவைத்து நிழல்களை,
நவமிகுத்த கதிரையே
　　நனிநிறுத்தி விடுவதேன்?
தவமிகுப்பொன் உலகையே
　　தழையவைக்கும் நினைவிலோ?
அவமிகுத்த புழுதியில்
　　அடிமையைக்கை விடுவதேன்? 4

மன்னுயிர்க்கெ லாம்நலம்
　　வாரிநீ வழங்குறாய்;
என்னிடத்து மட்டிலும்
　　இன்னும்கேட் டுவக்கிறாய்!
தின்னும்வெய்யில் மழைபனி
　　திகழுகாலம் யாவிலும்
மன்னிநின்றென் வாழ்க்கையும்
　　மாண்புறப் பழுத்ததே! 5

அறுவடைசெய் காலமும்
　　அண்மிவிட்ட தைய! நீ
கருவிலிடு, வி தைக்குமேல்
　　கனக்கவே, குவித்துளேன்!
அரியபொற் களஞ்சியத்
　　தண்ணலே! நின் நெஞ்சிலே
சிறியன் என்முற் செயலெலாம்
　　திதிப்புணர்த்து தல்லவோ? 6

## 79. எனது பிரார்த்தனை!

'ஆபத்தி னின்றெனைக் காத்தருள்' என்று
தாபத்தி னுனுன்றன் தாளுற வில்லை!
'யாவற்றை யும்வெல்லும் ஆற்றலை நல்கென்'
றே,பக்தி செய்துனை ஏத்திடு கின்றேன்! 1

'துன்பம் துடைத்துச் சுகப்படுத்' தென்றுன்
இன்பப் பதத்தை இறைஞ்சிட வில்லை;
'தெம்போ டனைத்தும் சிரித்துத் தகர்க்கும்
பண்பை எனக்கருள்' என்றே பணிந்தேன்! 2

வாழ்வெனும் போர்க்கள வாயிலில் நின்றுன்
தாள்பணிந் தேதுணை தாவென வில்லை;
'நாள்கடந் தாலும்,தன் நம்பிக்கை மிக்க
நீள்கடும் போர்த்திறல் நீயருள்' என்றேன்! 3

தப்பிக்க வெண்ணித் தயங்கிப் பதுங்கல்
அற்பமு மின்றி,என் ஆத்ம சுதந்த்ரப்
பொற்பினை, ஆற்றல் பொறுமையிற் காண
வெற்பெனத் திண்மன வீறெனக் கே,தா! 4

வெற்றியில் மட்டும்நின் விண்கரு ணைத்தேன்
கொட்டிடக் கண்டொரு கோழையா காமல்,
உற்றிடும் தோல்வியி லும்,நின் கரத்தைப்
பற்றில்,வாழ் வுண்டென்னும் பண்பு மனம்,தா! 5

## 80. உனது அன்பு!

நீ, தனித்து நின்றபோது
நின்னையே அறிந்திலே;
சீதளத்தில் இக்கரை
திகழ்ந்தகாற்றுச் சீறியே
மோதி, அக்க ரையடைந்த
போதும்யாதும் முற்படும்
ஏதுவற்ற(து); அந்தவேளை
பேதையுன்னை எய்தினேன்! 1

கண்விழித்து விட்டனை,
ககனமுற்றும் அற்புதத்
தண்ணொளிக்க திர்மலர்ந்து
சார்ந்ததெங்கும் ஜோதியே!
பன்மலர்த்தி ரள்களில்
பரிந்தெனைத் திறந்தனை;
எண்ணிறந்த வண்ணமிக்க
தொட்டிலிட்டி சைத்தனை! 2

என்னையே மறைத்தனை
எதிர்த்துவந்த சாவிலே;
பின்னுமிந்த வாழ்விலென்னைக்
கண்டுளம் பிணிந்தனை!
தன்னிகர் இலாதுநின்
தளிர்த்தநெஞ்சம் விம்மிட,
எண்ணிலாத இன்பதுன்பம்
எய்திமூச் செறிந்தனை! 3

தொட்டதும்என் உடலைநீ,
    தூயஅன்பி னூற்சிலிர்த்
திட்டனை;என் கண்கள்மீது
    வெட்கம்வந் திளந்திரைப்
பட்டது;பின் நெஞ்சினிற்
    பயந்துடிக்க இன்முகம்
கெட்ட(து),உன்னைக் காண்கிலாத
    போதழுது கிறுகிலேன்! 4

பிழைபுரிந்த போதுமென்னைப்
    பெரிதும்காணும் ஆசைநின்
உளமதில் வளர்ந்தெனுளும்
    ஓங்குதன்மை காண்கிறேன்;
ஒளிக்கதிர்க் கரங்களால்,நின்
    உதயபானு நிதமுமென்
வெளிக்கதவு தட்டல்கண்டு
    மெய்சிலிர்த்து விடுகிறேன்! 5

## 81. காதல் மலர்!

காலை உதயக் காட்சியிலே
கதித்துக் கிளம்பும் ஒளிக்கதிரில்,
சாலச் சிறந்த பேருறுதி
தழைத்தோங் கிடுதுன் தனிமகிழ்வாய்! 1

நெருங்கி உன்பால் வர,வர,நின்
நீலக் கடலின் கொந்தளிப்பு
பெருகிக் களிப்பால் தனித்துயர்ந்து
பேரா னந்த நடஞ்செயுது! 2

கனகக் கிளையாய்ப் படர்ந்துயர்ந்த
கற்ப தருவே உனதுலகம்;
கனிந்த ஒளிப்பொற் கதிர்க்கனி,நின்
கரத்தில் உதிர்ந்து நிறைந்தொளிரும்! 3

எனினும், உனது சொர்க்கமெலாம்
என்நெஞ் சகத்தே மறைந்துளது;
இனிய நாண மிகுந்தவிழும்
இணையில் காதல் மலரதுவே! 4

## 82. நாமம் ஓதுவேன்!

சிந்தனை நிழலில் - மோனச்
சிலிர்ப்பு டன்அமர்ந்து — நின்
சுந்தர நாமம் - தனையே
சொல்லப் போகின்றேன்! 1

ஆர வாரமின்றிச் — சொல்
அடுக்கு களின்றி — ஏதும்
கார ணமுமின்றி — அதைக்
கழறப் போகின்றேன்! 2

அம்மா என்றுசொலும் — புதிய
ஆற்றல் பெற்றுவிட்ட — மழலை
சும்மா நூறுமுறை - அதையே
சொலத் துடிக்குமன்றோ? 3

அத்தகு நின்குழந்தை - நான்
ஆதலின், ஆசையுடன் - உன்பேர்
எத்தனை யோதடவை — சொல்லி
இன்புற் றிடுவனம்மா! 4

## 83. உண்மை உணர்கிறேன்!

உடுக்கணம்என் உள்ளொளிரும்
உண்மையுணர் கின்றேன்!
தடுக்கரிய வேகமிகு
தண்புனல்வெள் ளம்போல்
படித்தலம் அனைத்துமெனுள்
பாய்ந்து புரண் டோடும்!
உடற்பொழிலில் நன்மணம்
உறைந்தமலர் உண்டே! 1

நீர்நிலம் இரண்டின்,இள
மை,நிறம் அனைத்தும்,
ஆர்வமொடு சேர்ந்தென்இத
யத்தின்மிசை யாழ்ந்து,
காரகில் நறும்புகைய
தாயெழில் கனன்று,
நேர்நிகரி லாதமண
மாய்நிறைய வீசும்! 2

வையக முறங்குகையில்
உன்னறையின் வாயில்
ஐயமொடு யான்வருகி
றேன்;உடுவி னங்கள்
வெய்யபெரு மோனமிசை
மேவின; இசைக்கத்
தைரியமில் லாதுதமி
யேன்,தனிய நின்றேன்! 3

பொங்கியெழும் ஆர்வமொடு
        நன்குகவ னித்தேன்;
கங்குலின் உயர்ந்தபெரு
        மாடியின் முகப்பில்
நின்கரிய நீழலுரு
        நின்றுசெலக் கண்டு,
பொங்குபுள கத்தொடு
        திரும்பிமனை போந்தேன்! 4

பின்புமறு நாளுதய
        வேளையினிற் பேதை,
தன்வழியிற் பாடியொரு
        வீதிவழி சார்ந்தேன்;
நன்குபடர் வேலிவளர்
        நன்மலர்கள், என்பால்,
பொன்மொழிகள் பேச,அதைக்
        கேட்டன பூங்காற்று! 5

தெருவழிசெல் வோர்,உடன்
        திரும்பியெனை நோக்கிப்
பருகுவிழி யோடுகவ
        னித்தனர்;அப் பார்வை,
உரியஅவர் பேர்சொலி
        அழைத்தனன்என உன்னும்
பெரியதொரு கேள்வியை
        எழுப்பி,அது பெயரும்! 6

## வேறு

ஓங்குநின் மனோ ரதத்தை
உற்றுநான் ஆழ்ந்து காணும்
பாங்கில், உன் வாயில் காக்கும்
பாக்கியம் அருளாய்; அன்பு
தாங்குநின் அழைப்பால், யாரும்
தகர்க்கொணு ஆணை யால், நின்
தீங்ககல் உலகைச் சுற்றித்
திரிந்திட அநும திப்பாய்! 7

தளர்ச்சியில் சோர்ந்து வீழ்ந்து
தமியனேன் மடிந்தி டாதும்,
வளர்ச்சியில் மிடிபுகுந்தென்
வாழ்க்கையே சிதைந்தி டாதும்,
அளப்பரும் துயரால், தன்னம்
பிக்கையே அழிந்தி டாதும்
விலக்கரும் ஆற்றல் த்ந்து
காத்தருள் வெற்றி வேந்தே! 8

பலபொருள் சேர்க்க நாளும்
பலவழி யலைந்தி டாதும்,
பலர்அர சாட்சி யின்கீழ்
பயந்தடி மைப்ப டாதும்,
அலகிலாய்! உனது சொந்த
அடிமைநான் என்ப தாலே
தலைக்கனம் ஏறி டாதும்,
தயைசுரந் தமைதி நல்காய்! 9

# 84. இறைவனின் கோபம்!

அங்குவெகு தொலைவினிலே, மரணப் போரின்
அமளிகள்கேட் கிறதன்றோ? ஆமாம்! அஃது,
பொங்குதழல் வெள்ளத்தின் நடுவே, நஞ்சு
பொதிந்தகரு முகிற்குமுறற் கிடையே, அந்த
மங்கியமா லுமிகதறும் குரல்தான் அஃது!
''வருகவிரைந் தே,கப்பல் தனைத் திருப்பித்
தங்குபெய ரற்றகடற் கரைப்பக் கத்தே''
சாற்றுகின்றான் நாவாயின் சார திக்கே! 1

ஏனெனில்,அத் துறைமுகத்தில் தங்கும் வேளை
எப்பொழுதோ, கழிந்துவிட்ட தன்றோ? அங்கு
தான்,பழைய பொருட்கள்தமை மீண்டும், மீண்டும்
தனிவிலைக்கு வாங்கிவிற்று வருவ துண்டே!
ஏனெனக்கேட் பாரற்றுச் சத்த னைத்தும்
இற்றொழிந்து செத்தபொருள் எல்லாம் அந்தோ,
மீனினங்கள் துரத்த,அலை வீசி எற்ற,
விதிர்விதிர்த்து மிதந்துவரும் காட்சி யைப்பார்!
2

திடுமென்று பயத்தாற்கண் விழித்தோர், கப்பற்
சேவகர்பால், 'நாழியென்ன? பொழுதெப் போது
விடியும்?'' என வினவுகின்றார்! யாரே கண்டார்?
விண்மீன்கள் தமையேமூ டிற்றோ மேகம்?
சுடர்அருணோ தயத்திசையை உணர்த்திக் காட்டும்
சுட்டுவிரல் தனையும்அங்கு காண்பார் உண்டோ?
விடையின்றிப் பெருமோனத் துடுப்புத் தள்ள
விரைகின்றார் படகோட்டும் வீர ரெல்லாம்! 3

இடிமின்னற் குமுறலுடன் புயல்கள் சீறி
எழுந்தெங்கும் சுழற்றின்,ஆம், நடு நடுங்கி
உடல்கள்பல வீழ்ந்ததலை கடல்வெள் ளத்தே!
உருகித்தாய் பிரார்த்திக்க, மனையா ரெல்லாம்
கடலலைபோற் புரண்டழுத புலம்பல், விண்ணைக்
கலக்கிற்று! ஆங்கிருளில், ''கப்பல் ஓட்டும்
திடமுடையீர், விரைந்திங்கு வருக, காலம்
தீர்ந்த''தென மாலுமியும் செப்பு கின்றான்! 4

படகோட்டும் தோழர்களே, உங்கள் ஆத்மா
பலம்பெற்று மிளிரட்டும்! படும்துன் பத்தால்
திடமாய்நன் நிலைபெறுவீர்! ஆனால், யார்மேல்
செப்புகின்றீர் குற்றங்கள்? அகந்தை வேண்டாம்;
படுபாவம் புரிந்தவர்நாம் எல்லோ ருந்தான்!
பலயுகங்க ளாய்,அதனைப் பார்த்துப் பார்த்து,
உடைந்துமனம் கொதித்ததனால், இறைவன் கோபம்
ஊழித்தீ வெள்ளமெனப் பொங்கக் கண்டோம்!
5

கோழையரின் பலவீனம், பலம் மிகுந்த
கொடியவரின் இறுமாப்பு, கொழுத்த செல்வப்
பேழையரின் பேராசை, நசுக்கப் பட்ட
பேதையரின் குரோதங்கள், சாதி பேசித்
தாழ்வுசெயும் உன்மத்தம், ஒன்றுக் கொன்று
சண்டையிடும் கொடுமனிதத் தன்மை யெல்லாம்,
மேலெழுந்தாங் கிறைவனையே தாக்க,சாந்தி
வெள்ளமந்தோ, பெரும்புயலாய் வெடித்த தம்
மா! 6

இடியட்டும் மடமடென விண்ணும் மண்ணும்!
எழும்பட்டும் கொடும்புயல்தம் உளம் வெடித்துப்
பொடியெட்டுத் திசையெட்டச் சிதறு மட்டும்!
புலம்பட்டும் கொடியவர்கள் அகந்தை செத்து
மடியட்டும் தனிவரட்டுப் பெருமை யோடு!
மகிழட்டும் அறச்செல்வி! மௌனத்தோடு
முடியைத்தாள் தனிலிட்டு வணங்கி விட்டு,
முன்செலுத்து தோணியைநீ: முற்றும் நன்றே! 7

தீவினையின் பயன்களையாம் நாளும் கண்முன்
தெரிந்துள்ளோம்! கொடுந்துயரத் தீயில் வாட்டும்
சாவினையும் இன்றுகண்டோம்! நொடியில் தோன்றிச்
சாகுமின்னற் சிரிப்புடனே தளிர்மே கங்கள்,
பூவினிடைப் பரவியெங்கும் பொலியக் கண்டு
பூரித்தோம்; ஆனால்,அப் பொலிவு நீங்கிக்
கோபவெறி யாய்ச்சீறிப் புயல்போற் பொங்கிக்
கொடுமழையாய்க் கொட்டுமெனக் கண்டார் யாரே? 8

பேரியற்கைத் தாயே!நின் சீற்றம் மாற்றும்
பெற்றியர்யார்? எதைநின்முன் பேச வல்லோம்?
பார்முழுதும் நொடிப்பொழுதில் விழுங்க வந்த
பயங்கரத்தின் பேருருவே! பற்றி உன்னைத்
திரமுடன் நன்கடக்கி வெற்றி கொண்டே,
செழிப்பொடிது வரைதிகழ்ந்தோம்; தீமை யற்ற
கோரமிலா நல்லியல்பே நின்பால் என்றும்
குலவுமென நம்பிமன மகிழ்ந்து வாழ்ந்தோம்! 9

அழிவென்னும் மரணத்துள், அழியாத் தன்மை
அமைவதுண்டோ? துன்பமெனும் திரை கிழித்து
ஒளிஞான இன்பமலர் உதிப்ப துண்டோ?
உற்றகொடு வினை, தன்னை உலகம் காண
வெளியிட்டு மடிந்திடுமா? அலங்கா ரத்தின்
வீண்சுமையால் உடைந்திடம்பம் தகர்வ துண்
டோ?

இலையிவைகள் எனில், மனிதர் முன் நம்பிக்கை
ஏன்பிறந்து மரணத்திற் கிழுத்துச் செல்லும்? 10

எண்ணிறந்த தியாகியரின் இரத்த வெள்ளம்,
இன்கருணைத் தாய்மாரின் துன்பக் கண்ணீர்,
விண்ணகத்தை யேவிலைக்கு வாங்கும் சக்தி
வீறுபெற்று விடவில்லையோ? வீணாய் இந்த
மண்ணகத்தே பயனற்று மடியும்? இல்லை!
மாந்தர்கள், தம் மரணபந்தம் கடந்த போதே,
தண்ணகத்தான் அகண்டபரஞ் சோதி, இன்பத்
தரிசனத்தேன் பொழிவதற்குத் தடையங் குண்
டோ? 11

# 85. தோல்விப் பெண்!

தெருவில்யான் நின்ற போதென்
 தெய்விகத் தலைவன் ஆணை
பிறந்தது, தோல்விப் பெண்ணின்
 பெருமையைப் பாடு கென்றே!
இருள்முக மூடி யோடு
 ஏந்திழை தோற்று கின்றாள்!
அரியவன் அந்த ரங்கக்
 காதல்,அன் னவள்மீ தன்றோ? 1

கூட்டத்துள் மறைந்து கொண்டாள்;
 குளிர்முகம் தெரியா வண்ணம்
வாட்டுமை யிருளி லும்,அம்
 மங்கையின் மார்ப கத்தே
பூட்டிய மாணிக் கத்தின்
 பொன்னொளி மின்னு தந்தோ!
நீட்டிய பகற்போ தன்னுள்
 நினைவு,அவர்க் கெழுவ தில்லை! 2

கங்குல்வந் துற்ற போது
 கடிமண மலர்க ளோடு
பொங்கொளி விளக்குத் தாங்கிப்
 பூவையின் வரவுக் காக,
இங்குகாத் திருக்கின் றான்,என்
 இறைவன்;அன் னவளோ, கீழே
கண்களைத் தாழ்த்திக் கொண்டே
 கடுமௌனம் சாதிக் கின்றாள்! 3

வெளியேறி வந்த பின், தம்
    வீட்டினி லிருந்து வந்த
தெளிவற்ற புலம்பல் தன்னைச்
    செவிமடுத் திட்டாள் நங்கை!
கலக்கிடும் துக்கம், வெட்கம்,
    களிப்பெனும் கடலில் மூழ்கி,
மலர்ந்ததோர் இளந கைத்தேன்
    மண்டிய எழில் முகம்தான்! 4

இனியஅம் முகத்தை நோக்கி
    எழில்மணிச் சுடர்க ளெல்லாம்,
புனிதநற் காதற் கீதம்
    பொழிந்தன; பூமான் சொந்த
மணங்கமழ் அறை திறந்து
    மலர்ந்தது; புகுந்தான்; ஆங்கோர்
இனந்தெரி யாத இன்பத்
    துடிப்பினை எய்திற் றுள்ளம்!

## 86. அருள் புரிக!

நடக்கும் பொழுதே, சிற்றுயிர்கள்
நசுங்கப் பச்சைப் பசும்பயிர்கள்
துடிக்க, இரத்த வெறியாலே
துடுக்காய் மிதித்துச் செல்பவர்கள்,
வெடுக்கென் றடித்துப் பிறர்பொருளை
விழுங்கும் கொடிய வெறியர்,இவர்
*படிக்குள் நன்றிக் கடனுக்கே
படைத்தி டட்டும் பரம்பொருளே! 1

நாளும் கிடைத்த செல்வாக்கை
நன்கு செலுத்திச் சுயநலத்தால்
வாழும் 'உயர்ந்த மனிதரிவர்!'
வள்ளால்! அவர்தம் அதிகாரப்
பாழும் சுமையைச் சுமந்தின்னற்
பட்டுத் தவித்து முகமறைத்து
ஆழும் இருளில் மனத்துடிப்பை
அடக்கிக் கிடக்கும் அபலையன்யான்! 2

ஆழ்ந்த உனது நள்ளிரவின்
அந்த ரங்க நினைவினிலே,
மாந்தர் இவர்தம் குறைகளெல்லாம்
வருத்தித் தொடர்ந்தே வந்திருக்கும்!
சாந்த மிகுநின் மோனத்தே
சகத்தின் துயரத் துடிப்பனைத்தும்
ஆழ்ந்து பதிந்து கலந்திருக்கும்
அன்றோ? அவர்கட் கருள்புரிக! 3

* உலகம்

உதயப் பொழுதில் மலர்களுடன்
    உதிப்போய்! கொடியர் உதிரம்தோய்
இதயக் கிடங்கில் ஒளிக்கனலை
    எறிக, காலை இளம்பரிதீ!
கதிரைச் சொரிக, அவரகந்தை
    கட்டோ டொழிந்து கடைத்தேற!
எதிர்நற் கால மேனும்,அவர்க்
    கினிதா கட்டும், இசைந்தருள்க! 4

# முடிவுரை

தாகூரின் 'தீங்கனிச் சோலையில்' புகுந்து இன்பம் என்றால் என்ன, துன்பம் என்றால் என்ன, அன்பு என்றால் என்ன, ஹிம்சையைத் தாண்டி அஹிம்சையில் இதயத்தைச் செலுத்தி இறைவன் அருளை எப்படியெல்லாம் அடையலாம்; கலகத்தை அகற்றியே உலகத்தை எப்படி இன்பச் சிகரத்தில் நிலைநிறுத்தலாம்; வேந்தனின் கோபம் தபசியின் முன் தவிடு பொடியாகி விடுவதும் இயல்பு, — என்பதையெல்லாம் அருமையாக, மிக ஆழமாகவே உணர்ந்து விட்டோமல்லவா?

இதையே பூதத்தாழ்வார் அருமையாகப் பாடியிருக்கிறார்:

''அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா — நன்புருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்.''

நமது திருவள்ளுவர் செய்திருக்கும் திருக்குறள், நமக்கு, வாழ்க்கையில் ஒரு சிறந்த வழிகாட்டியல்லவா? அடியில் கண்ட ஏழு திருக்குறட்பா மணிகளைப் படித்தால், நமது மனம் அருமையாக நிம்மதி யடையுமல்லவா?

1. ''அன்பின் வழியது உயிர்நிலை அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு''

2. ‘‘அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல்
இழுக்கா வியன்றது அறம்’’ (நான்கும்

3. ‘‘இனிய உளவாக இன்னுத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று’’

4. ‘‘தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வீயாது அடியுறைந் தற்று’’

5. ‘‘யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு’’

6. ‘‘சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும், துன்பம்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு’’

7. ‘‘வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானு
தெய்வத்துள் வைக்கப் படும்’’ (றையும்

உலக உண்மைகள் எல்லாம், வள்ளுவர் வாக்கில் மின்னலிடவில்லையா? வள்ளுவரின் வேதவாக்கு நமக்கு ஒரு சிறந்த தூரதிருஷ்டிக் கண்ணுடியாகவே அமைந்திருக்கிறது: சகல துரதிர்ஷ்டங்களையும் அகற்றும் பேராற்றல் படைத்த திருக்குறளை, நம்மால் மறக்க முடியுமா, என்ன?

தாகூரின் கருத்தைப் பாருங்கள்: தீங்கனிச் சோலையில் பாடல் [33] ''நானும் நீயும்''

'மக்கள் தொழத் தக்கதொரு விக்ரகம், என்
வாழ்வினின்றும் வடித்தெடுக்க முடியுமோ?'
[வென்(று)
உட்குவிந்த சிந்தனையுட் புகுந்தேன்; ஆங்கென்
உருக்குலைந்த கனவுகள், பேராசை, துன்பம்,
மக்கிமடிந் திட்டபல ஏமாற் றங்கள்,
மாசுகள், வெந் தூசியெலாம், வரிசையாய், நான்
தூக்கமுடன் வெட்கிமனம் சோர்ந்து விழத்
தொடர்ந்தெழுந்த தையோ, என்சொல்வேன்
அஃதை!

'நீ விரும்பும் படி, எளியேன் வாழ்வி னின்றும்
நின்னிதயத் துடிப்பை யொட்டி நிகரில் லாவோர்
ஓவியம்நீ தருக'வென உனை விழைந்தேன்,
ஒப்பில்லாய்! அற்புதநின் உயிர் துடிக்க
ஜீவகளை ததும்ப, அருட்கனல்தேன் சிந்த,
தெய்வீக எழில் தவழ, அமைதி கொஞ்சப்
பூவுலகு தொழும் சித்ரக் காவி யம்மே
புனைந்தளித்தாய், நின்பெருமை புகலற் பாற்றே?'

தாகூரின் கருத்து, எவ்வளவு ஆழமாக, எவ்வளவு அருமையாக அமைந்திருக்கிறது, பார்த்தீர்களா? நமது கவிஞர் பரமஹம்ஸ தாசன், எவ்வளவு நுட்பமாக ஆழ்ந்த கருத்தின் கவிதைக் கோலத்தை எடுத்து விளக்கியிருக்கிறார்கள். தாகூரின் இதயக் கமலத்திலே சுடர்கின்ற உலக இரகசியங்களையெல்லாம், மூல மொழியின் வனப்புடன்,

நமது கவிஞர் அருமையாகச் சித்தரித்துக் காட்டும் போது, நாம் அளவுக்கு மிஞ்சி இன்ப மடைகிறோம்: கவிஞனின் இதயக் குதூகலம், நமது தாய்மொழி யானஇன்பத்தமிழில்மூழ்கிவெளிவரும்போது,நமது இதயம் இன்ப வெறியில் நடனமாடுகிறதல்லவா?

நண்பர், கவிஞர் பரமஹம்ஸதாசனின் கவிதைகள் அனைத்தும் அருமையான பாடல்கள்தான். தமிழன் நெஞ்சில் தாண்டவமாடும் தெய்வத் தமிழே, நமது கவிஞரின் உள்ளத்திலே அபூர்வமாக நாதமிடுகிறது. இனிய எளிய தமிழ்ச் சொற்கள், உலகின் உள்ளத்திலே ஊசலாடி, இறைவன் நெஞ்சை இசைமயமாகத் தொட்டுத் திருப்பும்போது, நாம் அகமகிழ்கின்றோ மல்லவா?

காரைக்குடி, V. R. M. செட்டியார், B. A.
10–11–62.

## CRITICAL APPRECIATION

God's creative scheme is so pure and comprehensive and flawless that He ardently awaits man's growing perfection of soul, when warring and jarring elements disturbe and corrupt the human harmoney of peace and prosperity. God is impartial, and condemns the partiality and prejudices of man; greed is heirous and homicidal and heartless, and as such, it should be radically crushed, so that conscience and justice may thrive and flourish in this wretched world of tumult, diplomacy and chaos. God sincerely embraces, and heals his sincere disciples' spiritual bruises, assuring them of His divine protection and peace. Tagore's poetry promises such a redeeming efficacy, and Sri *Paramahamsa Dasan* has made a transparent poetic rendering in Tamil which is simply magni ficent, as a marvel of lyric ecstasy.

*V. R. M. Chettiar. B. A.*
10-11-62.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 27 | 10 | கவிஞுர் | கவிஞர் |
| 28 | 21 | தேடியவை | தேடியது |
| 29 | 8 | கொள்கிறேன் | கொள்கின்றேன் |
| 31 | 20 | நடந்தடி | நடந்ததடி |
| 35 | 11 | பொன்னெழில் | பொன்னெழிற் |
| 44 | 18 | ஜோதி | ஜோதி |
| 48 | 5 | தெனில் | தென்னில் |
| 54 | 24 | வாயநீ | வாய்நீ |
| 60 | 6 | தூசியெலாம | தூசியெலாம் |
| 62 | 24 | என்ருன் | என்ருர் |
| 63 | 1 | திக்கும் | திக்கிலும் |
| ,, | 10 | காணீரோ | காணிரோ |
| 70 | 11 | ழுந்தார் | ழுந்தார் |
| ,, | 20 | அன்ஞள்! | அன்ஞள், |
| 72 | 12 | நெளியும் | நெளீயும் |
| 74 | 19 | தீவர்த்தி | வர்த்தி |
| 84 | 11 | மலர்வ | மலர்க |
| 90 | 20 | போத்தத் | போர்த்தத் |
| 91 | 1 | நானவன்பால் | நானவள்பால் |
| 101 | 23 | சீதளப்புன்ன | சீதளப்புன் |
| 106 | 7 | சௌந்தரீய | சௌந்தர்ய |
| 111 | 3 | மனத்துகளே! | மணத்துகளே! |
| 114 | 5 | திடுமனம் | திடுமணம் |
| ,, | 13 | பொழியும் | பொலியும் |
| 115 | 2 | மனமே | மணமே |
| ,, | 8 | மிகுத்த | மிகுந்த |
| 122 | 9 | துணேச்ச | துணிச்ச |
| 123 | 13 | வேலேகளில் | வேலிகளில் |
| 129 | 3 | கண்ணக் | கண்ணேக் |
| ,, | 4 | கருத்தலேகள் | களிப்பலேகள் |
| 135 | 10 | முடங்கிவா | முடங்கியவா |
| 145 | 22 | அழைத்தனன் | அழைத்தன் |
| 148 | 2 | சுழற்றின் | சுழற்றின |
| 150 | 5 | மடிந்திடுமா? | மடிந்திடுமோ? |
| ,, | 12 | விடவில்லேயோ | விடவிலேயோ |
| 151 | 23 | தாழ்த்திக | தாழ்த்திக் |